


KALKI 4.10.92 ரூ 3.00
கல்கி
நவராத்திரி
வாசகர்
கேள்வி-பதில்


GARNIER
PARIS
LABORATOIRES
"என் கேசத்தை உண்மையிலே மிருதுவாக்க நான் உபயோகிப்பது மிகவும் மென்மையான ஒன்றையே"
உல்ட்ரா டு கண்டிஷனிங் ஷேம்பூ, தாவரங்களின் இயற்கை சாற்றிலே தயாரிக்கப்பட்டது.
லேபொரட்டாயர்ஸ் கார்னியர் பாரிஸ், பிரெஞ்சு நாட்டின் நம்பர் 1 கேசப்பராமரிப்பு கம்பெனியாக விளங்கும் நிறுவனத்தினால் படைக்கப்பட்டு உத்திரவாதம் பெற்ற உல்ட்ரா டு-வின் மென்மையான ஃபார்முலாவில் கீழ் குறிப்பிட்டவை அடங்கியுள்ளன.
வறண்ட கூந்தலுக்கு வீட்ஜெர்ம் எண்ணெய்
வைட்டமின்கள் பி & ஈ செறிந்த இது உலர்ந்த கேசத்தை மிருதுவாக்கி, பளபளக்கச் செய்து நன்கு படியும் தன்மையை அளிக்கிறது.
சாதாரண கூந்தலுக்கு லைம் ப்ளாஸம்
மருத்துவ மற்றும் அழகு சாதனங்கள் தயாரிப்பில் உபயோகமாகும் லைம் ப்ளாஸம் மிருதுவாக்கும் ஆக்கக் கூறுகளுக்குப் புகழ் பெற்றது.
எண்ணெய் பசையுள்ள கூந்தலுக்கு ஸேஜ் சாறு
கட்டுப்படுத்தும் ஆக்கக்கூறுகளின் வளத்தினைக் கொண்ட இது எண்ணெய் பசையுள்ள கூந்தலைத் திறம்பட சுத்தம் செய்து, இலேசாக்கி, முழுமையை அளிக்கிறது.
Ultra DOUX
LABORATOIRES GARNIER
கேசப்பராமரிப்பில் பிரெஞ்சு நாட்டின் நம். 1
SPEERA 92 TM

***அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி யன்று கன்னியாகுமரியிலிருந்து, காந்திஜி யின் 123 வது பிறந்த நாளைக் குறிக்கும்வித மாக 123 தொண்டர்களுடன், சென்னைக் குப் பாதயாத்திரை துவங்குகிறார் குமரி அனந்தன். இப்போதைய நிலையில் பாத யாத்திரைக்கு அவசியம்? அவரே விளக்கு கிறார்.***

● *ஏன் இந்தப் பாதயாத்திரை?*

***அனந்தன் :*** காங்கிரஸ் தமிழகத்தில் ஆட்சியை இழந்து ஒரு வெள்ளி விழா காலம் ஆகிறது. தமிழகத்தில் தேசியம் வெற்றி பெறாமல் இருப்பது மனத்திற்கு வேதனை அளிக்கிறது. தமிழகத்தில் காங் கிரஸ் எழுச்சி பெற, எனது பாதயாத்திரை பயன்படட்டும். இந்தப் பாதயாத்திரைக்கு மற்றொரு காரணமும் உண்டு. அது ஆத் மார்த்தமானது. தேசநலன் கருதி நான் கடந்த காலத்தில் எடுத்த அரசியல் முடிவுகள் பெரும்பாலானவை சரியானவையே. ஆனால் ஓரிரு முடிவுகள் மனத்திற்கு உகந் தவையாக இல்லை. இதனால் பல துன் பங்கள் விளைந்திருக்கக்கூடும். இந்த வய தில் 1000 கி.மீ. நடப்பதானது நான் செய்த சில தவறுகளுக்கு, ஒரு பிராயச்சித்தமாக அமைந்து, மனஅமைதி கொடுக்கும் என்ற நம்பிக்கையும் உண்டு.

● *நடந்து வரும் கோஷ்டி மோதலில், மூப்பனார் கரத்தை வலுப்படுத்துவதற்கா கவே தாங்கள் பயணம் மேற்கொள்வதாக மாற்றுக் கோஷ்டியினர் சொல்வது பற்றி?*

***அனந்தன் :*** நான் சட்டமன்றத்தில் காங் கிரஸ் துணைத் தலைவராக இருந்தபோதும், சரி, அதற்குப் பின்பும் சரி, தமிழக காங் கிரஸில் ஒற்றுமை நிலவ வேண்டும் என் பதற்காகவும், தலைவர்கள் கருத்தொரு மித்து செயல்பட வேண்டுமென்பதற்காக வும் நிறையவே பாடுபட்டுள்ளேன். காங் கிரஸ் நலத்தை விரும்பிச் செயல்பட்டிருக் கிறேனே தவிர, தலைவர் களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு களைப் பிரதிபலிப்பவன் அல்ல நான்.

ஊழியர்கள், 'காங்கிரஸ் மீண்டும் வலிமை பெறாதா' என்று ஏங்கிக் கொண் டிருக்கிறார்கள். பொது மக்களோ 'இந்த காங்கிரஸ்காரர்கள் தங்களைச் செம்மைப் படுத்திக் கொண்டு, செங்கோல் ஏந்த மாட் டார்களா என்று ஏங்குகிறார்கள். என்னு டைய எழுச்சிப் பயணத்தால் எல்லா வகை யிலும் நல்ல சூழ்நிலை திரும்பும் என்று நினைக்கிறேன். எங்கள் பாதயாத்திரையை மூப்பனார் அவர்கள் பெருமையாக நினைத்து, செல்லுமிடமெல்லாம் சொல் லிக் கொண்டிருக்கிறார், என்பது எங்களுக்கு உற்சாகம் தரும் ஒன்று.

● *காங்கிரஸில் ஒற்றுமை இருந்தால் தானே மக்கள் அதனை நம்புவார்கள்?*

***அனந்தன் :*** காங்கிரஸில் கோஷ்டி மோதல்கள், கருத்து வேறுபாடு என்பது சுதந்திரப் போராட்ட காலத்திலேயே இருந் தது. ஆனால் அன்று எல்லோருடைய லட்சி யமும் விடுதலையை நோக்கி இருந்தது. இன்றும் கருத்து வேறுபாடுகள் இருந்தா லும் காங்கிரஸ் ஆட்சி மீண்டும் தமிழகத்தில் மலர வேண்டும் என்ற நோக்கம் ஒன்றாக இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டு மென்றால் ராஜீவின் ரத்தம் தோழமை கட்சி யால், மதிக்கப்படாமல், மதுரையில் மிதிக் கப்பட்டதால், தன்மானம் உள்ள காங்கிரஸ் காரர்களின் உணர்வுகள் தட்டி விடப்பட்டுள் ளன. இந்தச் சூழலில் நல்லது நடக்கவே நாங்கள் நடக்கிறோம்.

● *பாதயாத்திரையின் போது மேற் கொள்ளப்படும் பிரசாரம் எப்படி இருக் கும்?*

***அனந்தன் :*** ஆன்மிகம் கலந்த, ஆக்க பூர்வமான, ஆரோக்கிய சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக இருக்கும். காமராஜ் ஆட்சி எப்படி இருந்தது என்பதைச் சொல்லு வோம். மந்திரிகள் அப்போது எவ்வளவு எளிமையாக இருந்தார்கள் வாழ்ந்தார்கள் என்று விளக்குவோம். அக் காலத்தையும், தற்காலத்தையும் ஒப்பிட்டு நோக்கி, மீண் டும் காங்கிரஸ் ஆட்சியை மலர வைப்பது மக்கள் கடமை என்பதை உணர்த்துவோம்.

– ப்ரியன்



# "நல்லது நடக்கவே நாங்கள் நடக்கிறோம்!"



★ நிருபமாவுடன் அருணா

**பம்பாய்க் கடிதம் :**

# ஹர்ஷத் மேத்தாவுக்கு ஆதரவாக கோஷங்கள்!

● பாங்கு மார்க்கெட் ஊழல் விசாரணை, போஃபர்ஸ் வழியில் செல்லுமோ என்ற ஐயம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. இங்கு எல்லோராலும் கேட்கப்படும் கேள்விகள் :

i) குற்றம் சாட்டப்பட்டவர்கள் நூறு பேர்களுக்கு மேல் இருக்கையில் ஹர்ஷத் மேத்தாவிற்கு மட்டும் பெயில் மறுக்கப் பட்டது ஏன்?

ii) சிறந்ததாகக் கருதப்படும் ஒரு துப்பறியும் நிறுவனம் நூறு நாட்களுக்கு மேல் ஒருவரை விசாரிக்க வேண்டிய அவசியம் என்ன?

iii) இதுவரை ஓர் அரசியல்வாதி மீது கூட சந்தேகம் எழாதது ஏன்?

சென்ற வாரம் ஹர்ஷத் மேத்தாவை விசாரணை அறையிலிருந்து கோர்ட்டிற்கு அழைத்துச் செல்ல லிப்ட்டை பயன்படுத்தினர். ஐந்து பேர் மட்டுமே செல்லக் கூடிய லிப்ட்டில் ஹர்ஷத் மேத்தாவுடன் ஆறு அதிகாரிகளும் ஏறிக் கொண்டு விட்டனர். லிப்ட் இயக்குபவரையும் சேர்த்து எட்டு பேர் ஆனதால், கனம் தாங்காமல் லிப்ட் உட்கார்ந்து விட்டது. சில நிமிடங்களுக்குக் கதவையும் திறக்க முடியவில்லை. ஹர்ஷத்மேத்தா அங்கு இருக்கும் செய்தி காட்டுத் தீ போல் பரவியது. லிப்ட் சரியானபின் வெளிவந்த ஹர்ஷத் மேத்தாவை 'ஹர்ஷத் மேத்தா ஜிந்தாபாத்' என்ற கோஷத்துடன் மக்கள் வரவேற்றனர்!

● பெரும்பாலான மஹாராஷ்டிரா காங்கிரஸ் கட்சியினரால் ஓரங்கட்டப்படுபவர் முன்னாள் எம்.எல்.ஏ. சந்திரசேகர் பிரபு. காரணம் : இன்றைய அரசியல் வாதிகளிடம் பொதுவாகக் காணப்படும் குண நலன்கள் (!) இவரிடம் இல்லாததுதான். ஐந்து வருடங்கள் எம்.எல்.ஏ. ஆக இருந்தும் இவர் இன்று வசிப்பது ஜனநெருக்கடி மிகுந்த மத்திய பம்பாயின் ஒரு குடிசையிலேயே. அதிகாரிகளுக்கும், மற்றும் பலருக்கும் சர்க்கார் நிலம் வழங்குவதைக் கடுமையாக எதிர்த்து வரும் இவர், பம்பாயில் பல நில ஆக்கிரமிப்புகளைத் தடுத்திருக்கிறார். பாமர மக்கள் அனைவரும் இவரையே எதற்கும் நாடுகின்றனர். ஆக, இவர் அரசியல் வாதிகளிடையே 'அன்பாபுலர்' ஆகக் கேட்பாரோஸ்!

● நான்கு வயதுச் சிறுவர், சிறுமியர் என்னென்ன கற்க முடியும்? முறையாகக் கற்பித்தால், நான்கு மொழிகளில் எழுதவும் படிக்கவும், ஓர் இசைக் கருவியை நன்கு இசைக்கவும், கதைகள் எழுதவும், 20 ராகங்களைக் கண்டுபிடிக்கவும் ஒரு சராசரி நான்கு வயதுச் சிறுவன் அல்லது சிறுமியால் முடியும் என்று கூறுகிறார் பம்பாயைச் சேர்ந்த திருமதி அருணா ராகவன். தற்காலக் கல்வி முறையில் வெறுப்புற்ற இவர், டோமான் (Doman) என்னும் அமெரிக்கரால் ஆரம்பிக்கப்பட்ட கல்வி முறையை நம் இந்தியச் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றி அமைத்துத் தனது $4^1/_2$ வயதுப் பெண் நிருபமாவிற்கு மேற்கூறிய எல்லாம் கற்றுக் கொடுத்திருக்கிறார். கூடிய சீக்கிரத்தில் பம்பாய்க்கு அருகிலுள்ள இக்கத்புரியில் ஒரு பள்ளியை அமைத்து, இவ்வழியில் கல்வி கற்பிக்கவிருக்கிறார் இந்தப் பெண்மணி!



● கடந்த 57 வருடங்களாகத் தபால் தலைகள் சேகரித்து வருகிறார் ஃபாமி ஜில்லா. உலக அரங்கில், தபால் தலை சேகரிப்புச் சம்பந்தமான பல போட்டிகளில் இந்தியர்கள் பரிசு பெற்று வந்துள்ளதைப் பெருமை பொங்கக் குறிப்பிடுகிறார். "இந்தியாவில் தபால்தலை சேகரிப்பதில் ஏதாவது சிரமம் உண்டா?" என்ற கேள்விக்கு, "ஒரே ஒரு கஷ்டம்தான். பிரிட்டனில் வருஷத்துக்கு அதிகபட்சம் இருபது புது தபால் தலைகளுக்கு மேல் வெளியிடுவதில்லை. இந்தியாவிலோ சென்ற வருடம் மட்டும் 55 புது தபால் தலைகள் வெளியிடப்பட்டன. அரசு, ஏதாவது ஒரு சாக்கு கண்டுபிடித்து அடிக்கடி புதுப் புது தபால் தலைகள் வெளியிட்டு வருவதால் தபால் தலைக்கு மவுசு குறைந்து போய் விடுகிறது" என்றார்.

– அம்ருதா பார்த்தசாரதி

# 'சூப்பர் கம்ப்யூட்டர் சூப்பர் ஸ்டார் மாதிரி!'

சென்னை பார்க் ஷெராடன் ஓட்டலின் கீழ்த் தளத்திலும் மேல் தளத்திலுமாக, மூன்று நாட்கள் நடந்த நவீன கம்ப்யூட்டர் கண்காட்சிக்குப் போய்விட்டு வந்தவர்கள் எல்லாருக்கும், பிரமிப்பு அடங்கக் கொஞ்ச நாள் ஆகலாம்.

கம்ப்யூட்டரில் எத்தனை வகைகள் உண்டோ, அத்தனையும் அங்கே கொண்டு வந்து அசத்தி விட்டார்கள்.

விஞ்ஞானிகளுக்கும், இஞ்சினியர்களுக்கும் தேவைப்படுகிற அளவுக்கு, பல முனைகளில் குட்டி கம்ப்யூட்டர்கள் இயங்கி, இவை எல்லாமே தானாகப் பகுத்துச் செயல்பட்டு, பிறகு மெயின் கம்ப்யூட்டர் வழியாக முடிவுகளைத் தரும் பெரிய அளவிலான கம்ப்யூட்டர்களின் அவசியத்தை உணர்ந்து உருவாக்கப்பட்ட சூப்பர் கம்ப்யூட்டர்தான் 'பரம்'. (பாரலல் மெஷின் என்பதன் சுருக்கமே 'பரம்'.)


இந்தியாவில் இத்தனை நுணுக்கமான கம்ப்யூட்டர்களை நம்மாலும் நிச்சயம் தயாரிக்க முடியும் என்று காண்பித்த இரண்டு டஜன்களுக்கு மேற்பட்ட தயாரிப்பாளர்களை அங்கே பார்த்த போது பெருமையாகவும், சந்தோஷமாகவும் இருந்தது.

அதைவிடச் சந்தோஷமாக இருந்தது - சிறப்பு விருந்தினராக வந்திருந்த 'சுஜாதா'வை அங்கே சந்தித்த போது.

''க்ரே - 14 சூப்பர் கம்ப்யூட்டர் தரமாட்டேன் என்று அமெரிக்கா சொன்னால், நாம் ஏன் இனி கூச்சல் போடணும்? 'பரம்' கம்ப்யூட்டர் கண்டுபிடித்த நம் பெங்களூர் விஞ்ஞானிகள், ஒருநாள் அதையும் சாதிக்க மாட்டார்களா?'' என்று கேட்டோம்.

''சூப்பர் கம்ப்யூட்டர் என்றால் ஒரு சூப்பர் ஸ்டார் மாதிரிதான்!'' என்றார் 'சுஜாதா' அவருக்கே உரிய பாணியில்.

● பரம் கம்ப்யூட்டர்கள் - எத்தனை இளைஞர்-இளைஞிகள்!



''கம்ப்யூட்டரை வேணுமானால் தந்துவிடுவார்கள். ஆனால் அதன் அப்ளிகேஷன் நுணுக்கத்தைத் தர மாட்டார்கள். அதில் தான் சிரமம்!'' என்றார்.

''நாமே அந்தத் திறனை அடைய எத்தனை வருடம் ஆகும்?''

''குறைந்தபட்சம் இரண்டு வருடங்களாவது ஆகும்!'' என்றார் சென்டர் ஃபார் அட்வான்ஸ்ட் கம்ப்யூடிங் (ஸி-டாக்) அதிகாரி பெரிய நாயகம்.

**எ**திரே நிற்கிற ஆளை அப்போதே படம் பிடித்து, கீழே இருக்கிற கம்ப்யூட்டர் திரையில் காண்பிக்கும் ஒரு கம்ப்யூட்டரில், அருகே உள்ள கீ போர்டில் இரண்டு தட்டுத் தட்டினால் படம் அப்படியே உறைந்து விடுகிறது. இன்னும் இரண்டு செல்லத் தட்டு, கீ போர்டில். அது அப்படியே சுருங்கி, சிறு பிம்பமாகத் திரையின் வலது கோடிக்குப் போய் ஒதுங்கிக் கொள்ளுகிறது. அடுத்த தட்டில், சரிவாக. அதற்கடுத்த தட்டு நெகடிவ் வடிவத்தில்!

மெடிகல் இமேஜிங் துறையில்; திரைப் படங்களுக்குத் தேவையான சப்-டைட்லிங் பணியில்; லோகல் ஏரியா நெட்வொர்க் அடிப்படையில், கம்ப்யூட்டர் மூலமே தகவல்களை விரைவாகப் பரிமாறிக் கொள்ளும் முறையில் என, கம்ப்யூட்டர்கள்தாம் எத்தனை விதங்களில் கை கொடுக்கின்றன!

**ஸ்ரீ**டெக் கம்ப்யூட்டர்ஸ் ஒரு ஹைதராபாத் நிறுவனம். இவர்கள் உருவாக்கியிருக்கும் ஒரு 'ஸாஃப்ட்வேர்' இந்திய மொழிகள் பலவற்றில் அச்சிட எளிதாக உதவுகிறது. 'கிஸ்ட்' என்று பெயர் இதற்கு. இந்தப் பகுதியைப் பொருத்திவிட்டால் எத்தனை, எத்தனையோ வடிவங்களில் எழுத்துக்களைப் பார்த்துத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். ஆங்கிலம், இந்தி, தவிர இரண்டு இந்திய மொழிகள் இதில் கிடைக்கும்.

''கம்ப்யூட்டர் வந்தால் வேலை வாய்ப்புக்கள் குறையும் என்றார்களே?''


பெரியநாயகம் சொன்னார் : ''முன்பு டைப்ரைட்டர் வந்த போது பயந்தார்கள். ஆனால் எத்தனை ஆயிரக் கணக்கான டைப்பிஸ்ட்டுகளுக்கு வேலை கிடைத்தது! இங்கேயே பாருங்களேன் - எத்தனை பேருக்கு எத்தனை விதங்களில் கம்ப்யூட்டர் ஆர்வத்தை வளர்த்திருக்கிறது. வேலைகளை அது வாரி வழங்குவதால்தானே காண வருகிறார்கள்?''

உண்மைதான்.

இந்தக் கம்ப்யூட்டர் கண்காட்சிக்கு எங்கே கூட்டம் வரப் போகிறது என்று நினைத்ததற்கு மாறாக, நெரிசலான கூட்டம்! எத்தனை மாணவர்கள், எத்தனை இளைஞர்-இளைஞிகள், எத்தனை இளம் தொழிலதிபர்கள்!

- சாருகேசி


படம் : ராமன் பிரதர்ஸ்






- ★ மிக அதிக அளவு
- ★ 408 பக்கங்களுக்கு மேல்
- ★ விலை ரூ. 45/-
- ★ தபால் செலவு ரூ. 6/-

It's really a good book to learn spoken English — Kapil Dev



13 இந்திய மொழிகளில் பிரசுரிக்கப்படுகிறது

பத்திரிகை மற்றும் கல்வியாளர்களால் போற்றப்படுகிறது

4,00,00,000 (4 கோடிகள்) க்கும் மேலான வாசகர்களால் பின்பற்றப்படுகிறது

## அனைத்து காலங்களிலும் வியத்தகு அதிக விற்பனை

# அதிவேக சாதனை

**AVAILABLE AT leading bookshops, Higginbothams Railway Book Stalls throughout India or ask by VPP from:-**

**PUSTAK MAHAL** Khari Baoli, New Delhi - 6. Phone: 239314
*Showroom:* 10-B, Netaji Subhash Marg, New Delhi- 110002. Phone: 3268292
*Branch Office:* 22/2 Mission Road (Shama Rao Compound), Bangalore-560027

**Stockists: MADRAS** — MADRAS BOOK HOUSE, 49 Ranganathan St., T. Nagar • P.T. BELL & CO.; THIRUMALAI BOOK HOUSE, Sunkurama Chetty St. • NEW CENTURY BOOK HOUSE; HIGGINBOTHAM'S, Anna Salai • KENNADY BOOK HOUSE, Mt. Road • VIJAYA STORE; RAVI BOOK HOUSE, Mylapore ARUNA BOOK MART, W. Mambalam • MELODY BOOK CENTRE; PURSAI BOOK CENTRE, Purasawalkam



கவலைக்குரிய காரணம்

● எஸ். சந்திரசேகரன், பட்டுக்கோட்டை.

*? குடும்பத் தொழிலைத் தொடர்வது பெருமைதான். ஆனால் அவனும் ஒரு கலெக்டராகவோ, மந்திரியாகவோ வர முடியாமல் முடக்குவதே குலக் கல்வித் திட்டத்தின் நோக்கம். இது எப்படி நியாயாகும்? தலையங்கத்தில் அதை ஆதரிக்கிறீர்களே?*

! ''குலக் கல்வித் திட்டம்'' என்பது அன்று ராஜாஜியை எதிர்த்தவர்கள் சூட்டிய பெயரே தவிர, அன்றைய ராஜாஜி மந்திரி சபை வைத்த பெயர் அல்ல. அவரை அனுப்பி விட வேண்டும் என்பதற்காக அவர்கள் இட்டுக் கட்டிய வர்ணனைதான் உங்கள் கேள்வியிலும் இடம்பெற்றுள்ளது. பாரம்பரியக் கலைகளிலும் தொழில்களிலும் பெருமை கொள்ளச் செய்யும்போதே, அம் மாணவன் கலெக்டராகவோ, மந்திரியாகவோ, டாக்டராகவோ, வழக்கறிஞராகவோ அல்லது விருப்பப்படுகிற வேறு எந்தத் துறையிலோ முன்னேற உதவுவதே ராஜாஜி கல்வித் திட்டத்தின் நோக்கம். தொழில் கல்வி பெற்றவர்கள், இன்றுள்ள பல பட்டதாரிகள் போல் வேலை வாய்ப்பின்றி அவதிப்பட நேராது. பாரம்பரியத் தொழிலை விரும்பி ஏற்பவரும் அதில் நவீன முன்னேற்றங்களைப் புகுத்தக் கற்றுக் கொள்ளலாம். ஆனால் இன்றுள்ள நிலையிலோ இவர்களால் தொழில் கல்வியும் தர முடியவில்லை. மெக்காலே கல்வித் திட்டத்தையும் ஒழுங்காகக் கற்பிக்க முடியவில்லை. படிப்பறிவற்றவர் எண்ணிக்கையே ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது.



நீங்காத மரபு

● உ. ரா. சங்கர், திருச்சி.

*? 'ஆசையே துன்பத்துக்குக் காரணம்' என்று புத்தரும், 'எதுவுமே ஆசைப்பட்டால்தான் கிடைக்கும்' என்று இன்றைய மனஇயல் வல்லுநர்களும் கூறுகிறார்கள். எது உண்மை?*

! இரண்டுமே சரிதான். இரு பாதைகளுக்கும் மத்தியில் ஒரு balancing act செய்வதில்தான் நமது வெற்றி அடங்கியிருக்கிறது. ஆசைப்பட்டு நாம் திட்டமிடுதல், உழைத்தல் முதலியன நமது நிறுவனத்தின் முன்னேற்றம், அதன் மூலம் நாட்டின் முன்னேற்றம், கூடவே நமது நியாயமான அளவு முன்னேற்றம் என்று இருந்தால் நல்லது. சுயநலத்துக்காகப் பேராசைப்பட்டு, அந்த ஆசையை அதர்ம வழிகளிலும் அடையலாம் என்று எண்ணினால் ஆபத்து, நமக்கு மட்டுமல்ல; நிறுவனத்துக்கும்தான்; நாட்டுக்கும்தான்.



மதச்சார்பின்மை

● எல். மாறன், மேல்பட்டி.

*? ''பத்திரிகைகளும் எதிர்க்கட்சிகளும் பங்கு பத்திர அற்ப ஊழலைப் பெரிதுபடுத்தி விட்டார்கள்'' என அமெரிக்கா சென்றுள்ள மன்மோகன்சிங் அலட்சியமாகக் கூறியுள்ளாரே?*

! வருத்தம் தரும் விஷயம்தான். அங்கே இவர் பல மில்லியன் டாலர் கடன் பெற நடத்தும் பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக முடிய வேண்டுமே என்ற கவலையில் கடன் தரப் போகிறவர்களின் கவலையைப் போக்க இவ்விதம் பேசியிருக்கலாம். ஆனால் நிதி அமைச்சர் மீண்டும் வாங்கும் மில்லியன் டாலர் கடன்கள் எல்லாம் பழைய கடன்களையும் வட்டிகளையும் திருப்பித் தரத்தான் பயனாகும்; முன்னேற்றத்துக்கு அவ்வளவாக உதவப் போவதில்லை என்பதைப் பார்க்க நமது கவலை மேலும் அதிகரிக்கிறது. ஏற்றுமதி ஒன்றே நம்மைக் காப்பாற்றும். 'அதற்கு என்ன திட்டம் வைத்திருக்கிறது மத்திய அரசு?' என்று பார்த்தால் கவலைக் கடலிலேயே மூழ்கி விடுகிறோம்!



பின்வாங்கும் படை

■ இரா. மாதவராமன், கிருஷ்ணகிரி.

*? ''திரை கடலோடியும் திரவியம் தேடு'' என்பது இன்றைய கால நிலைக்கு...?*

! ''ஊழல் செய்தாவது ஊதியம் தேடு'' என்றாகி விட்டது விசனத்துக்குரியதுதான்.

● ப. வேங்கடேசன், கொளப்பாடு.

*? ''அண்ணா எம்.ஜி.ஆர். இவர்களுக்குப் பிறகு புரட்சித் தலைவிதான் ஒரே வாரிசு'' என்று சேடப்பட்டி முத்தையா கூறியுள்ளது பற்றி...?*

! சட்டமன்ற சபாநாயகர்கள் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு மன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் நடந்து கொண்ட ஆரோக்கியமான மரபு ஒரு காலத்தில் இங்கு நிலவியது. இன்று இல்லை.

● ஆர். எம். பாண்டியன், பெருங்காடு.

*? முந்தாள் துணை ஜனாதிபதி ஹிதாயத்துல்லா மறைவு?*

! உண்மையான மதச் சார்பின்மையின் சின்னமாக இருந்தார் என்பதோடு, ஜம்னாலால்

பஞ்சாப் விருதுக் குழுவின் தலைவராக இருந்து பாரபட்சமின்றி செயல்பட்ட சட்ட மேதை.

● பாக்கியமுத்து, திருச்சி.

? "ரஜினி படம் ஜெயிக்கிறது என்றால், அது ஜெயிக்க வெற்றி பெற வேண்டும் என்பதற்காகத்தான்" என்று ஆர். எம். வீ. கூறியுள்ளாரே?

! ஜூராஸிக்போல, டைனோசர்போல இவர் நடிப்பவர் என்று வர்ணிப்பது போலிருக்கே!

● நா. செல்வராசன், பாண்டிச்சேரி.

? 'பொன் விழா கொண்டாடிய பத்திரிகையின் பணம்; என் எதிரிக்குச் செலவிடப்பட்ட பணம்' என்றெல்லாம் பி. எச். பாண்டியன் 23.9.92 சட்டசபையில் குறிப்பிடுகிறாரே, கல்கி குறித்தா?

! கல்கி அரசியல் எழுதுகிறது; அரசியலில் புகுவதில்லை.

● காமாட்சி, மேலப்பாளையம்.

? அமரர் கல்கிக்கு ஜோசியத்தின் மீது நம்பிக்கை இல்லை என்கிறீர்கள்; ஆனால் பொன்னியின் செல்வனில் குடந்தை ஜோதிடரை அரசகுல நங்கையர் அணுகுகிறார்களே?

! அமரர் கல்கிக்குக் குறிப்பிட்ட முறையில் ஜோதிடத்தில் நம்பிக்கை இல்லைதான். ஆனால் கதை எழுதும் போது அந்தக் காலச் சூழ்நிலை, நம்பிக்கைகள், கதை மாந்தரின் குண இயல்புகள் இவற்றையொட்டித்தானே எழுத இயலும்? அதிலும் உன்னிப்பாகக் கவனித்தால் குடந்தை ஜோதிடர் அப்படியொன்றும் பிரமாத ஜோதிடம் கூறி விடவில்லை என்பது நன்றாகவே புரியும்.



● சட்டசபையில் குறிப்பிடுவது...



● அனுமதி கிடைக்காது!

● எஸ். நாரம்புநாதன், அரக்கோணம்.

? என்று ஒழியும் காவல் நிலைய மரணங்கள்?

! காவல் நிலைய மரணங்களும் ஒழிய வேண்டும்; காவலர் மரணங்களும் ஒழிய வேண்டும். விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர் என்று அனுமானிக்கப்படுகிறவரால் சமயநல்லூர் சப்-இன்ஸ்பெக்டர் சுடப்பட்டு இறந்தது, 'விடுதலைப் புலிகளை அடக்கி விட்டோம்' என்று முதல்வர் மார்தட்டுவதை அர்த்தமற்றதாக்குகிறது. 'விடுதலைப் புலிகளுக்குத் தடைவிதிப்பதால் மட்டும் பயன் இராது; அவர்கள் வெவ்வேறு வடிவெடுத்து வளைய வருவார்கள்' என்ற அனுமானத்தை மெய்யாக்குகிறது. புலிகள் இங்கு காலூன்றாமல் அங்கு போராட முடியாது. அரசியல் தீர்வு அவசியம்.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
எஸ். குருசாமி,
3, நம்மாழ்வார் தெரு,
ராதா நகர்,
சென்னை – 44.

● நிவேதிதா, திருச்சி.

? "போங்கடா, நீங்களும் உங்க அரசியலும்" என்றெல்லாம் படத்தின் பெயர்கள் வருவதற்கு யார் மூலகாரணம்?

! "போங்கடா, நீங்களும் உங்க சினிமாவும்" என்று கூறாத ரசிகர்கள்தாம்.

● து. சேகர், திண்டுக்கல்.

? சினிமாவில் நுழைந்து நல்ல பெயர் வாங்கி விட்டால் அரசியலில் நுழைந்து கட்சி ஆரம்பித்து விடலாம் என்கிறார்களே?

! அரசியலில் நுழைந்து பிரபலமாகி விட்டால் பிறகு சினிமாவில் நுழைந்து கொடி நாட்டி விடலாம் என்றும் கூறுகிறார்களே!

● சா. ரமேஷ்பாபு, லால்குடி.

? ராமதாஸும் பண்ருட்டியும் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டது பற்றி...?

! அது சரியான நடவடிக்கை. அதன் பிறகு 'ஜாமீன் ரத்து; மீண்டும் கைது' என்பது குளறுபடி.

## 'ஜெ' மீது வழக்குத் தொடர மு.க. அனுமதி கோரியிருக்கிறாரே?

● எஸ். குருசாமி, சென்னை – 44. ❑

? முதல்வர் மீது வழக்குத் தொடர தி.மு.க. தலைவர் அனுமதி கோரியிருக்கிறாரே?

! அனுமதி கிடைக்காது, ஆளுநரிடமிருந்து. ஆனால் கருணாநிதியின் அறிக்கை மத்திய அரசுக்குப் போக, மாநில அரசை மத்திய அரசு அவ்வப்போது அச்சுறுத்தி வைக்க உதவும்!

உங்கள் செல்வம் :

# சிலிண்டர் விலை ஏறுகிறது! சிண்டைப் பிய்த்துக் கொள்கிறோம்!

வோட்டுப் போடும் உரிமையுள்ள பெரும்பான்மையான ஏழை எளிய மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ள விரும்பாத அரசு, கெரசின் விலையை உயர்த்தவில்லை. சமையல் காஸ், பெட்ரோல் விலைகளை எக்கச்சக்கமாக ஏற்றி மத்தியதர வகுப்பினரின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டிருக்கிறது.

பெரும்பாலான விலைவாசிகள் மார்க்கெட் நிலவரப்படிதான் ஏறி, இறங்குகின்றன என்றாலும், அரசு சிலவற்றை மட்டும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. சமீபத்தில் சிமெண்ட், ரசாயன உரம், எஃகு போன்றவை இந்தக் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டன. ஆனால் பெட்ரோலியம் பொருள்களின் விலைகளை அரசே நிர்ணயிக்கிறது. இதில் கட்டுப்பாட்டை நீக்கினால் விலைகள் மேலும் உயரும்.

சர்வதேச மார்க்கெட்டில் பெட்ரோலியப் பொருள்களின் விலை குறைந்து வரும்போது இங்கு மட்டும் ஏறுவானேன்? சமீபத்தில் ரூபாயின் நாணய மாற்று வர்த்தகத்தில் அரசு ஒரு புதிய நடைமுறையைப் புகுத்தியது நினைவிருக்கும். அதாவது அரசுத் தரப்பில் இறக்குமதியாகும் பொருள்களுக்குப் பகுதி அளவில் அரசு நிர்ணயித்துள்ள நாணயமாற்று விகிதப்படி ரூபாயாகத் தர வேண்டும். மிச்சத்துக்கு மார்க்கெட் நிலவரப்படி நாணய மாற்று நடக்கும். மார்க்கெட் நிலவரப்படி பார்த்தால் ஸ்டெர்லிங் அல்லது டாலருக்குப் பத்து முதல் பன்னிரண்டு சதம்வரை கூடுதல் ரூபாய்கள் தர வேண்டியிருக்கிறது. இறக்குமதியாகும் கச்சா எண்ணெய்யில் $1/5$ பங்குக்கு மார்க்கெட் நிலவரப்படி நாணய மாற்று நடக்கிறது. இதனால் பெட்ரோலியம் இறக்குமதிக்கு முன்னை விடவும் அதிகச் செலவாகிறது. எனவே விலையையும் அரசு உயர்த்துகிறது. கச்சா எண்ணெய் தற்போது உள்நாட்டிலேயே 28 மிலியன் டன் உற்பத்தியானாலும் இன்னமும் 30 மிலியன் டன் இறக்குமதி செய்து கொண்டுதானிருக்கிறோம்.

குவெய்த் விடுதலைப் போரின் போது கச்சா எண்ணெய் இறக்குமதிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்போது பெட்ரோலியப் பொருள்களின் உபயோகத்தைக் குறைக்கும் நோக்கில் போடப்பட்ட கூடுதல் வரி, யுத்தம் முடிந்து பல காலமாகியும் ரத்தாகாமல் நீடிக்கிறது.

அயல்நாட்டிலிருந்து இறக்குமதியாகும் கச்சா எண்ணெய், உள்நாட்டு உற்பத்தி முதலியவற்றைப் பயன்படுத்தி பல்வேறு பெட்ரோலியப் பொருள்களை உற்பத்தி செய்யும் சுத்திகரிப்பு நிலையங்கள் நாடெங்கும் பரவலாக உள்ளன. இவற்றின் உற்பத்திப் பொருட்கள் - பெட்ரோல் கெரசின் முதலியன - வெகுதூரம் நாட்டின் மூலைமுடுக்குகளுக்கெல்லாம் அனுப்பப்படுகின்றன. அருகிலுள்ள ஊருக்கு அனுப்புவதைவிட தொலைதூரம் அனுப்புவதெனில், போக்குவரத்துச் செலவு (ரயில் - லாரி) அதிகமாகத்தான் ஆகும். ஆயினும் கூட, நாட்டின் எந்த ஓரிடத்திலும் விலை ஒரே மாதிரி, சீராக இருக்குமாறு மத்திய அரசு நிர்ணயிக்கிறது. (மாநில வரிகள் தனி.) கூடுதல் போக்குவரத்துச் செலவை பெட்ரோலிய நிறுவனங்கள் எப்படிச் சமாளிக்கின்றன?

இந்தியன் ஆயில், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் ஆகிய மூன்று நிறுவனங்களும் இதற்காகவே Oil Pool Account என்பதாக ஒன்றை ஏற்படுத்தியுள்ளன. பல ரகச் செலவுகளும் போக மிச்சத்தில் ஒரு கணிசமான பகுதியை இந்த OPA கணக்கில் கட்டுகின்றன. வித்தியாசப்படும் போக்குவரத்துச் செலவுகளை இந்தக் கணக்கிலிருந்து பின்னால் அவை எடுத்துக் கொள்கின்றன. இதனால்தான் நாடு முழுவதும் ஒரே விலையில் பெட்ரோலியப் பொருள்களை விநியோகிக்க முடிகிறது.

சமீப காலத்தில் இந்த OPA நிதியில் 2500 கோடி ரூபாய் சேர்ந்திருந்தது. அரசுக்குத்தான் எத்தனை பணம் இருந்தாலும் போதவில்லையே! மதுதண்டவதே, இந்த நிதியிலிருந்த பணத்தை அரசின் வருவாயாகக் கருதி வரவு வைத்து விட்டார். அடுத்தடுத்து வந்த நிதி அமைச்சர்களும் இதே கைங்கர்யத்தைச் செய்யப் போக, எண்ணெய்க் கம்பெனிகளுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பணம் கிடைப்பதில்லை. இப்போதைய விலை உயர்வுக்கு இதுவும் ஒரு காரணம்.

இதே போல் சமீபத்தில் ரிசர்வ் வங்கியிடமிருந்த சுமார் 1500 கோடி ரூபாய் உபரி பணத்தை அரசு தனதாக்கிக் கொண்டு விட்டது! கடந்த ஆண்டுகளில் 200 கோடி அல்லது 300 கோடிக்கு மேல் இப்படி எடுத்துக் கொள்ளப்பட்டதில்லை.

இவ்வாறு அரசு பெட்ரோலிய நிறுவனங்களுக்கும் ரிசர்வ் வங்கிக்கும் உரிய சேமிப்புப் பணத்தைத் தனது வருவாயாகக் கருதி எடுத்துக் கொண்டு விடுவது மோசமான முன்னுதாரணம் மட்டுமல்ல; அரசின் படுமோசமான நிதி நிலைமையையும் உணர்த்தும்.

– வி. கோபாலன்

"எனக்குப் பிடித்தது - வாசகனின் அறிவுக் கூர்மையைச் சந்தேகிக்காமல் விஷயத்துக்கு வரும் வேகம், அபூர்வமானது. கவியரங்கம் மாதிரி எல்லாவற்றையும் இரண்டு முறை சொல்லி சோதிக்காமல் - வண்டு மாதிரி காதருகில் ஒரு ரீங்காரம். கவக் கோழி மாதிரி இரைச்சல் இல்லை... சினிமாவில் சேருவதாக ஓர் ஆசை இருக்கிறது மனிதருக்கு. ஆக, சீக்கிரம் சிவகுமாரைப் படியுங்கள். சிவகுமார்! இங்கு (சினிமாவுக்கு) வருமுன் சீக்கிரம் இரண்டு மூன்று நாவல்களாவது எழுதி விட்டு வாருங்கள். வாழ்த்துக்கள்."

- கமல்ஹாசன்

(வேடந்தாங்கல் நாவலின் முன்னுரையில்)





## ம.வே.சிவகுமார் எழுதும்

இதயத்தை வருடி
சிரிக்கவும் வைக்கும்
தொடர்கதை :

# பாப்கார்ன் கனவுகள்

# கல்கி

25.10.92 தீபாவளி சிறப்பிதழில் ஆரம்பம்



"நாட்டுக்கு நான் பல பணிகள் செய்ததாக நண்பர்கள் போற்றுவதுண்டு. அவற்றிலெல்லாம் வியாசர் விருந்தும் (பாரதம்) சக்கரவர்த்தித் திருமகனும் (ராமாயணம்) எழுதி முடித்ததுதான் மேலான பணி என்பது என் கருத்து. எல்லாவற்றையும் விட அதுவே என் உள்ளத்துக்கு மகிழ்ச்சியையும் அமைதியையும் தந்தது."

- ராஜாஜி


(கல்கி பொன் விழா மலர் - மீ. ப. சோமு கட்டுரை)

## ராஜாஜி எழுதிய ராமாயணம் :

# சக்கரவர்த்தித் திருமகன்

(ஓவியர் மணியத்தின் ஒரிஜினல் படங்களுடன் - A Collectors' Item)

வாரம் தவறாமல் கல்கி உங்கள் வீடு தேடி வர
உடனே உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.


ஒரே அமுக்கு. கப்புன்னு அமுக்கிடுவேன்!
கொக்கரக்கோ, கோ...
அரசியல் கட்சிகள்
கருணாநிதி
அதிகாரிகள்
மூப்பனார்
கிணிங்...
கிணிங்...
கிணிங்
கிணிங்



# கல்கி



1992
அக்டோபர் 4
மலர் : 51
இதழ் : 10
ஆங்கீரச
புரட்டாசி 18

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

## ஜனார்த்தனர் வீழ்ந்தார்; பங்காரப்பா அசைவாரா?

ஜல்லிக்கட்டுக் காளையாகத் துள்ளிய ஜனார்த்தன ரெட்டி ஒருவழியாக அடக்கப்பட்டு விட்டார். அவரை அடக்குவதற்காகப் பிரதமரால் அனுப்பப்பட்ட மூப்பனார், கோதாவில் இறங்கி வீரத்தைக் காட்டியதாகக் கூற முடியாது. தாஜா பண்ணித்தான் காளையைச் சரிக்கட்டியிருக்கிறார். இதற்கே 'உன்பாடு என்பாடு' என்றாகி விட, மூப்பனார் விடும் பெருமூச்சுகள் டில்லி வரை கேட்டிருக்கிறது!

ஜனார்த்தன ரெட்டி மீது கொஞ்ச காலமாகவே எதிர்க்கட்சியினரும் காங்கிரஸுக்குள்ளேயே அதிருப்தியாளர்களும் குற்றச்சாட்டுக்களை அடுக்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள். தம்மை முதல்வர் பதவியிலிருந்து கழற்றி விட முயன்ற அவர்களுக்கெல்லாம் ரெட்டிகாரு தண்ணி காட்டி வந்திருக்கிறார்.

தனியார் துறையில் எக்கச்சக்கமாக மருத்துவக் கல்லூரிகளும் பல் வைத்தியக் கல்லூரிகளும் தொடங்க ஜனார்த்தன ரெட்டி அனுமதி வழங்கியதில்தான் பிரச்னை ஆரம்பித்துப் படிப்படியாக பூதாகார வடிவெடுத்தது. ஆந்திர முதல்வரின் உத்தரவை எதிர்த்து மாணவர் கிளர்ச்சி தோன்றியது. "தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடங்க அனுமதிக்க, ஜனார்த்தன ரெட்டி 50 கோடி லஞ்சம் வாங்கி விட்டார்" என்று தெலுங்கு தேசம் பகிரங்கமாகவே குற்றம் சாட்டியது. கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பு வலுத்தது. ரெவின்யூ அமைச்சர் ரவீந்திர ரெட்டியே வேறு ஒரு காண்டிராக்ட் விஷயத்தில் முதல்வர் லஞ்சம் வாங்கி விட்டதாகப் பிரதமரிடமே புகார் செய்தார். முதல்வருக்கு மிகவும் நெருங்கியவரான மண்டல ஜானகிராம் மீதும் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது என்பது போல் ஜனார்த்தன ரெட்டி இதையெல்லாம் சமாளித்துப் பிடிவாதமாகப் பதவியில் ஒட்டிக் கொண்டு இருந்தார்.

ஆனால் மாணவர் சங்கம், 'தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடங்க அனுமதித்ததும் அட்மிஷனுக்குப் பணம் வாங்க அனுமதித்ததும் குற்றம் என்று நீதிமன்றத்துக்குப் போயிற்று. இதை விசாரித்த ஆந்திர உயர்நீதி மன்றம், தனது ஃபுல்பெஞ்ச் தீர்ப்பில் அரசு உத்தரவைச் செல்லாததாக்கி விட்டது. தனியார் கல்லூரிகள் இயங்க இதன் மூலம் தடை ஏற்பட்டுள்ளது. தவிர ஜனார்த்தன ரெட்டி மீதும் ஓரிடத்தில் தீர்ப்பில் நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்து எழுதியுள்ளனர். இதனால் கொள்கை ரீதியில் சட்டத்துக்குப் புறம்பாக இயங்கியது மட்டுமின்றி, தனிப்பட்ட முறையிலும் ஜனார்த்தன ரெட்டி குற்றமிழைத்தவராகிறார் என்று உறுதிப்படுகிறது.

இவ்வளவுக்குப் பிறகும் சும்மா இருந்தால் தமக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் ஏற்படக்கூடிய அவப்பெயரை எண்ணிப் பார்த்த பிரதமர், மூப்பனாரை ஹைதராபாத்துக்கு விரையச் செய்து, ஜனார்த்தன ரெட்டியின் ராஜினாமாவை எப்படியோ பெற்றுச் சமாளித்து விட்டிருக்கிறார்.

'லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமந்து கொண்டிருப்பவர்கள் பதவியில் நீடிக்கக் கூடாது' என்ற பிரதமரின் கருத்து வரவேற்கப்பட வேண்டியது தான். அதில் ஐயமேயில்லை. ஆனால் அந்தக் கருத்து அவருக்கு வேண்டப்படாதவரான ஜனார்த்தன ரெட்டி விஷயத்தில் மட்டும் செயல்படுவது விநோத வேடிக்கையாக உள்ளது. இந்தப் பக்கம் பங்காரப்பாவும் அந்தப் பக்கம் ஜஃபார் ஷெரீஃபும் ஏகப்பட்ட லஞ்ச ஊழல் புகார்களைச் சுமந்து கொண்டிருக்கிறார்கள். நீதிமன்ற கண்டனங்களும் இவர்களுக்கு உண்டு. ஆனால் நடவடிக்கை ஏதும் பிரதமர் இன்று வரை எடுக்கவில்லை. இவர்கள் விஷயத்திலும் பிரதமர் துரிதமாகச் செயல்படாவிட்டால் அவர் பாரபட்சமாக நடந்து கொள்வதாக எண்ணம் மக்களிடையே வலுப்படும்.

இன்னொரு முக்கிய விஷயம், 'ஜனார்த்தன ரெட்டிக்குப் பதில் யார்?' என்பது. யாரானாலும் சரி, ஜனநாயக மரபுப்படி சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களால் அவர் தேர்ந்தெடுக்கப்படுவதே நல்லது. நியமன முதல்வர் நீடிக்க மாட்டார். ஓர் அவசரத்திற்கு வேணுமானால் தாற்காலிக முதல்வரை நியமிக்கலாம்; ஆனால் சட்டமன்றக் கட்சித் தலைவர் தேர்தல் விரைவில் நடந்தே ஆக வேண்டும்.

# காணி நிலம் கண்ட பரிணாம வளர்ச்சி!

**சென்னை, பாரதியார் சங்கம் வழக்கம் போல இந்த ஆண்டும் செப்டம்பர் 11, 12ல் பாரதி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. பொன்மணி வைரமுத்து தலைமையில் நடைபெற்ற கவி அரங்கத்தின் போது அடிக்கு அடி கரவொலி பெற்ற ஒரு புதுக் கவிதை.**

பாரதி!
எங்கள் தாய்க் கவிஞனே!
நீ போட்டுத் தந்த
பாட்டுப் பாதையில்
பாரதத்தின் பயணம்
நடக்கவில்லை!
நல்ல மேய்ப்பரென்று
நாங்கள் நம்பி வந்த நபர்கள்
கட்சி கட்டிக் கொண்டு
கசாப்புக் கடை நடத்துகின்றனர்!

தேசத்தின் துக்கம் தொலைக்க
தூங்காமல் நீ கண்ட
கனவுகளின் கதி தெரியுமா கவிஞனே?
உன் கனவுகள் சிலவற்றை
உன்னோடே
உடன்கட்டை ஏற்றி விட்டோம்!
சிலவற்றை - உயிரோடே
புதைத்து விட்டோம்!

உன் செந்தமிழ் நாடும்
ஒரு சிதைந்த கனவுதான்!
சொல்லும் போதே காதில்
தேன்வந்து பாய்ந்ததென்றாயே
கைக்கெட்டும் தூரத்திலுள்ள
காவிரி கூட
எங்கள் வாய்க்கால்களில்
பாயவில்லையே!

பாப்பா கனவுக்கும் பாலூற்றி விட்டோம்!
பாரதி!
காலை எழுந்தவுடன் காப்பி
பின்பு கனிவுகொடுக்கும்
சினிமாப் பாட்டு
மாலை முழுதும் டி.வி.
என்று வழக்கப்படுத்திக் கொண்டாள்
எங்கள் பாப்பா!

சரி, காணிநிலம் வேண்டுமென்று
இமாலயக் கனவொன்று கண்டாயே
அதுவேனும் - நனவுக் கரையை
நெருங்கியதா கவிஞனே!

அன்றைய உன்
காணிநிலக் கனவை
இன்றும் - எழுபது கோடி இதயங்கள்
இறக்கி வைக்காமல்
சுமக்கின்றன!
மொத்தத்தில்

இந்தியர் இதயமெல்லாம்
கதவடைப் பில்லாத
கனவுத் தொழிற்சாலை!

ஒருநாள் - கண்ணில் பட்டவரிடமெல்லாம்
கண்டேன் ஒரு கனவுப் பேட்டி!
காணி நிலம் கிடைத்தால்
என்ன நீ செய்வாய் என்றேன்!
வீட்டுமனை பிரித்து
விலைக்கு மேல் விலை வைப்பேன் என்று
விளக்கினான் ஒரு தரகன்!

மந்திரியார் ஒருவரோ
மைத்துனி பேரில் எழுதுவேன் என்றார்.
அவள்தான் அவரின்
பினாமியாம்!

ஒரு சாமியாரைக் கேட்டதற்கு
அயோத்தியில் கிடைத்தால்
சிலாக்கியம் என்றார்.
ஆயிரம் செங்கல்லும் கேட்டார்.
பக்கத்திலிருந்த பாயோ
பள்ளிவாசல் கட்டினால்
பாவமா என்று கேட்க
மூண்ட சண்டையை
முடிக்காமல் ஓடினேன்!

வீதிவழியே வந்த வீரப்பனைக்

**அம்ஜத் பாரதி**

கேட்டேன்.
சந்தன மரங்கள் அங்கே
இருந்தால்தான் சௌகரியம் என்றான்!
கைவி கட்டிய ஒருவன்
கஞ்சா வளர்ப்பேன் என்றான்!
ஒட்டி நின்றவனோ
நான்கைந்து - ஊறல்
போடலாமென்றான்!
தலைசுற்றி நிற்கையில்
சுற்றுலா வந்த ஓர்
வெள்ளையன் என்னைக்
கூப்பிட்டுச் சொன்னதைக் கேள்!

'நாங்கள் விட்டுப் போன
இந்தியா - அங்குலம்




குறையாமல்
அடமானம் கிடக்கிறது!
இன்று இந்தியன் வங்கியின் வாசலில்
இந்தியன் நிற்கிறான்;
உலக வங்கியின் வாசலில்
இந்தியா நிற்கிறது!
ஊசிமுனை நிலம் கூட
இங்கே - உங்களுக்குச்
சொந்தமில்லை' என்றான்!
பார்த்தாயா பாரதி,
பாரதத்தில்
உன் காணி நிலக்கனவு பெற்ற
பரிணாம வளர்ச்சியை!

இருந்தாலும் - புலமைப் புலியே
கனவுப் பாய்ச்சலில்
உன்னையும் மிஞ்சும் குட்டி நான்!
ஆம்! எனக்குக்
காவிமனை வேண்டும்!
அதில் - ஹர்சத் மேத்தாவைப் போல்
ஓர் மாளிகை கட்டிவிட வேண்டும்.
நித்தம் கவியரசின் பாடல்
காதில் விழ வேண்டும்.
பொன்வண்டு போல் ரெண்டு
மாருதி கார் வந்து
போர்டிகோவில் நிற்க வேண்டும்!
இத்தனை கனவும்
மொத்தமாய் பலிக்குமா?
பலித்தது பாரதி!
நான் கேட்டது உன் பராசக்தியிடமல்ல
எங்களூர் எம்.எல்.ஏ., என். பராசக்தியிடம்!

எல்லா மட்டத்திலும்
மால் வெட்டி விட்டேன்.
முழிக்காதே புலவனே!
'மால்' என்பது
எட்டுத்திக்கும் செல்லாமலே
தமிழுக்கு நாங்கள்
கொணர்ந்திட்ட புதுச் சொல்!
புறம்போக்கு நிலத்தில்
பெரும்பகுதி பெற்று விட்டேன்!
பத்திரம் பதியும் முன்பே
அஸ்திவாரம்
பறிக்கச் சொல்லி விட்டேன்!
அந்த அரசியல் கட்சியிலும்
அவசர உறுப்பினர் ஆகி விட்டேன்.
விரைவில் - அமைச்சரின் தலைமையிலே
புதுமனைத் திறப்பு விழா!
அனுசரித்துப் போகப் போக
ஆஸ்தான கவியும் ஆகிவிடுவேன்!
அப்போது பாரதி
அவசியம் நீ
அங்கிருந்தே ஆசீர்வதி!

அலுவலகத் தேர்வுக்காகப் படித்துக் கொண்டிருந்தான் விஸ்வநாதன்.

படித்துக் கொண்டிருந்தான் என்பதை விட புத்தகத்தை விரித்தபடி வெறித்துக் கொண்டிருந்தான் என்பதுதான் உண்மை.

இந்தத் தேர்வில் வெற்றி பெற்றால் அதிகாரி பதவி கிடைக்கும். அதனால் சம்பளமும் கணிசமாக உயரும். அந்தஸ்தும் ஏற்படும்.

எல்லாம் தெரிந்தும் அவன் மனம் புத்தகத்தில் பதிய மறுத்தது.

மனத்தில் இனம்புரியாத தளர்ச்சி. இன்று, நேற்று ஏற்பட்டதல்ல இது. சில காலமாகவே இப்படித்தான்.

எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் தடங்கல். மனம் வெறுத்துப் போனது.

அலுவலகத் தேர்வு ஐந்து முறைதான் எழுத முடியும். அதற்குள் 'பாஸ்' செய்து விட வேண்டும். இது விஸ்வநாதனுக்கு நாலாவது தடவை.

வெற்றி பெறுவோமா என்று மனம் சஞ்சலப்பட்டது. வெற்றி பெற வேண்டும் என்ற ஆசை இருந்தும் உள்ளத்தில் ஒரு பயம், தெளிவின்மை.

''என்னடா விஸ்வா, புத்தகம் கையிலே, புத்தியோ வேறு எங்கேயோ அலையற மாதிரி இருக்கு!'' என்று கேட்டபடி அவன் அறைக்குள் நுழைந்தான் ஸ்ரீனிவாசன்.

உடன் வேலை பார்ப்பவன். போன வருடம் பதவி உயர்வு பெற்றவன் - இந்த பரீட்சையில் தேர்வு பெற்றதால்.

விஸ்வநாதன் சொன்னான் தன் தயக்கத்தை, பயத்தை, வாழ்க்கையின் பிடிப்பற்ற தன்மையை.

அவனை ஒரு நிமிடம் பார்த்தபடி யோசித்தான்.

''எனக்கும் இதே மாதிரி பிரச்னை இருந்தது விஸ்வநாதன். ஆனால் இப்ப இல்லை.''

''எப்படி மனகல புத்துணர்ச்சி வந்தது?'' ஆவலாய்க் கேட்டான்.

''ம்... சரி. ஒரு வழி சொல்றேன். இன்னிக்கு மாலை ஒரு இடத்துக்குக் கூட்டிட்டுப் போறேன். தயாராயிரு என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

அவன் மாலை நாலு மணிக்கு வந்த போது,

''எங்கடா போறோம்?'' என்றான் விஸ்வநாதன் அடக்க முடியாமல்.

''எனக்குத் தெரிஞ்சவரிடம். அவர் சொன்னபடி செஞ்சா எல்லாமே வெற்றிதான்.''

''ஏதாவது தாயத்து கொடுப்பாரா?''

''பொறுமை வேணும் நண்பா'' என்றான் சிரித்துக் கொண்டே.

அந்த இடம் வீடு மாதிரியும் இருந்தது. கோயில் போலவும் இருந்தது.

நாற்காலி, முகம் பார்க்கும் கண்ணாடி, பாத்திரங்கள், இத்யாதிகள் ஒரு பக்கமாய். மறுபக்கம் கிருஷ்ணரின் விக்ரகம் கொண்ட கோயில் போன்ற அமைப்புடன் சிறிய பீடம் இருந்தது.

புல்லாங்குழல் கிருஷ்ணர் நீல நிறத்தில் சிரித்துக் கொண்டிருந்தார்.

மடத்தில் இருப்பது போல ஓர் அமைதி அந்த அறையில்.

அறையின் மேற்குக் கோடியில் ஒரு வாசம்.

# உன்னில் நீ

கிருஷ்ணா



அதன் வழியே ஒரு முதியவர் வந்தார். கதர் வேட்டி மட்டும் இடுப்பில். நீண்ட தாடி. முடிக்க விழுந்த தலைமுடி. தீர்க்கமான கண்கள், ஒல்லியான தேகம்.

அவர் கண்களை ஒரு விநாடிக்கு மேல் சந்திக்க முடியவில்லை.

''வணக்கம் சார்'' என்றான் விஸ்வநாதன் அலுவலக தோரணையில்.

''சார் இல்லை; சாமி'' என்று திருத்தினான் ஸ்ரீனிவாசன்.

''உட்காருங்க'' என்றார்.

மூவரும் தரையில் அமர்ந்தனர்.

''சாமி இவன் என் நண்பன். அமைதி வேண்டி உங்களிடம் வந்திருக்கான்.''

''அப்படியா?'' என்றார் சாதாரணமாய்.

விஸ்வநாதன் தன் மனநிலையைச் சொன்னான்.

''சில சமயம் எங்கேயாவது ஓடிப் போயிடலாமான்னு தோணுது சாமி.''

''போயேன்!''

''சாமி...?''

''அந்த கிருஷ்ணரைப் பார். என்ன தெரிகிறது?''

''கிருஷ்ணர் தெரிகிறார். அவர் உருவம் தெரிகிறது'' என்றான் குழப்பம் விலகாமல்.

''அவரின் உருவம் தெரிவதைக் குழந்தை கூடச் சொல்லி விடும். இன்னும் ஆழ்ந்து பார்.''

''நீலநிறம் தெரிகிறது. புல்லாங்குழல் தெரிகிறது.''



''இன்னும் ஆழ்ந்து பார்.''

''கிருஷ்ணரின் புன்னகை தெரிகிறது. புல்லாங்குழலை வாசிப்பது போன்ற பாவம் முகத்திலும், கையிலும் தெரிகிறது.''

''இன்னும் பார்... புல்லாங்குழலின் இனிமையான ஓசை கேட்கவில்லை? ஆஹா...'' என்று கண்ணை மூடி ரசித்தார்.

விஸ்வநாதன் மனத்திலும் ஒரு நிமிடம் குழலோசை கேட்பது போன்ற பிரமை ஏற்பட்டது.

மனத்தினுள் சுகமான அமைதி நிலவியது.

சுவாமி கண்ணைத் திறந்து அவனைப் பார்த்துச் சிரித்தார்.

''இந்தா'' என்று ஒரு பிளாஸ்டிக் டப்பாவிலிருந்து எதையோ கையிலெடுத்துக் கொடுத்தார்.

''இதில் ஏழு மாத்திரை இருக்கிறது. தினம் ஒன்றாய்ச் சாப்பிட்டு வா. உன் பிரச்னை தீரும்'' என்று எண்ணிக் கொடுத்தார்.

அது வெள்ளையாய் வட்ட வடிவில் இருந்தது.

இருவரும் விடைபெற்று வெளியே வந்தனர்.

''ஸ்ரீனிவாசா, இந்த மாத்திரையைச் சாப்பிட்டால் என் பயம் விலகுமா?'' என்றான் விஸ்வநாதன்.

''மாத்திரை இல்லை. சாமி கொடுத்த பிரசாதம். இனிமே நீ எதைச் செய்தாலும் ஜெயம்தான்'' என்று முதுகில் தட்டிக் கொடுத்தான்.

ஒரு வாரத்தில் விஸ்வநாதனின் வாழ்க்கையே மாறி விட்டது.

அலுவலகத் தேர்வை அமர்க்களமாக எழுதி விட்டான். நாள் முழுதும் ஒரு புத்துணர்ச்சி அவன் உடலில். செயலில் உறுதியும், வேகமும் தெரிந்தன. அவனுக்கே ஆச்சரியமாய் இருந்தது.

'எல்லாம் சாமி கொடுத்த மாத்திரையின் சக்திதான்' என்று நினைத்துக் கொண்டான்.

ஏழு மாத்திரையையும் சாப்பிட்ட பின்பு மீண்டும் ஸ்ரீனிவாசனுடன் சாமியைத் தேடிச் செல்ல நினைத்தான் - நன்றி சொல்ல.

அதற்குள் அலுவலக டூர் வேலை வந்து விட, தன் சார்பாய் சுவாமிக்கு நன்றி சொல்லி விடும்படி ஸ்ரீனிவாசனிடம் கூறினான்.

''வாப்பா'' ஸ்ரீனிவாசனை அன்புடன் வரவேற்றார் சுவாமி.

''சாமி, என் நண்பன் வாழ்க்கையிலே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திட்டீங்க.




உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலே...''

''அப்படியா? நல்லது'' என்றார் சாதாரணமாய்.

''நீரிலிருக்கும் மீனும், ஓட்டிலிருக்கும் நத்தையும், மவரிலிருக்கும் நம்பிக்கையும் வெளியே போய்ட்டா கலக்கம்தான் நண்பனே'' என்றார் கிருஷ்ணர் விக்ரஹத்தைப் பார்த்தபடி.

''உண்மைதான் சாமி. இப்ப விஸ்வநாதன் மனகல எதையும் சாதிக்க முடியுங்கற நம்பிக்கை வந்திருக்க,'' என்றான் ஸ்ரீனிவாசன்.

''அப்படியா?''

''ஆமாம். எல்லாம் நீங்க கொடுத்த மாத்திரை... இல்லை.. பிரசாதத்தோட சக்திதான் சாமி'' என்றதும் கடகடவென நகைத்தார்.

''சக்தி மாத்திரையில் இல்லை நண்பா. அவரவருக்குள்தான் இருக்கிறது.''

''என்ன சாமி சொல்றீங்க?''

''நான் கொடுத்த மாத்திரை வெறும் சர்க்கரை வில்லை'' என்றவரை பிரமிப்புடன் பார்த்தான் ஸ்ரீனிவாசன்.

''போன வருஷம் உனக்குக் கொடுத்ததும் அதுவேதான். அதை இப்போது அவனிடம் சொல்லாதே - சமயம் வரும் போது சொல்லிக்கலாம். அதுவரைக்கும் அவனுக்குள் இருக்கும் அவன் வளரட்டும்... நீ வளர்ந்தது போல'' - பரிவான புன்னகையுடன் அவர் சொன்னார்.


## நிர்வகிக்கப் பெண்கள் தேவை

நாம் தயாரிக்கும் பொருள்களை வாங்கி உபயோகித்து, அதைப் பணமாக மாற்றி, நம் எல்லோரையும் வாழ்விக்கும் தெய்வங்களான பொதுமக்களுக்குத் தரமான, சுத்தமான பொருள்களைத் தயாரித்துக் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய வகையில், உணவுப் பொருள்கள் தயாரிக்கும் மதுரையிலுள்ள எமது தொழிற்சாலையை தெய்வீக சூழ்நிலையில், மனித ஆற்றலை வெளிப்படுத்தி, திறம்பட நிர்வகிக்கக்கூடிய எண்ணம், பேச்சுத்திறன், செயல் ஆற்றலுள்ள, ஆங்கிலம், தமிழில் சரளமாக எழுத, பேசக்கூடிய 25 வயதுக்கு மேற்பட்ட உயர்பட்டதாரிப் பெண்கள் தேவை. தன்னைப் பற்றிய அனைத்து விபரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டுகிறோம்.

**உத்தம் ஃபுட் புராடக்ட்ஸ் (பி) லிட்**

**6, ஆரப்பாளையம் மெயின்ரோடு, வைகை நகர்**
**மதுரை 625 010. போன் 24339**

UNIQUE/UFP/0110/5/92

**பெங்களூர் ரிப்போர்ட்**

# சினிமாவிலிருந்து டீ.வி.க்கு...

**அ**ப்படியே தலைகீழ்!

எல்லாரும் டீ.வி.யில் பிரபலமானவுடன்தான் சினிமா உலகில் காலடி வைக்கக் கனவு கண்டு கொண்டிருப்பார்கள். அபர்ணாவின் கனவு ஆரம்பம் முதலே டீவியாகத்தான் இருந்திருக்கிறது.

பெங்களூர் தூர்தர்ஷன் அறிவிப்பாளர்களில் மிகவும் புகழ் பெற்றவர் இவர். ஏகப்பட்ட ரசிகர்கள். அந்தந்த வாரத்தின் நிகழ்ச்சிகளை முன் அறிவிப்பாகத் தொகுத்து வழங்கும் 'முன்னோட்டம்' (கன்னடத்தில் 'முன்னோட்டா') நிகழ்ச்சியை இவர் வழங்கும் விதமே அலாதி. ஆங்கில மணத்துடன் இவர் பேசும் கன்னடத்துக்கு ஏக வரவேற்பு. அபர்ணாவிற்காகவே காத்திருந்து 'முன்னோட்டா' பார்க்கிறார்கள்.



**ம**ல்லேஸ்வரம் ஸ்விம்மிங்பூல் எக்ஸ்டன்ஷனில் அடக்கமான வீடு. குளிர் சிரிப்புடன் வரவேற்கிறார் அபர்ணா. முகப்பிலேயே வினோபா பாவேயும் நேருஜியும் மிக சீரியஸாக எதையோ விவாதித்துக் கொண்டிருக்கும் படம். அந்தப் படத்தின் மீது நமது பார்வை விழுந்தவுடனேயே "அப்பா பத்திரிகையாளராக இருந்து ஓய்வு பெற்றவர். இந்தியன் எக்ஸ்பிரஸ் குரூப்பில் 'கன்னடப் பிரபாவுக்கு' செய்தி ஆசிரியராக இருந்தவர். அவருடைய அரிய கலெக்ஷனில் இந்தப் படமும் ஒன்று" என்கிறார்.

"பொதுவாக எல்லாரும்.... அதிலும் குறிப்பாகப் பெண்கள்.... டீ.வி.யில் பிரபலமாகி அதன் பிறகு சினிமாவில் நுழைய முயற்சி செய்வார்கள்... நீங்கள் எப்படி முதலில் திரைப்படக் கதாநாயகியாக அறிமுகமானபின் டீ.வி.க்கு வந்தீர்கள்?"

"என்னைக் கதாநாயகியாக அறிமுகம் செய்தது புட்டண்ணாதான். 'மசான தஹூவு' (கல்லறை மலர்)தான் என்னுடைய முதல் படம். அவர் என்னை ஒப்பந்தம் செய்த போது நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். புட்டண்ணாவின் படம் என்பதால் வாய்ப்பை விட மனமில்லாமல் நடித்து முடித்தேன். ஒரு பெரிய சோகம் என்னவெனில் அந்தப் படம்தான் அவருடைய கடைசிப் படமாக அமைந்து விட்டது. படம் முடிந்து சொற்ப வேலைகளே பாக்கியிருந்த போது எதிர்பாராதவிதமாக மறைந்து விட்டார் புட்டண்ணா. படம் வெளியாகி மிகப் பெரிய வெற்றியைப் பெறாவிட்டாலும் கூட புட்டண்ணாவின் அறிமுகம் என்பதால் எனக்கு நிறைய வாய்ப்புக்கள் வந்தன. ஆனால் படிப்பை முடித்து விடலாம் என்று நான் நினைத்ததால் எந்தப் படத்தையும் ஒப்புக் கொள்ளவில்லை.

"டிகிரி முடித்தபின் அர்ஜுனுக்கு ஜோடியாக 'சங்க்ராமா' என்ற படத்தில் நடித்தேன். அதைத் தொடர்ந்து ரவிச்சந்திரன், ராஜ்குமார் மகன் சிவராஜ்குமார் ஆகியோர் படங்களில் நடித்தேன். ஏனோ தெரியவில்லை. எனக்கு நான் விரும்பின மாதிரியான ரோல்கள் கிடைக்கவில்லை. ஸ்மிதா பாட்டீல், சுஹாசினி, சரிதா இவர்



*HAS-YOUR CHILD GOT 'GOKULAM' THIS MONTH?*

* Don't let him miss the October '92 issue!

**GOKULAM**

*The monthly magazine for children*

*96 pages for just Rs. 3!*

*GOKULAM, EKKADUTHANGAL, MADRAS - 600 097.*

களைப் போல வர வேண்டும் என்பதுதான் என் கனவாக இருந்தது. ஆனால் கிடைத்த ரோல்கள் எல்லாம் சாதாரண சராசரியான ரோல்கள்... அது மட்டுமில்லாமல் தங்கையாக நடிக்கிறாயா இரண்டாவது கதாநாயகியாக நடிக்கிறாயா என்றெல்லாம் கூப்பிட்டார்கள். எனக்கு விருப்பமில்லை.

''பெங்களூரில் டீ.வி. ஆரம்பிக்கப் பட்டபோதே அறிவிப்பாளர் அல்லது செய்திவாசிப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பம் செய்திருந்தேன். இன்டர்வ்யூவுக்குக் கூப்பிட்டிருந்தார்கள். 'தோற்றம், குரல் எல்லாம் ஓகேதான். ஆனால் அடிப்படைத் தேவையான பட்டப் படிப்பை இன்னும் பூர்த்தி செய்யவில்லையே! டிகிரி முடித்து விட்டு வாருங்கள்' என்று சொல்லியிருந்தார்கள். ஆகவே இப்போது டீ.வி.யில் முயற்சி செய்யலாம் என்று முயன்றேன். வாய்ப்புக் கிடைத்தது. அதனால் பத்துப் பன்னிரண்டு படங்களுடன் சினிமாவுக்கு 'குட்பை' சொல்லி விட்டு டீவிக்கு வந்து விட்டேன்.

''டீ.வி.யில் அறிவிப்பாளராக இருந்து கொண்டே சீரியல்களில் நடிக்கும் வாய்ப்பு வந்தது. பிரபல திரைப்பட இயக்குனர் டி.என்.நாகபரணா 'நம்ம நம்மல்லி' '(நமக்குள்ளே)'- என்ற சீரியல் செய்ய அழைத்தார். இரண்டு பாகங்கள் வந்த இந்த சீரியல் மக்களிடையே மிகவும் 'பாப்புலர்'. இதன் முதல் பகுதியை நாகபரணாவும் இரண்டாம் பகுதியை நடிகை ஆர்த்தியும் டைரக்ட் செய்திருந்தார்கள்.

''பின்னர், 'அம்மா' என்றொரு சீரியல், ஆசைகளுநூறாரு ('ஆசைகள் ஆயிரம்)' - ஆகிய சீரியல்களிலும் எனக்கு நல்ல பெயர்.''

''மறுபடியும் சினிமா ஆசை வரவில்லையா உங்களுக்கு?''

''ஒரு சம்பவம் சொல்கிறேன். கதாநாயகியின் பெயரைக் கேட்காதீர்கள். அவர் கதாநாயகி. நான் அந்தப் படத்தில் இரண்டாவது கதாநாயகி. ஒரு குறிப்பிட்ட வசனம் அவருக்கு வரவில்லை. மீண்டும் மீண்டும் அந்தக் காட்சியை எடுத்தார்கள். ஒரு டேக் இரண்டு டேக் அல்ல. கிட்டத்தட்ட பதினைந்து டேக்குகள்.... இத்தனை முடிந்த பிறகு என்னுடைய காட்சி. அந்தக் கதாநாயகி பேச வேண்டிய வசனத்தை விட மூன்று பங்கு நீளமான வசனம். சர்வ சாதாரணமாய் ஒரே டேக்கில் பேசி ஓகே செய்து விட்டேன். அப்போதுதான் நான் உள்ளபடியே நினைத்தேன். நம்மை விட எந்தவிதத்தில் அந்தப் பெண் உசத்தி? எதற்காக நமக்கு அவரை விடக் குறைந்த முக்கியத்துவம்? நம்முடைய தகுதிக்கேற்ற இடம் இங்கே கிடைக்கவில்லையே என்று வருந்தினேன். சினிமா வேண்டாம் என்று தீர்மானித்ததற்கு இதுவும் ஒரு காரணம்.''

அபர்ணாவுக்குச் சமீபத்தில் திருமணம் நடந்தது. அமெரிக்காவில் கெமிஸ்ட்டாக இருக்கும் ரவிஸ்வாமிதான் கணவர். திருமணப் படத்தை வெளியிட்டு 'இவர் அமெரிக்காவில் போய்க் குடியேறி விட்டால் எப்படி? கர்நாடகம் ஒரு நல்ல அறிவிப்பாளரை இழக்க வேண்டி வருமே'.... என்று கவலைப்பட்டிருக்கிறது தரங்கா என்ற பிரபல கன்னட வார இதழ்.

– பெர்னாண்டஸ்

வண்ணப்படம் : ஆர். எஸ். கிருஷ்ணமூர்த்தி



"அடேயப்பா, பயங்கரமா இருக்கே, என்றாள் ப்ரேமா. எதிரில் ஓரிஸா பழங்குடிகள் நட்டு வைத்த பலி ஸ்தம்பம் - பேயைப் போல இருந்தது. உண்மையிலேயே பயமா? இல்லை அவனது கையைத் தொட வேண்டுமென்று தோன்றியதா, தெரியவில்லை. அவனது கைக்குள் தன் கையைப் பிணைத்துக் கொண்டாள். வளையல்கள் சப்தமெழுப்பின. அவளது கைக்காகக் காத்திருந்த மாதிரி அவனும் பற்றிக் கொண்டான்.

''கழுதை, இதுக்குப்

# பூனை நகம்

போய் பயப்படறியே, ப்ளஸ் டூ வரைப் படிச்சவதானே நீ? இதெல்லாம் இப்ப இல்ல. நூறு, நூத்தம்பது வருஷங்களுக்கு முன்னால'' என்றான் அவன். கழுதையென்று தான் சொல்லப்பட்டது குறித்து அவள் பெருமையடைந்தாள். கழுதையென்று வேறு யாராவது சொல்லியிருந்தால் தனக்குத் தெரிந்த சகல மிருகங்களையும் அவள் பட்டியலிட்டு நினைவு கூர்ந்திருப்பாள். சந்தோஷச்சிணுங்கலுக்குப் பிறகு ''கால் வலிக்குதுங்க, கொஞ்சம் உட்கார்ந்து போகலாமா?'' என்றாள் அவள்.

அவர்கள் நகர்ந்தார்கள். மியூசியத்தைச் சுற்றிக் காட்டுகிறவன் தலையைச் சொறிந்தான். ப்ரேமா சன்னமான குரலில் 'கொடுக்காதீங்க' என்றாள். அவன் பரிதாபத்தைக் கசிய விட்டு ''பாவம், சாப்பிட்டுப் போறாங்க'' என்று அலட்சியமாய் ஒரு ரூபாய் கொடுத்தான்.

அவள் இந்த வரன் தனக்கு முடியும் என்று கனவிலும் நினைக்கவில்லை. இதற்கு முன்னால் நான்கு வரன்கள் வந்திருந்தன. எதுவும் தகையவில்லை.

அவன் வந்து சேர்ந்தான்.

மாப்பிள்ளைக்கு மெட்ராஸில் வேலை. ப்ரைவேட் கம்பெனியில்தான் வேலை என்றாலும் சம்பளம் இரண்டாயிரத்திற்கு அருகில். நண்பர்களுடன் ஒரு ரூமில் இருக்கிறான். சுயமாய்ச் சமைத்துச் சாப்பிடுகிறான். கல்யாணம் நிச்சயமானால் வீடு பார்க்கத் துவங்குவான். ''ப்ரேமா, காப்பியைக் கொண்டு போ....''

ஒரு கணச் சலனம். அதற்குள் காலக் குழப்பம் நிகழ்ந்தது. மெல்லிய கீற்றாய்த் தெளிவு ஏற்பட்டது. கற்காலத்திலிருந்து இந்த நிமிடம் வரை தானும், அவனும் மட்டுமே நிஜம் போல அவள் உணர்ந்தாள்.

அவனேதான். ஒரு சிங்கத்தின் தோரணையோடு, லட்சம் அரசர்களை வென்ற கம்பீரத்தோடு, பூக்கள் கற்றுக் கொடுத்த மாதிரி புன்னகையோடு, கோதுமை நிறத்தோடு, அவளுக்காகவே செதுக்கி வைத்து உயிர் கொடுத்த மாதிரி என்ன அழகாய் உட்கார்ந்திருக்கிறான். பாடப் புஸ்தகங்களில் படித்த எல்லா சக்கரவர்த்திகளின் வேடங்களையும் அவனுக்குச் சூட்டலாம். நீளவாக்கில் கோடு போட்ட சட்டையை வாகாய் பேண்டிற்குள் செருகி, பளபளக்கும் ஷூக்களுடன், செண்ட் வாசனையுடன்... இனி ஷூக்களுக்குப் பாலீஷ் போடக் கற்றுக் கொள்ள வேண்டும். ப்ரேமா கடவுளுக்கு நேர்ந்து கொண்டாள். மாங்காடு, திருவேற்காடு போன்ற ஸ்தலங்களுக்குப் புருஷனுடன் போக வேண்டும். 'மெட்ராஸ், மெட்ராஸ்' என்று

**சங்கர்பாபு**



வெறும் கண்களினால் பார்க்கக் கூடியவற்றில் மிக மெல்லியதானது சோப்புக் குமிழ். சோப்புக் குமிழின் சுவர், மயிர்இழையை விட, 5,000 மடங்கு மெல்லியது.

ஆதாரம் : பொழுதுபோக்கு விஞ்ஞானம்

தகவல் : பி. ஜெயப்பிரகாஷ்

தனிமையில் சொல்லிப் பார்த்துக் கொண்டாள். இதுவரை அவள் மெட்ராஸ் போனதில்லை. நாகரிக வாசிகள், மெத்தப் படித்த யுவதிகள், சினிமா நட்சத்திரங்கள் நிறைந்த நகரில் அவள் புருஷனோடு நடக்கப் போகிறாள். 'மெட்ராஸ்ல உங்களுக்கு எங்கே?'' என்று யாரையும் கேட்கலாம், அங்கேயே பிறந்து வளர்ந்த மாதிரி. முருகக் கடவுளுக்கு சஷ்டி விரதங்கள் இருந்ததும், ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்தியதும் சென்னை வரனாய்ப் பிரதிபலித்திருக்கிறது.

‘‘என்னங்க, வடபழனி கோவிலுக்குப் போகணும்ங்க'' என்றாள் ப்ரேமா.. அவனை அத்தான் என்று கூப்பிட நினைத்தாள். கூச்சமாக இருந்தது.

''போனாப் போச்சு. இதென்ன பிரமாதமா? அப்படியே, கோடம்பாக்கத்துல ஷூட்டிங் பாக்கலாம்...''

''அது முடியுமா?''

''முடிய்யுமாவா?'' என்றான் அவன் ஒரு நிஜுசான அழுத்தக் குரலில். ''ஸ்டுடியோல நமக்குத் தெரியாத ஆள் கிடையாது. போனா விடமாட்டாங்க, என் ப்ரண்ட்ஸ்.'' அவள் அவனது செல்வாக்கு பற்றி பெருமைப்பட்டுக் கொண்டாள். அவள் தோழிகள் யாருமே சினிமா ஷூட்டிங் பார்த்ததில்லை.

அவர்கள் இப்போது மியூசியத்தை விட்டு வெளியே வந்திருந்தார்கள். கன்னிமராவிற்குள் போகலாமா என்று அவன் கேட்டதற்கு, கால் வலிப்பதாகச் சொல்லி விட்டாள். மரங்கள் நிழல் பரப்பின. காற்று சேலைத் தலைப்பை அவனது முகத்தில் படரச் செய்தது. அவளுக்கு உற்சாகமாய் இருந்தது. வெளியே போடப்பட்டிருந்த சிமிண்டுப் பெஞ்சு ஒன்றில் அவர்கள் உட்கார்ந்தார்கள். அவள் சுற்றுப்புறத்தைப் பற்றிக் கவலையின்றி, அரை குறை கூச்சமுடன் அவனது மடியில் தலை வைத்துக் கொண்டாள். அவன் தன் நண்பர்களுடன் முன்பு செய்த கலாட்டா ஒன்றை விளக்கிக் கொண்டிருந்தான். அவள் ஒப்புக்குக் கேட்டுக் கொண்டே, 'எம் புருஷன்' என்கிற சந்தோஷத்தில் மியூசியத்திற்கு வெளியே செல்கிற சாலையில் பயணிக்கிற ஜனங்களை, கார்களை வெறித்து, எல்லோரும் ஏதோ ஒன்றைத் தேடித் திரிவது போலவும், தனக்கு மட்டும் அது சுலபமாய் வாய்த்துவிட்டது மட்டுமின்றி, அபரிமிதமாய் இருப்பது போலவும் முடிவு செய்தாள்.

''டீ சாப்பிடறியா?'' அவன் அவளிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு எதிரிலிருந்த ஸ்நாக்பாரை நோக்கி நடந்தான்.

''வேண்டாம், வேண்டாம்'' என்றாள் அவள்.

''ஏன்?''

''அநாவசியச் செலவு.''

''இதெல்லாமா?'' அவன் வேலை பார்க்கிற இடத்தில் தான் குடிக்கிற தேநீர்க்கோப்பைகளின் எண்ணிக்கையைச் சொல்லி, அவளைப் புறக்கணித்து விட்டு முன்னேறினான். அவனது தேவபுருஷ நடையில் அவள் கம்பீரப்பட்டு, பெருமை கசிய சுற்றிலும் பார்த்துக் கொண்டாள். தான் வேண்டாம் என்று மறுத்தாலும் அவன் விடாப்பிடியாகச் செலவு செய்கிறான். அவன் திரும்பும் போது கையில் சம்சாவும் இருந்தது. ''இதெல்லாம் எதுக்குங்க?'' என்றாள் அவள் வாத்சல்யத்துடன்..

''டீ வெறுமேயா குடிப்பாங்க?''

''வீட்டுக்குப் போகலாம்ங்க'' என்றாள் அவள் டீ க்ளாஸை நீட்டியவாறு. அம்மாவும், அப்பாவும் அவளை இங்கே விட்டுப் போனதில் இருந்து வீட்டில் இருக்கிற நேரம் கொஞ்சமாகவே இருக்கிறது. ''நோ. நோ... நேரா தேவி காம்ப்ளெக்ஸ். இங்கிலீஷ் படம். இங்கிலீஷ் புரியுமா உனக்கு?''

''அய்யே, அசிங்கமா இருக்கும்!''

''சேச்சே, அசிங்கம் நம்ம மனசுல இருக்கு'' என்றான் அவன் ஒரு தத்துவ ஞானியைப் போல்.

அவர்கள் கைகோத்து பஸ் ஸ்டாப்பிற்கு வந்தார்கள். அவள் ஒரு பஸ்ஸில் ஏற முனைந்த போது ''கூட்டமில்லாத பஸ் வரட்டும்'' என்று தடுத்தான்.

அவசரமாய் ஆட்டோ அழைத்து, அதனுள் அவளை ஏற்றினான். ''தேவிக்குப் போப்பா.''

அவள் முறைத்தாள். ''வேஸ்ட்!

செலவு.'' ''மீட்டருக்கு மேல போட்டுக் குடு சார்!'' தியேட்டரில் டிரைவர் கேட்ட போது ஒரு வள்ளலின் இயல்போடு அவன் வழங்கினான்.

தேவி காம்ப்ளெக்ஸில் இன்னும் நேர மிருப்பதாய்த் தெரிவித்தார்கள். சாப்பிட்டு வெகு நேரம் ஆனது குறித்து அவன் கவலை யுடன் ''உன்னை நல்லபடியாக் கவனிக்கப் பேன்ங்கற நம்பிக்கைலதான் உங்கப் பாம்மா உன்னை எனக்குக் கட்டிக் கொடுத் தாங்க?'' என்றான். அந்தப் புல்லரிப்பு ஓட்டலுக்குச் சென்றவுடன் நடுக்கமாய்



மாறியது. இது மாதிரி சொகுசு ஓட்டலுக்கு அவள் வந்ததில்லை.

''என்ன சாப்பிடற ப்ரேம்?'' என்றான் அவன்.

''ஏதாச்சும்.''

பில்லைப் பார்த்து மலைத்த அவளைக் கேலியுடன் பார்த்து இரண்டு ரூபாய் டிப்ஸ் வழங்கினான் அவன். அவள் பிரமிப்பி லிருந்து விடுபடுமுன் தியேட்டருக்கு அவளைக் கூட்டிச் சென்றான்.

ஹைக்ளாஸ் டிக்கெட்டுடன் வந்து சேர்ந்தான். ப்ரேமா ஏ.ஸியின் குளிரை அனுபவிக்கத் துவங்கினாள்.

வீடு வந்ததும் அவன் சாப்பிட்டு விட்டு, சட்டை அணிந்து வெளியே போனான். போகுமுன் 'ஏதாச்சும் வேணுமா ப்ரேம்?'' என்றான். ப்ரேமா அதை ரசித்துவிட்டு 'வேண்டாம்' என்றாள். எங்கு போகிறீர்கள். என்று கேட்கவில்லை. தெரு முனையில் அய்யரின் பெட்டிக்கடை இருக்கிறது. அங்கு சிகரெட் குடித்துவிட்டு மெதுவாய் வருவான். 'ராத்திரி எதுக்குங்க போறீங்க?' என்று சொல்லிப் பார்த்தாள். 'ஜஸ்ட் டென் மினிட்ஸ் காலார நடந்தாத் தான் ரிலாக்ஸ்டா இருக்கு. கம்பெனியில அடிச்ச ஃபைல் வாசனை அப்பத்தான் போகும்.'

அவள் சாப்பிட்டாள். எச்சில் தட்டை அடுப்பறை என்று சொல்லப்பட்ட அந்த இடத்தில் போட்டாள். சின்ன வீடுதான். 'சென்னையில் இப்படித்தான் கிடைக்கும்; இங்காவது பரவாயில்லை; பம்பாயில் இன்னும் மோசம்; பன்றிகள் போல் வாழும் அவலவாசிகள்; கூடிய சீக்கிரம் என் மகா ராணியை ஒரு குட்டி அரண்மனை போன்ற பங்களாவிற்கு அழைத்துப் போகிறேன்' இதெல்லாம் அவனது வாக்குறுதிகள். அதை அவள் உறுதியாய் நம்பினாள்.

அம்மா, அப்பா தன்னை இங்கு கொண்டு வந்து விட்டுப் போய் பத்துநாட்க ளாகின்றன. பத்து நாட்களின் நகர்வு பத்து யுகங்களைச் சந்தித்த பிரமையைத் தந்திருக் கிறது. நீண்ட காலமாய்ச் சென்னையில் இந்த வீட்டில் வாழ்ந்து அவனுக்கு டிபன்

பாக்ஸில் சோறு கட்டிக் கொடுத்து, வியர்வை வாசனையுடன் திரும்பும் அவனை மாலையில் எதிர் கொள்வது போல் இருக்கிறது. ஊரின் நினைப்போ, அம்மா அப்பாவின் நினைப்போ எழாது அவனது அருகாமை தைரியம் கொடுத்து விடுகிறது. ப்ரேமா நைட்டியில் புகுந்து கொண்டாள். நைட்டி அவன் வாங்கிக் கொடுத்ததுதான். சொந்த ஊரில் அது பற்றிக் கனவிலும் நினைத்ததில்லை.

அவன் வந்து சேர்ந்தான். கதவைப் பூட்டினான். அவள் நாளைக்கு என்ன டிபன் செய்யலாம் என்கிற யோசிப்பில் இருந்தாள். அவன் அவளைப் பார்த்துவிட்டு கொசு விரட்டியைத் தயார் செய்யத் துவங்கினான். பெருமூச்சுவிட்டான். ஆழ் மனத்திலிருந்து வெளிப்பட்ட ஒரு குரலில், அவள் அவன் முகத்தில் படிந்திருந்த நிழலின் அவஸ்தையை உணர்ந்தாள். ''என்னங்க, டல்லா இருக்கீங்க?'' என்றாள் ப்ரேமா அன்போடு.

அவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். பனியனைக் கழற்றி, கொடியில் போட்டான். ''நம்ம கல்யாணமாகி இருபது நாளாகுது. போனதே தெரியல'' என்றான் முன்னுரை போல்.

''ரொம்ப நாள் ஆன மாதிரி இருக்கு.''

அவன் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். அவள் பிடுங்கினாள். ''என்ன டல்லா இருக்கீங்க? வேலை ஜாஸ்தியா?'' அவன் சிகரெட்டைக் கைப்பற்றி புண்பட்ட மனத்தைப் புகைவிட்டு ஆற்று என்கிற பழமொழியைச் சொன்னான். அவள் 'போங்க' என்று போலியாய் எரிச்சல்பட்டு 'என்ன பிரச்னை உங்களுக்கு? உங்க இன்ப துன்பங்கள்ல எனக்கும் பங்கு வேண்டாமா?'' என்றாள் கரிசனமுடன்.

''ஒண்ணாந்தேதி வருதில்ல...''

''அதுக்கென்ன, அது பாட்டுக்கு வருது'' என்றாள் ப்ரேமா. அவன் சிரித்தான். அதுபோல் அவன் சிரித்து அவள் பார்த்ததில்லை. பயங்கர இரவின் நகர்தலில் அந்தச் சிரிப்பிற்குப் பின்னால் இருக்கும் அர்த்தங்களின் முகங்கள் மாயத்திரையை நீக்கி மெதுவாய் எட்டிப் பார்ப்பதாய் அவள் உணர்ந்தாள்.

''அதுக்கென்னவா?''

''ம்.''

அவன் பதில் பேசாது, அங்குமிங்கும் நடந்தான். அந்தச் சூழலிலும் அவள் அந்தத் தோரணையை நேசித்தாள்.

''ப்ரேமா'' என்றான் தீர்மானமுடன். ''உன்னால சமாளிக்க முடியுமா? நானூறு ரூபாய் வச்சு உன்னால சமாளிக்க முடியுமா?'' என்றான் அவன் பலவீனமான குழந்தையைப் போல. அவள் நாக்கு உலர்ந்து விட்டது. ரத்தம் வற்றிப் போய் விட்ட கோழையைப் போல் தளர்ச்சியுடன் அவள் நின்றிருந்தாள்.

''நானூறா? ரெண்டாயிரம்னு சொன்னாங்க....''

''அப்படியா? சரியா சொல்றதுனா ஆயிரத்து எழுநூறு. அதுல பிடித்தம் எல்லாம் போக ஆயிரத்து சொச்சம் வரும்.. நானூறு, ஐந்நூறு ரூபா ஊருக்கு அனுப்பணும். இங்க வீட்டு வாடகை நானூறு ரூபா கொடுக்கணும். மீதி இருக்கிற நானூறு ரூபாய்ல நீ வீட்டுச் செலவுகளைச் சமாளிப்பியா?''

அவன் அவள் முகத்தைப் பார்த்து ஆறுதல் சொல்லுகிற விதத்தில் ''மெட்ராஸ்ல பாதிப்பேர் இப்படித்தான் இருக்காங்க ப்ரேமா.'' என்றான். ''இன்ஃபேக்ட், நம்மளைவிட மோசமாவே....''

''..........''

''ப்ரேம், நானூறு ரூபாய்ல சமாளிச்சிருவியா? அத்யாவசிய செலவுகள் மட்டும் செய்யணும் நீ.''

''பிறகு தாட்பூட்னு செலவு பண்ணீங்களே!'' என்றாள் அவள் உடைந்து போன குரலில்.

''அதுவா, அது மேரேஜ் ஆன புதுசில எல்லாரும் பண்றதுதான்...'' அவன் சிரித்துக் கொண்டான். அவளும் சிரித்தாள். அந்தச் சிரிப்பிற்கு அவன் என்ன அர்த்தம் கற்பித்துக் கொண்டானோ, என்கிற மாதிரி அவள் பார்த்தாள். அவன் பேசாது, கட்டிலில் படுத்துக் கொண்டான்.

எதிர்காலம் கொடூரமான பூனையின் அலறலோடு யுத்தத்திற்குத் தயாராகித் தனது சாது முகத்தைக் களைந்து, நகங்களை அவளை நோக்கி நீட்டுவதை உணர்ந்தாள். அதன் கூர்மை மெல்லிய இழைகளை அறுக்கத் துவங்கியது.

"கட்சி ஆரம்பிச்சு 33 வருஷங்களா நடக்காத விஷயம்னு தலைவர் ஏதோ சந்தோஷப்பட்டாரே...... என்னது?"


"நம்ம வேட்பாளர் யாரோ ஒருத்தருக்கு 'டெபாஸிட்' திரும்பக் கிடைச்சிருக்காம்!"

– வேதபுரி எஸ். ரமேஷ்



# உங்கள் கண்மணியின் கனவை
# கனவாகவே இருக்க விடாதீர்கள்

## குழந்தைகள் பரிசு வளரும் நிதி உதவி
## கொண்டு கனவை நனவாக்குங்கள்.



உங்கள் கண்மணிக்கு ஒரு பரிசை அளியுங்கள் அவனுடன் கூடவே வளரும் அப்பரிசு. யூனிட் ட்ரஸ்டின் குழந்தைகள் பரிசு வளரும் நிதியில் முதலீடு செய்யுங்கள். உங்கள் கண்மணி 21 வயதாகும் போது நீங்கள் முதலீடு செய்யும் அப்பணம் அவனுக்கு தேவைக்கேற்ப உதவும்.

ஒரு மொத்த தொகையை ஒரே தடவையாக பரிசளிக்கலாம். அல்லது சிறு சிறு தொகையாக வருடா வருடம் செலுத்தலாம். எப்படியாயினும் உங்கள் கண்மணி 21 வயதாகும் போது அவன் லட்சாதிபதியாவதை உறுதி செய்யலாம் (அவனுக்கு தேவையானால் 18 வயதாகும் போது பணத்தை எடுக்கும் அனுகூலமும் உண்டு.)

யூனிட் ட்ரஸ்டின் குழந்தைகள் பரிசு வளரும் நிதி. உங்களது சிறிது ஆலோசனை உங்கள் கண்மணியின் சிறந்த எதிர்காலத்தின் உத்தரவாதம்.

விண்ணப்ப பாரங்கள் யூனிட் ட்ரஸ்ட் கிளைகள், எல்லா பாங்குகள் மற்றும் கலெக்ஷன் சென்டர்களில் அங்கீகரிக்கப்படும்.

விண்ணப்ப பாரம் மற்றும் ப்ரோஷருக்கு ஏதேனும் யூனிட் ட்ரஸ்ட் கிளை முக்கிய பிரதிநிதி அல்லது ஏஜெண்டை அணுகவும்.

குழந்தைகள் பரிசு வளரும் நிதி

~~13%~~ **14% டிவிடெண்ட்**

**+ 3 வருடத்திற்கொருமுறை போனஸ்**

**யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா**

11 மில்லியனிலும் அதிகம் யூனிட்தாரர்களின் சேவையில்.

எல்லா செக்யூரிட்டீஸ் இன்வெஸ்ட்மென்ட்களும் மார்க்கெட் ரிஸ்க் கொண்டவை ஆகும். முதலீடு செய்வதற்கு முன் முதலீட்டு ஆலோசகர் அல்லது முகவரை கலந்தாலோசிக்கவும்.

**Branch Offices:** • Madras Ph: 517101, 517178 • Coimbatore Ph: 210399 • Madurai Ph: 34597 • Trichy Ph: 27774

# பெரிய தம்பி

**பண்ணை :** நல்ல யோசனைதான்.

**கருப்பாயி :** ஆமாங்க... சொத்தும் சொந்தத்துக்குள்ளாறயே இருக்கும்.

**பெரிய :** அறிவு இருக்கா ஒங்களுக்கு! ஏதோ அந்தம்மா அனுபவம் பத்தல, உளர்றாங்க... உடனே தலைய ஆட்டிக்கிட்டு, தெருப்புழுதி பேர்ல எழுதறதா?...

**திருகாணி :** ஆஹா... வெல்லத்துக்குத் தான் என்ன கரிசனம்?!

**பெரிய :** அம்மா தாயே! கொஞ்சம் பேசாம இருக்கீங்களா? நாளைக்கே பெரிய தம்பி வந்து நிக்கிறான்... நான் உங்க ஒரே வாரிசு... சட்டப்படி சொத்து பூரா எனக்குத் தான்றான். கேஸ் போட்டா என்னாகும்?...

**வீணா :** பெரியதம்பி உசுரோடயே இல்லையே! அப்புறம் எப்படி பார்ப்பீங்க. பார்த்தாலும் உங்களுக்கெப்படி அடையாளம் தெரியும்?

**பெரிய :** யார் சொன்னது? குண்டுக் கல்லாட்டம் உயிரோடதான் இருக்கான். நான் பார்த்தேன். அதான் என்னை மாதிரியே அழகா இருப்பானே... அடையாளம் தெரிஞ்சுக்கிட்டேன்.

**கருப்பாயி :** பார்த்தீங்களா? என் மவனை உங்க ரெண்டு கண்ணால பார்த்தீங்களா? எப்போ பார்த்தீக? எப்படி பார்த்தீக?

**பெரிய :** ஒரு நாள் - எனக்குத் தற்கொலை பண்ணிக்கணும்னு ஒரு ஆசை வந்துச்சி...

**கருப்பாயி :** என்ன செஞ்சீக?

**பெரிய :** டீவி பொட்டிக்கு முன்னாடி போய் உக்கார்ந்தேன்... டெர்னு உலாவரும் ஒளிக்கதிர்னு காட்னாங்க... அதுல டீவிடிரில ஆள் எடுத்தத விவரமா காட்னாங்க... ஆனா விட்டு விட்டு காட்னாங்க...

**பண்ணை :** ஏன் அப்படி?

**பெரிய :** நடுப்பற தடங்கலுக்கு வருந்துகிறோம்லாம் வராதா? அதான்! அதுல பாத்தா பெரிய தம்பி கைல துப்பாக்கியோட தப்புத் தப்பா லெப்ட் ரைட் போட்டுட்டு இருந்தான்! ஜெயில்லயா இருந்தவன் ஜெய் ஜவானாயிட்டான்!

**கருப்பாயி :** துப்பாக்கிய எந்தப் பக்கம் வக்கக் கடறதுக்னு கூடத் தெரியாதே அவனுக்கு!

**பெரிய :** அவன் எந்தப் பக்கம் வக்கச்

## காட்சி - 19

(பண்ணை வீடு)

**பண்ணை :** என்னம்மா இது! விளையாட்டு வினை ஆயிடுச்சே!... அதிர்ச்சியில வாத்யாருக்குப் பூர்வ சன்மமே இல்ல யாபகத்துக்கு வந்திடுச்சாம்!... வெல்லக் கவுண்டர்னு ஒரு ஆள் நம்ம கிராமத்துல ரொம்ப வருசத்துக்கு முன்னால செத்தான்... அவனோட மறுபிறவியாமே பூவரசன்!..

**வீணா :** வெல்லக் கவுண்டரா!...

**பெரிய :** ஆமாம் அச்சு வெல்லக் கவுண்டரேதான்! ஒங்க ஆளுங்க அடிக்க வந்தாங்க. அந்த அதிர்ச்சியில அம்னீஷியா போயிடுச்சு. போன ஜென்மமே வந்திடுச்சு.

**பண்ணை :** உங்களுக்குப் பழைய ஞாபகம் வந்தது தப்பில்ல... செத்துப் போன முனியாண்டி மவன் கண்ல மட்டும் பட்றாதீங்க... அவங்கப்பனை நீங்க துடிக்கத் துடிக்க கொன்னதுக்காக உங்களை ஒரே சீவா சீவிடப் போறான்!

**பெரிய :** அச்சு வெல்லக் கவுண்டர் வாழ்க்கைல இவ்ளோ மர்மங்களா?

**பண்ணை :** அம்மாடி.... இந்தாளோட நீ குடித்தனம் பண்றது கஸ்டம்... இப்ப இவன் ஒன் புருசன் பூவரசனா இல்ல... வேற எவனாவோ இருக்கான்... இங்க பாத்தியா, அச்சு வெல்லக் கவுண்டரும் இப்படித்தான் பட்டை பெல்டை மாட்டிக்கிட்டுத் திரி வாரு.

**வீணா :** நான் குடுத்து வச்சது அவ்ளோதான்!...

**பெரிய :** என்னோட வாழ இப்படித் துடிக்கிறாங்களே... யார் இந்த அபலை?

**திருகாணி :** ஏய்யா இப்படி முச்சூடும் மறந்துட்டு உயிர எடுக்கற?

**வீணா :** அவர விட்டுடுங்க! வேற ரூட்ல வரேன். ஆமா... ஒங்களை ஒண்ணு கேக்கணும்னு நினைச்சேன்... உங்க புள்ளை பெரிய தம்பிதான் ஊரை விட்டே ஓடிட்டாரு. சொத்துபத்துன்னு ஏகப்பட்டது இருக்கு.... இதை எல்லாம் ஒங்களுக்கப் புறம் ஆண்டு அனுபவிக்கப் போறது யாரு?

**பண்ணை :** கோயில் குளத்துக்கு எழுதி வைக்க வேண்டியதுதான்...

**வீணா :** ஏன்?... பெரியதம்பியால பாதிக்கப்பட்ட தெருப்புழுதி பேர்ல சொத்தை எழுதி வைச்சிடுங்க..

**எஸ்.வி.சேகர்**

வசனம்: வெங்கட்

கட்டாலும் நாட்டுக்கு நன்மைதான்!

**வீணா :** இத நீங்க எப்பப் பார்த்தீங்க?

**பெரிய :** அது ஆச்சு... நாலஞ்சு மாசம்...

**வீணா :** நீங்கதான் இப்ப வெல்லக் கவுண்டராச்சே... இதெப்படி கரெக்டா ஞாபகம் இருக்கு?

**பெரிய :** வெல்லக்கவுண்டரா இருந்தா என்ன...? பூவரசனுக்குள்ள வெல்ல கவுண்டர்! வெல்ல கவுண்டருக்குள்ள பூவரசன்... நினைவுகள் க்ளாஷ் ஆகிட்டே தான் இருக்கும்...

**பண்ணை :** இன்னும் ஒரு அடி கபாலத்துல குடுத்தா சரியாயிடும்!

**பெரிய :** சொல்ல முடியாது! அதுக்கு முந்தின ஜென்ம வாழ்க்கை கூட ஞாபகத்துக்கு வரலாம்!

**கருப்பாயி :** எல்லாம் ஞாபகத்துக்கு வருது... இதோட குடுத்தனம் நடத்தினது மட்டும் வராது!... என்ன வியாதியோ?

**பெரிய :** அம்னீசியாலேயே ஒரு பிரிவு கம்னீசியா! ஹா ஐடியா வந்திடுச்சு.. இல்ல ஞாபகம் வந்திடுச்சு! இதோ பார்த்தீங்களா?

**பண்ணை :** என்ன அது?

**பெரிய :** லெட்டர்!...

**கருப்பாயி :** யார் போட்டிருக்காங்க?

**பெரிய :** போட்டது போஸ்ட்மேன்.

**பண்ணை :** எழுதி இருக்கிறது...?

**பெரிய :** பெரியதம்பி!

**கருப்பாயி :** என்ன... பெரியதம்பி கடிதாசி போட்டுருக்கானா?

**பண்ணை :** ஒங்களுக்கு எப்படி கெடச்சுது?

**பெரிய :** பஞ்சாயத்துப் பேருக்கு வந்தது. நான்தான் பிரிச்சேன்....

**வீணா :** எங்க, லட்டரைக் காட்டுங்க!

**பெரிய :** மிலிட்டரி ரகசிய பாஷைல எழுதி இருக்கான்! உங்களுக்குப் புரியாது!

**வீணா :** உங்களுக்கு மட்டும் புரியுமா?

**பெரிய :** நான் கொஞ்ச நாள் மிலிடிரில இருந்தேன். ஊர்ல யாரை வேணா கேட்டுப் பாரு.

**கருப்பாயி :** கொஞ்சம் கம்மா இரும்மா. அடக்கமில்லாம அவருகிட்ட வாயடிக்கிறயே.

**பண்ணை :** நீங்க படிங்க.

**பெரிய :** 'அன்புள்ள அம்மாவுக்கும் அவள் புருஷன் பெரிய பண்ணைக்கும் எழுதிக் கொள்வது. நான் லீவுக்குக் கிராமத்துக்கு வருகிறேன். துப்பாக்கியோடு வருகிறேன். ரேஷன் கார்டை எடுத்து வைக்கவும். துப்பாக்கிக்கு ரவை வாங்க வேண்டும். எதற்கும் கழுதை கல்யாணிக்குக்

**"இங்க பாத்தியா! அச்சு வெல்லக் கவுண்டரும் இப்படித்தான் பட்டை பெல்டை மாட்டிக்கிட்டுத் திரிவாரு..."**



குண்டு துளைக்காத ரவிக்கை ஒன்றைப் போட்டு விடவும். வந்ததும் முதல் காரியமாகப் பஞ்சாயத்துத் தீர்ப்பை வாபஸ் வாங்க வேண்டும். இல்லை, நான் உன்னோட புருஷன் மாதிரி புத்தியில்லா மிருகமாயிடுவேன்.

பின் குறிப்பு : சொத்து விஷயம் நேர்ல பேசிக்கலாம். கைவசம் ஆறு குண்டுகள் உள்ளன.

அன்புடன்
மேஜர் பெரியதம்பி

பி.கு. : இதைப் படித்தவுடன் கிழித்து விடவும்

கருப்பாயி : பெரியதம்பீ வாரானா! ஏ! குப்பம்மா முனியம்மா சனியம்மா!...

பண்ணை : வாணவேடிக்கைக்கு ஏற்பாடு பண்ணுங்கல! பெரீதம்பீ வாரானாம்!...

(போகிறார்கள். குலவை சப்தம் கேட்கிறது)

(தனியாக வீணா, பெரியதம்பி....)

பெரிய : என்னம்மா கண்ணு....! அம்பியா... எனக்கா?... நாளைக்கு இந்த வேஷத்தைக் கலைச்சிட்டுப் பெரிய தம்பியா வரப் போறேன். அப்ப உன் கதி....

வீணா : அதை நாளைக்குப் பார்க்கத்தானே போறீங்க.

பெரிய : இந்த சண்டை ஓயவே ஓயாது.

(தொடரும்)

படங்கள் : யோகா



## அருள்வாக்கு

சுத்த உபவாஸம் என்றால் முழுப் பட்டினி என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். 'உபவாஸம்' என்றால் 'கூட வஸிப்பது'. பகவானோடு கூட, அவனுக்குப் பக்கத்தில் ஒட்டிக் கொண்டு வஸிப்பதுதான் உபவாஸம். அன்றைக்கு வயிற்றில் ஒன்றையும் தள்ளாவிட்டால்தான் அப்படி அவனோடு கூட, கிட்டக்க வஸிக்க முடியும். மனஸ் அவன் கிட்டக்கவே கிடக்க வேண்டுமானால் அதற்கு முதலில் வயிறு வெறுமனே கிடக்கணும். சாப்பிட்டால் வயிற்றிலே 'கட புடா'. வேலை செய்ய முடிவதில்லை. மனஸையும் எதிலேயும் நிறுத்த முடிவதில்லை. வயிறு அடைசலில்லாமலிருந்தால்தான் நன்றாகப் பிராணாயாமம் பண்ணி மனஸை சுத்தி செய்து கொண்டு ஒருமுகமாக நிறுத்த முடியும். பெரிசாக மூச்சடக்கிக் கும்பகம் பண்ண வேண்டுமென்றில்லாவிட்டாலும், தடைப்படாமல் தீர்க்கமாக ச்வாசம் விடும்படியிருந்தால்தான் மனஸ் தியானத்தில் நிற்கும். வயிற்றில் கனம் இருந்தால் இப்படி ஃப்ரீயாக ச்வாஸிக்க முடிவதில்லை. இதற்காகத்தான் உடம்பை நெற்றுப் போல் ஆக்கிக் கொண்டு அதனால் ச்வாஸத்தை ஃப்ரீயாகவும் மனஸை லைட்டாகவும் பண்ணிக் கொண்டு நன்றாக ஈச்வர தியானத்தில் ஈடுபடும் பொருட்டு, எப்போதுமே ஆஹாரத்தை லகுவாக வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், பக்ஷத்துக்கு ஒருநாள் சுத்தோபவாஸம் அநுஷ்டிக்க வேண்டுமென்றும் சாஸ்திரம் விதிக்கிறது.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

# AROOR
## INTEGRATES FINANCE CORPORATION

Admn. Office: No. 6, Kannadasan Salai, T.Nagar, Madras-600 017. **Ph: 442965**

**LEASING ■ HIRE PURCHASE ■ DEPOSIT ■ PROPERTY LOAN**

## பிக்சட் டெபாசிட் திட்டங்கள்

| திட்டம் A: மாத வருமான திட்டம் | |
|---|---|
| காலம் | வட்டி விகிதம் |
| 12 மாதங்கள் | 18% |
| 24 மாதங்கள் | 19% |
| 36 மாதங்கள் | 21% |

### பென்சன் தாரர்களுக்கு 1% கூடுதல் வட்டி

ஒரு வருட டெபாசிட்டிற்கு 2 சதவீதமும், இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட டெபாசிட்டுகளுக்கு 4 சதவீதமும் ஊக்கத்தொகை அளிக்கப்படுகின்றது.

| திட்டம் B: முதலீடு பெருகிடும் திட்டம் | | |
|---|---|---|
| காலம் | ஆரம்ப முதலீடு | கால முடிவில் பெருகும் தொகை |
| 25 மாதங்கள் | 1000/- | 1,442/- |
| 36 மாதங்கள் | 1000/- | 1,683/- |
| 48 மாதங்கள் | 1000/- | 1,986/- |
| 60 மாதங்கள் | 1000/- | 2,338/- |

### உங்கள் முதலீடு 48 மாதங்களில் இரு மடங்காகின்றது

### சிறப்பு அம்சங்கள்

■ முதலீட்டை திரும்பப்பெற உத்திரவாதம் அளிக்கப்படுகின்றது ■ மாதாந்திர வட்டி ■ வட்டிக்கும், முதலீட்டை திரும்ப பெறுவதற்கும் முன் தேதியிட்ட காசோலைகள் வழங்கப்படுகின்றன ■ வெளியூர்களிலுள்ள டெபாசிட்தாரர்களுக்கு வட்டியும், முதலீட்டை திரும்ப பெறுதலும் பாங்க் டிராப்ட் (D.D.) மூலம் வழங்கப்படுகின்றது ■ உங்கள் முதலீடுகள் பாதுகாப்பான முறையில் மறுமுதலீடு செய்யப்படுகின்றது.

**ஆரூர்**
**இன்டகரேட்ஸ் பைனான்ஸ் கார்ப்பொரேஷன்**

நெ.6. கண்ணதாசன் சாலை, தி.நகர். சென்னை-600 017. போன்: 442965

WE SERVE YOU TO GROW MORE

EXELADS • AIFC 098 • 92



# பாலம்

●● ICWAI படிக்க விருப்பம். தென்னாற்காடு மாவட்டத்தில் பயிற்சி தரும் நிறுவனம் அல்லது தனிநபர்கள் உண்டா? தொடர்பு கொண்டால் நன்றியுடன் கட்டணம் செலுத்திப் பயிற்சி பெறுவேன்.

– ஆர்.எஸ். காமராஜ்,
43, பள்ளி வாசல் தெரு,
திருக்கோவிலூர் – 605 757

●● அருணகிரி நாதர் பிறந்த முள்ளன்றத்தில் பிறந்த நான், அவரைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்து வருகிறேன். அவர் தொடர்பான நூல்கள் அல்லது தகவல்கள் கொடுத்து உதவினால் பயன்படுத்திக் கொண்டு ஜாக்கிரதையாகத் திருப்பித் தந்து விடுவேன்.

– வி. சங்கர சாஸ்திரி,
83 E : 2C, மணலி புது நகர்,
சென்னை – 600 103.

●● டீவி ஆன்டென்னா, மற்றும் பூஸ்டர் செய்வதில் மிகவும் தேர்ச்சி பெற்றுள்ளேன். முதலீடு செய்து தொழில் தொடங்க எண்ணுகிறவர்களின் கருத்தறிய விரும்புகிறேன்.

– கே. கோதண்டராமன்,
49, சாணாத்தியம்மன் கோவில் வீதி,
சுவால்பேட்டை, அரக்கோணம்,
வ.ஆ. (மாவ) – 631 001.

●● *ஹோமியோபதி மருத்துவம் பற்றி டாக்டர் வி.எஸ். சுப்பிரமணியம் '70 களில் எழுதிய ''மருந்து காண் ஏடு'', ''அனுபவத்திரட்டு'', ஆகிய நூல்கள் வைத்திருப்போர் தயவு செய்து உடனே தொடர்பு கொள்ளவும். விலைக்கு வாங்கிக் கொள்கிறேன். அல்லது பிரதி எடுத்துக் கொண்டு திருப்பித் தந்து விடுகிறேன்.

– டாக்டர் விஜயஸ்ரீ முனிகிருஷ்ணன்,
230, கி.வோ. துணை மின் நிலையம்,
தமிழ் நாடு மின் வாரியக் குடியிருப்பு,
தேனி – 626 531.

●● இருபத்தைந்து தையல் மிஷின்களுடன் சிறிதாகச் சொந்தத்தில் Export Garment Unit தொடங்க விரும்புகிறேன். முக்கியமாக கடிதார். சின்ன ஜூகிட் விலைக்குக் கிடைக்குமா?

– திருமதி வில்லி ராணி,
16, L4/1, 28 வது குறுக்கு தெரு,
பெசன்ட் நகர், சென்னை – 600 090.

●● நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி நுகர்வோருக்கு உள்ள உரிமைகள், நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் அதிகாரங்கள், செயல்பாடு முறைகள் முதலியவற்றை விளக்கும் தமிழ் நூல் உள்ளதா? யாரிடமேனும் இருந்தால் விலை குறிப்பிட்டு எழுதினால் உதவியாயிருக்கும்.

– எம். அருணாசலம்,
3/50, இலுப்பக்குடியார் தெரு,
கோனாபட்டு – 622 503.

●● மருந்தினால் குணமாகாத நோய்களுக்கு இலவச உளவியல் சிகிச்சை அளிக்கப்படும். இலவச ஆலோசனை - சிகிச்சை பெறத் தொடர்பு கொள்ளவும்.

– ஜி. மகேசுவரி,
Programme Co-ordinator,
உளவியல் ஆலோசகர்கள்,
6/16, ப.ப. செட்டியார் தெரு,
ரெட்ஃபீல்ட்ஸ், கோவை – 641 045.

●● திருச்செங்கோடு தேன் பண்ணையில் சேகரிக்கப்படும் சுத்தமான தேனை விற்பனை செய்கிறேன். சரியான விற்பனைத் தொடர்பு இல்லாதிருப்பதால் விற்பனையில் சுணக்கம். குடிசைத் தொழிலுக்கு ஆதரவு அளிக்க விரும்புவோர் எழுதவும். மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உள்ளது.

– டி.வி. ராமநாதன்,
34, கோட்டை வீதி,
திருநின்றவூர் (அஞ்சல்),
602 024.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பு ஏற்க இயலாது.)

# சிவகாமியின் சபதம்

அமரர் **கல்கி**

## முப்பதாம் அத்தியாயம்

## வாதாபிப் பெரும் போர்

வெகு காலமாய் இல்லாத வழக்கமாக அஜந்தாவில் கலை விழா நடந்து. அரை குறையாக முடிவுற்று ஒரு மாதத்துக்கு மேல் ஆயிற்று.

அந்த ஒரு மாதமும் வடக்கேயிருந்து வாதாபியை நோக்கி விரைந்து வந்த சளுக்க சைனியத்துக்கும் தெற்கேயிருந்து படையெடுத்து வந்த பல்லவ சைனியத்துக்கும் ஒரு பெரிய போட்டிப் பந்தயம் நடந்து கொண்டிருந்தது.

வாதாபியை முதலில் யார் அடைவது என்கின்ற அந்த விரைவுப் பந்தயத்தில் பல்லவ சைனியமே வெற்றியடைந்தது.

வழியில் யாதொரு எதிர்ப்புமின்றித் தங்கு தடையில்லாமல் பொங்கி வரும் சமுத்திரத்தைப் போல் முன்னேறி வந்த அந்தப் பல்லவ சேனா சமுத்திரமானது, சளுக்க சைனியம் வடக்கே இன்னும் ஆறு காத தூரத்தில் இருக்கும்போதே வாதாபியை அடைந்து அந்த மாபெரு நகரத்தின் கோட்டை மதிலை நாலாபுறமும் சூழ்ந்து கொண்டது.

திடீரென்று முன்னெச்சரிக்கையில்லாமல் நேர்ந்த அந்தப் பெரு விபத்தினால் வாதாபி மக்கள் கதிகலங்கிப் போனார்கள்.

புலிகேசிச் சக்கரவர்த்தியின் வீர சௌரிய பராக்ரமங்களையும் அவருடைய புகழானது கடல்களுக்கப்பாலுள்ள தூர தூர தேசங்களிலெல்லாம் பரவியிருப்பதையும் எண்ணிப் பெருமிதத்துடனிருந்த வாதாபியின் மக்கள் தங்கள் நாட்டின் மீது இன்னொரு நாட்டு அரசன் படையெடுத்து வரக் கூடும் என்று கனவிலும் கருதவில்லை.

சற்றும் எதிர்பாராத சமயத்தில் களங்கமற்ற வானத்திலிருந்து விழுந்த பேரிடி போல் வந்த பல்லவப் படையெடுப்பு அவர்களுக்கு பிரமிப்பையும் திகைப்பையும் உண்டாக்கியது.

நகரில் அச்சமயம் சக்கரவர்த்தி இல்லை என்பதும் கோட்டைப் பாதுகாப்புக்குப் போதுமான சைனியமும் இல்லையென்பதும் ஜனங்கள் எல்லோருக்கும் தெரிந்திருந்தன. இதனால் நகர மாந்தரில் பெரும்பாலோர் என்றும் அறியாத பீதிக்கு உள்ளாயினர்.

பௌத்தர்களிடம் விரோத பாவம் கொண்டிருந்த சமணர்கள், சைவர்கள், சாக்தர்கள் ஆகியோர், ''அஜந்தாக் கலை விழா உண்மையிலேயே பௌத்தர்களின் சதியாலோசனைச் சூழ்ச்சி'' என்று பேசிக் கொண்டார்கள்.

பொது மக்களின் கோபத்தாக்குதலுக்கு உள்ளாகாமல் பௌத்த விஹாரங்கள், பௌத்த மடங்கள் ஆகியவற்றைக் காப்பாற்றும் பொருட்டு வாதாபிக் கோட்டைத்

தலைவன் பீமசேனன் மேற்படி விஹாரங்களுக்கும் மடங்களுக்கும் விசேஷக் காவல் போட வேண்டியதாயிற்று.

அதோடு ஜனங்களின் பீதியைப் போக்கித் தைரியம் ஊட்டுவதற்காகச் சக்கரவர்த்தியிடமிருந்து அவசரத் தூதர்கள் மூலமாக வந்த திருமுக ஓலையை வாதாபி நகரின் நாற்சந்திகளில் எல்லாம் தளபதி பீமன் வாசிக்கப் பண்ணியிருந்தான்.

சக்கரவர்த்தி, அந்தத் திருமுகத்தில் நர்மதைக் கரையிலுள்ள மாபெரும் சளுக்கர் சைனியத்துடன் தாம் வாதாபியை நோக்கி விரைந்து வந்து கொண்டிருப்பதாகவும், வேங்கி நாட்டிலிருந்து இன்னொரு பெருஞ் சைனியம் வந்து கொண்டிருப்பதாகவும் ஒரு வேளை தாம் வருவதற்குள்ளே பல்லவ சைனியம் வாதாபியை அடைந்து முற்றுகையிட்டு விட்டால் அதற்காக நகர மக்கள் மனம் கலங்க வேண்டாம் என்றும், பல்லவ சைனியத்தை நிர்மூலம் செய்து வாதாபியைக் கூடிய சீக்கிரம் முற்றுகையிலிருந்து விடுதலை செய்வதாகவும் உறுதி கூறியிருந்தார்.

மேற்படி திருமுகத்தை நாற்சந்திகளில் படிக்கக் கேட்ட பிறகு வாதாபி மக்கள் ஒருவாறு பீதி குறைந்து தைரியம் பெற்றார்கள்.

நர்மதை நதிக்கரையிலிருந்த சளுக்கப் பெரும் படையுடன் புலிகேசிச் சக்கரவர்த்தி வாதாபிக்கு நாலு காத தூரத்தில் வந்து சேர்ந்த போது தமக்கு முன்னால் பல்லவ சைனியம் வாதாபியை அடைந்து கோட்டையைச் சூழ்ந்து கொண்டது என்ற விவரம் அறிந்தார். உடனே பிரயாணத்தை நிறுத்திக் கொண்டார். வேங்கி சைனியம் வழியிலே பல காடு மலை நதிகளைக் கடந்து வர வேண்டியிருந்தபடியால் அது வந்து சேர இன்னும் சில காலம் ஆகும் என்றும் தெரியவந்தது. இந்த நிலைமையில் புலிகேசிச் சக்கரவர்த்தி தமது மந்திரிகளையும் படைத் தலைவர்களையும் கலந்தாலோசித்து உடனே போர் தொடங்காமல் சில நாள் காத்திருக்க முடிவு செய்தார். வேங்கி சைனியமும் வந்து சேர்ந்த பிறகு பல்லவ சைனியத்தை ஒரு பெருந்தாக்காகத் தாக்கி நிர்மூலம் செய்து விடுவது என்றும், அது வரையில் அப்போது வந்து சேர்ந்திருந்த இடத்திலேயே தங்குவது என் று ம் தீர்மானித்திருந்தார்.

ஆனால், அவருடைய தீர்மானங்களை நிறைவேற்றுவதற்குப் போர்க் கலையில் மகா நிபுணர்களான மாமல்லச் சக்கரவர்த்தியும் சேனாபதி பரஞ்சோதியும் இடங் கொடுக்கவில்லை.

முதலிலே வாதாபிக் கோட்டையைத் தாக்குவதா அல்லது புலிகேசியின் தலைமையிலுள்ள சளுக்கப் பெரும் படையைத் தாக்குவதா என்ற விஷயம் பல்லவ சேனைத் தலைவர்களின் மந்திராலோசனைச் சபையில் விவாதிக்கப்பட்டது.

வந்த காரியம் வாதாபியைக் கைப்பற்றுவதேயாதலால் உடனே கோட்டையைத் தாக்க வேண்டுமென்று மானவன்மரும் அச்சுதவர்மரும் அபிப்பிராயப்பட்டார்கள்.

வேங்கி சைனியம் வருவதற்குள்ளே புலிகேசியைத் தாக்கி ஒழித்து விட வேண்டும் என்றும், வாதாபிக் கோட்டை எங்கேயும் ஓடிப் போய் விடாதென்றும், அதன் முற்றுகை நீடிக்க நீடிக்கப் பிற்பாடு அதைத் தாக்கிப் பிடிப்பது சுலபமாகி விடுமென்றும் சேனாபதி பரஞ்சோதி கூறினார்.

ஒற்றர் தலைவன் சத்ருக்னன் சேனாபதியை ஆதரித்தான்.

மாமல்லரும் அந்த யோசனையையே முடிவாக ஒப்புக் கொண்டார்.

எனவே, வாதாபிக் கோட்டையின் முற்றுகைக்கு ஒரு சிறு படையை மட்டும் நிறுத்தி விட்டு, பல்லவ சைனியத்தின் மற்றப் பெரும் பகுதி வடக்கு நோக்கிக் கிளம்பிற்று.

இதையறிந்த புலிகேசிச் சக்கரவர்த்தி இனித் தாம் பின்வாங்கிச் சென்றால் சளுக்க சாம்ராஜ்யத்தின் மதிப்பு சின்னாபின்னமாகி விடும் என்பதை உணர்ந்து போருக்கு ஆயத்தமானார்.

வாதாபிக்கு வடக்கே மூன்று காத தூரத்தில் இரு பெரும் சைனியங்களும் கைகலந்தன.

அந்தக் காட்சியானது கீழ் சமுத்திரமும் மேல் சமுத்திரமும் தங்குதடையின்றிப் பொங்கி வந்து ஒன்றோடொன்று மோதிக் கலந்ததைப் போலிருந்தது.

மூன்று பகலும் இரவும் கோரமான யுத்தம் நடந்தது.

ஆயிரம் பதினாயிரம் வீரர்கள் வாளால் வெட்டுண்டும் வேல்களால் குத்துண்டும் போர்க்களத்தில் மாண்டு விழுந்தார்கள்.

வீர சொர்க்கம் அடைந்தவர்களின் சவங் கள் - கால் வேறு கை வேறு தலை வேறான உயிரற்ற உடல்கள், - போர்க்களத்தில் மலை மலையாகக் குவிந்தன.

இறந்த யானைகளின் உடல்கள் ஆங்காங்கு கருங் குன்றுகளைப் போல் காட்சி தந்தன.

மனிதர் உடல்களின் மீது குதிரைகளின் உடல்களும், குதிரைகளின் சவங்கள் மீது மனிதர்களின் பிரேதங்களுமாகக் கலந்து கிடந்தன.

மரணாவஸ்தையிலிருந்த மனிதர்களின் பரிதாப ஓலமும் யானைகளின் பயங்கரப் பிளிறலும் குதிரைகளின் சோகக் கனைப்பும் கேட்கச் சகிக்காத கோரப் பெருஞ் சப்தமாக எழுந்தது.

போர்க்களத்திலிருந்து இரத்த ஆறுகள் நாலா பக்கமும் பெருக்கெடுத்துப் பாய்ந்து ஓடின.

அந்த உதிர நதிகளில் போர் வீரர்களின் வெட்டுண்ட கால் கைகள் மிதந்து சென்றது பார்க்கச் சகிக்காத கோரக் காட்சியாயிருந்தது.

லட்சக்கணக்கான வீரர்களும் ஆயிரம் பதினாயிரக்கணக்கான யானைகளும் குதிரைகளும் ஈடுபட்டிருந்த அந்த மாபெரும் யுத்தத்தை நடந்தது நடந்தபடி வர்ணிப்பது நம்மால் இயலாத காரியம்.

வால்மீகியையும் வியாசரையும் ஹோமரையும் கம்பரையும் போன்ற மகா நாடக ஆசிரியர்களுக்குத்தான் அதன் வர்ணனை சாத்தியமாகும்.

போரின் ஆரம்பத்திலிருந்தே ஒருவாறு கட்சிகளின் பலம் தெரிந்து விட்டது. போர்க் கலையின் நுட்பங்களை அறிந்தவர்கள், போரின் முடிவு என்ன ஆகும் என்பதை ஊகித்துணர்வதும் சாத்தியமாயிருந்தது.

வாதாபிக்கருகில் தங்கிச் சிரம பரிகாரம் செய்து கொண்டு பூரண பலத்துடனும் அளவில்லா உற்சாகத்துடனும் போரில் ஈடுபட்ட பல்லவ சைனியத்தின் பெருந் தாக்குதலுக்கு முன்னால், நெடுந்தூர இடைவிடாப் பிரயாணத்தினால் களைப்புற்றிருந்த சளுக்க சைனியம் போர்க்களத்தில் நிற்பதற்கே திணறியது.

சளுக்க சைனியத்தின் பிரதான யானைப் படை வேங்கியில் இருந்தபடியால் அது வந்து சேராதது சளுக்க சைனியத்தின் பலக் குறைவுக்கு முக்கிய காரணமாயிருந்தது.

மூன்றாம் நாள் காலையில் பல்லவ சைனியத்தின் வெற்றியும் சளுக்க சைனியத்தின் தோல்வியும் சர்வ நிச்சயமாகத் தெரிந்து விட்டது.

அன்று மத்தியானம் சளுக்க தளபதிகளும் மந்திரிகளும் புலிகேசிச் சக்கரவர்த்தியைச் சூழ்ந்து கொண்டு, சாம்ராஜ்யத்தின் நன்மைக்காக அவர் பின்வாங்கிச் சென்று எங்கேயாவது ஒரு பத்திரமான இடத்தில் வேங்கி சைனியம் வந்து சேரும் வரையில் காத்திருக்க வேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார்கள்.

அதைத் தவிர வேறு வழியில்லையென்பதைக் கண்டு சக்கரவர்த்தியும் அதற்குச் சம்மதித்தார். சேதமாகாமல் மீதமிருந்த குதிரைப் படையின் பாதுகாப்புடன் அன்றைய தினம் அஸ்தமித்ததும் சக்கரவர்த்தி பின்வாங்கிச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனால், மேற்படி முடிவைக் காரியத்தில் நிறைவேற்ற அன்று சாயங்காலம் ஒரு பெரும் இடையூறு ஏற்பட்டது. மானவன்மரால் விசேஷப் போர்ப் பயிற்சி அளிக்கப்பட்டிருந்த பல்லவக் களிற்றுப் படையைக் கடைசியாக உபயோகிப்பதென்று வைத்திருந்து அன்று சாயங்காலம் ஏவி விட்டார்கள்.

ஐயாயிரம் மத்தகஜங்கள் துதிக்கைகளிலே இரும்பு உலக்கையைப் பிடித்துச் சுழற்றிக் கொண்டு சளுக்கர் குதிரைப் படை மேல் பாய்ந்த போது, பாவம், அந்தக் குதிரைகள் பெரும் பீதியடைந்து நாலா புறமும் சிதறி ஓடின. அந்தக் குதிரைகளை விட வேகமாக எஞ்சியிருந்த சளுக்க வீரர்கள் ஓடினார்கள்.

அவ்விதம் புறங்காட்டி ஓடிய சளுக்க வீரர்களைப் பல்லவ வீரர்கள் துரத்திக் கொண்டு ஓடினார்கள்.

அந்த மூன்றாம் நாள் இரவு முழுவதும் ஓடுகிற சளுக்க வீரர்களைப் பல்லவ வீரர்கள் துரத்திச் சென்று வேட்டையாடுதல் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மறுநாள் சூரியோதயமான போது, மூன்று தினங்கள் கடும் போர் நடந்த பயங்கர யுத்த களத்தில் இறந்து போன சளுக்கரின் உடல்களைத் தவிர உயிருள்ள சளுக்கர் ஒருவராவது காணப்படவில்லை.

வெற்றி முரசுகள் முழங்க, சங்கங்கள் ஆர்ப்பரித்து ஒலிக்க, ஜயகோஷங்கள் வானளாவ, ஒரே கோலாகலத்துக்கு மத்தியில் பல்லவ சக்கரவர்த்தியும் அவருடைய தளபதிகளும் ஒருவருக்கொருவர் வாகை மாலை சூடியும் வாழ்த்துக் கூறியும் பல்லவ சேனை அடைந்த 'மாபெரும் வெற்றியைக் கொண்டாடினர். எனினும், அவ்வளவு கோலாகலமான கொண்டாட்டங்களுக்கு மத்தியில் அவர்களுடைய உள்ளத்தில் ஒரு சிறு கவலை குடிகொண்டிருந்தது. அது சளுக்க சக்கரவர்த்தி புலிகேசியின் கதி என்ன வாயிற்று என்ற கவலைதான். வாதாபிச் சக்கரவர்த்தி போர்க் களத்தில் இறுதி வரை நின்று போராடி உயிரிழந்து விழுந்து வீர சொர்க்கம் அடைந்தாரா, அல்லது சளுக்க வீரர் பலர் புறங்காட்டி ஓடிப் போனதைப் போல் அவரும் ஓடி விட்டாரா என்பது தெரியவில்லை. போர்க்களத்தில் அவர் விழுந்திருந்தால் மாபெருஞ் சக்கரவர்த்திக்குரிய மரியாதைகளை அவருடைய உடலுக்குச் செய்து கௌரவிக்க வேண்டும். ஒரு வேளை அவர் ஓடிப் போயிருந்தால், மறுபடியும் படை திரட்டிக் கொண்டு போருக்கு வரக்கூடுமல்லவா?

இப்படி நடந்திருக்குமா அப்படி நடந்திருக்குமா என்று வெகு நேரம் விவாதித்த பிறகு, அதைப் பற்றி மேலும் விவாதிப்பதில் பயனில்லையென்ற முடிவு ஏற்பட்டது. சத்ருக்னனுடைய தலைமையில் போர்க்களமெல்லாம் நன்றாகத் தேடிப் பார்த்துப் புலிகேசியின் உடல் கிடைத்தால் எடுத்து வருவதற்கு ஏற்பாடு செய்து விட்டு மாமல்லரும் மற்றவர்களும் வாதாபியை நோக்கித் திரும்பினார்கள்.

## முப்பத்தோராம் அத்தியாயம்.

# பிக்ஷுவின் சபதம்

வாதாபிக் கோட்டைக்கு வெளியே சற்று தூரத்தில் காபாலிக மதத்தாரின் பலி பீடம் இருந்தது என்பதை நேயர்கள் அறிவார்கள்.

வாதாபிப் பெரும் போர் முடிவுற்றதற்கு மறுநாள் இரவு அந்த காபாலிகர் பலிபீடத்துக்குச் சமீபத்தில் ஒரு பயங்கர சோக நாடகம் நடைபெற்றது.

கிழக்கே அப்போதுதான் உதயமாகிக் கொண்டிருந்த சந்திரனின் கிரணங்கள் மரங்களின் வழியாகப் புகுந்து வந்து மொட்டை மொட்டையாக நின்ற பாறைகள் மீது விழுந்த போது, அந்தக் கறுத்த பாறைகளும் அவற்றின் கறுத்த நிழல்களும் கரிய பெரிய பேய்களின் உருவங்களைக் கொண்டு அந்தப் பாறைப் பிரதேசத்தைப் பார்ப்பதற்கே பீதிகரமாகச் செய்து கொண்டிருந்தன.

பாறைகளின் ஓரமாகச் சில சமயம் நிழல்களில் மறைந்தும் சில சமயம் நிலா ஒளியில் வெளிப்பட்டும் ஒரு கோரமான பெண் உருவம் வந்து கொண்டிருந்தது. அந்த உருவம் தோளின் மீது இன்னொரு உடலைச் சுமந்து கொண்டு நடந்தது.

அந்த உடல் விறைப்பாகக் கிடந்த விதத்திலிருந்து அது உயிரற்றது என்பதை எளிதில் ஊகிக்கலாம்.

அவ்விதம் தோளிலே பிரேதத்தைச் சுமந்து கொண்டு நடந்த பெண் உருவமானது நிலா வெளிச்சத்தில் தோன்றிய போது அதன் நிழல் பிரம்மாண்ட ராட்சஸ வடிவங் கொண்டு, ஒரு பெரும் பூதம் தான் உண்பதற்கு இரை தேடி எடுத்துக் கொண்டு வருவது போலத் தோன்றியது.

சற்று அருகில் நெருங்கிப் பார்த்தோமானால், அந்தப் பெண் உருவம் கற்பனையில் உருவகப்படுத்திக் கொள்ளும் பேயையும் பூதத்தையும் காட்டிலும் அதிகப் பயங்கரத் தோற்றம் அளித்தது என்பதை அறியலாம்.

கறுத்துத் தடித்த தோலும், குட்டையான செம்பட்டை மயிரும் அனலைக் கக்கும் கண்களுமாக அந்தப் பெண் உருவம் காவியங்களில் வர்ணிக்கப்படும் கோர ராட்சஸிகளைப் பெரிதும் ஒத்திருந்தது.

ஆனால், அந்தப் பெண் பேய் தன் தோளில் போட்டுக் கொண்டு சுமந்து வந்த ஆண் உருவம் அத்தகைய கோரமான உருவமல்ல. இராஜ களை பொருந்திய கம்பீர முகத் தோற்றம் கொண்டது!

அது யார்? ஒருவேளை...?

மேற்கூறிய கோர ராட்சஸி ஒரு பாறையின் முனையைத் திரும்பிய போது, எதிரில் யாரோ வருவது கண்டு திடுக்கிட்டுத் தயங்கி நின்றாள். அவள் திடுக்கிட்டதற்குக் காரணம் என்ன? பயமா? அவளுக்குக் கூடப் பயம் உண்டா? அல்லது வேறு ஏதேனும் காரணமா?

எதிரே வந்த உருவம் சிறிதும் தயங்காமல் மேலும் வந்து கொண்டிருந்தது. அருகில் நெருங்கி வந்ததும், ''ரஞ்சனி, நீதானா?'' என்று புத்த பிக்ஷுவின் குரல் கேட்டது.

அந்தக் கோர ராட்சஸியின் பெயர் ''ரஞ்சனி'' என்று அறிந்து நமக்கு வியப்பு உண்டாகிறதல்லவா? ஆயினும், அந்தப் பெண் ஒரு காலத்தில் ''ரஞ்சனி'' என்னும் அழகிய பெயருக்கு உரியவளாய், பார்த்தவர் கண்களை ரஞ்சிக்கச் செய்பவளாய், அவர்கள் உள்ளத்தை மோகிக்கச் செய்பவளாய்த்தான் இருந்தாள். அவளை இம்மாதிரி கோர வடிவங் கொண்ட காபாலிகையாகச் செய்தவர் புத்த பிக்ஷுதான் என்பதை முன்னமே அவருடைய வாய்மொழியினால் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

பிக்ஷுவின் குரலைக் கேட்டதும், காபாலிகையின் திகைப்பு இன்னும் அதிகமானதாகத் தோன்றியது. கற்சிலை போல் ஸ்தம்பித்து நின்றவளைப் பார்த்து, புத்த பிக்ஷு மறுபடியும் ''ரஞ்சனி! இது என்ன மௌனம்? எங்கே போய் வேட்டையாடிக் கொண்டு வருகிறாய்?'' என்று கேட்டார்.

காபாலிகையின் திகைப்பு ஒருவாறு நீங்கியதாகத் தோன்றியது.

''அடிகளே! நிஜமாக நீங்கள்தானா?''



என்று கேட்டாள் அவளுடைய கடினமான குரலில் வியப்பும் சந்தேகமும் தொனித்தன.

"இது என்ன கேள்வி? நான்தானா என்பதில் உனக்கு என்ன சந்தேகம் வந்தது? என்னைத் தவிர இந்த நள்ளிரவில் உன்னை யார் தேடி வருவார்கள்? உன் குகையில் உன்னைத் தேடிக் காணாமல் எங்கே போயிருக்கிறாய் என்று பார்க்கக் கிளம்பினேன்! அது என்ன? யார் உன் தோளில்? எந்தப் பாவியின் பிரேதத்தைச் சுமந்து வருகிறாய்? இப்போதெல்லாம் உனக்கு நல்ல வேட்டை போலிருக்கிறது!"

இவ்விதம் பிக்ஷு சொல்லிக் கொண்டு வந்த போது காபாலிகை தான் இத்தனை நேரமும் தோளில் சுமந்து கொண்டிருந்த உடலைத் தொப்பென்று கீழே போட்டாள்.

"நல்ல வேடிக்கை!" என்று சொல்லி விட்டுக் கோரமாகச் சிரித்தாள்.

"என்ன வேடிக்கை? அந்தச் சவத்தை எங்கே கண்டு எடுத்தாய்?" என்று பிக்ஷு கேட்டார்.

"அடிகளே! தங்களை நினைத்து இரண்டு காத தூரம் கண்ணீர் விட்டு அழுது கொண்டே நடந்து வந்தேன். அவ்வளவும் வீணாய்ப் போயிற்று!" என்றாள் காபாலிகை.

"கண்ணீர் விட்டாயா? என்னை நினைத்து ஏன் கண்ணீர் விட வேண்டும்? இது என்ன வேடிக்கை!" என்றார் பிக்ஷு.

"பெரிய வேடிக்கைதான். அந்த வேடிக்கையை ஆரம்பத்திலிருந்து சொல்லுகிறேன், கேளுங்கள்!" என்று காபாலிகை ஆரம்பித்தாள்.

"யுத்த வேடிக்கை பார்ப்பதற்காகச் சென்றிருந்தேன். போர்க் களத்துக்குக்

கொஞ்ச தூரத்திலிருந்த ஒரு குன்றின் உச்சியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பப்பா! என்ன யுத்தம்! என்ன சாவு! எத்தனை நரபலி? காபாலிகர் இங்கே மாதம் ஒரு தடவை வந்து ஒரு நரபலி கொடுக்கிறார்களே! இது என்ன பிரமாதம்? அங்கே லட்சோபலட்சம் மனிதர்களையும் ஆயிரம் பதினாயிரம் யானைகளையும் குதிரைகளையும் பலிகொடுத்தார்கள். மூன்று நாள் இரவும் பகலும் பலி நடந்தது. கடைசியில் ஒரு கட்சியார் ஓடவும் இன்னொரு கட்சியார் துரத்தவும் ஆரம்பித்தார்கள். யாரை யார் துரத்துகிறார்கள் என்று கூட நான் கவனிக்கவில்லை. எங்கே என்னைப் பிடித்துக் கொள்வார்களோ என்று பயந்து ஓட்டம் பிடித்தேன். இன்று பகலெல்லாம் காட்டில் ஒளிந்து ஒளிந்து வந்தேன். சாயங்காலம் ஆன போது பின்னால் ஒரு குதிரை ஓடி வரும் சப்தம் கேட்டது. என்னைப் பிடிக்கத் தான் யாரோ வருகிறார்கள் என்று மேலும் வேகமாய் ஓடினேன். கொஞ்ச நேரம் குதிரையும் தொடர்ந்து ஓடி வந்தது. நன்றாக இருட்டியதும் யார்தான் என்னைப் பிடிக்க வருகிறார்கள் என்று பார்ப்பதற்காக ஒரு மரத்தின் பின்னால் மறைந்து நின்றேன். என்னைத் துரத்தி வந்த குதிரை திடீரென்று கீழே விழுந்தது. அதன் மேலிருந்த மனிதனும் அப்படியே கிடந்தான். எழுந்திருக்கவில்லை. அருகிலே சென்று பார்த்த போது குதிரை மரணாவஸ்தையில் இருந்தது. அதன் மேலிருந்த மனிதன் கிடந்த மாதிரியிலிருந்து அவன் இறந்து போய் வெகு நேரமாகியிருக்க வேண்டும் என்று தோன்றியது. அவன் கால்கள் குதிரையின் கடிவாளத்தில் மாட்டிக் கொண்டிருந்தபடியால் கீழே விழாமல் தொங்கிக் கொண்டே வந்திருக்க வேண்டும் என்று தெரிந்தது. குனிந்து அவன் முகத்தைப் பார்த்தேன். தங்களுடைய முகம் மாதிரி இருந்தது. நான் பைத்தியக்காரிதானே? தாங்கள்தான் என்று நினைத்துத் தோளில் போட்டுக் கொண்டு அழுது கொண்டே வந்தேன்!..."

அப்போது புத்த பிக்ஷுவுக்குத் திடீரென்று ஏதோ ஓர் எண்ணம் தோன்றி இருக்க வேண்டும். சட்டென்று கீழே குனிந்து தரையில் கிடந்த உடலின் முகத்தை நிலா வெளிச்சத்தில் உற்றுப் பார்த்தார்.

"தம்பி! புலிகேசி!" என்று பிக்ஷு வீறிட்டு அலறியது அந்த விசாலமான பாறைப் பிரதேசம் முழுவதிலும் எதிரொலி செய்தது.

"ரஞ்சனி! நீ போய் விடு! சற்று நேரம் என்னைத் தனியே விட்டு விட்டுப் போ! இங்கு நில்லாதே!" என்று பிக்ஷு விம்மலுடன் சொன்னதைக் கேட்டுக் காபாலிகை பயந்து போய் அங்கிருந்து விலகிச் சென்று பாறையின் மறைவில் நின்றாள்.

பிக்ஷு கீழே உட்கார்ந்து புலிகேசியின் உடலைத் தமது மடியின் மீது போட்டுக் கொண்டார்.

"தம்பி! உனக்கு இந்தக் கதியா? இப்படியா நீ மரணமடைந்தாய்? இந்தப் பாவியினால் அல்லவா நீ இந்தக் கதிக்கு உள்ளாக நேர்ந்தது?" என்று சொல்லி விட்டுப் பிக்ஷு தமது மார்பிலும் தலையிலும் மாற்றி மாற்றி அடித்துக் கொண்டார்.

"ஐயோ! தம்பி! உனக்கு நான் துரோகம் செய்து விட்டதாக எண்ணிக் கொண்டேயல்லவா நீ இறந்து போனாய்? என் உயிருக்கு உயிரான சகோதரனுக்கு - தாயின் கர்ப்பத்திலே என்னோடு பத்து மாதம் கூட இருந்து பிறந்தவனுக்கு, - நான் துரோகம் செய்வேனா? மாமல்லனைப் பயங்கரமாகப் பழி வாங்குவதற்காகவல்லவா நான் சூழ்ச்சி செய்தேன்? அதை உன்னிடம் சொல்லுவதற்கு முடியாமல் இப்படி நடந்து விட்டதே!..."

மறுபடியும் பிக்ஷு தமது மார்பில் ஓங்கி அடித்துக் கொண்டு சொன்னார் : "பாழும் பிக்ஷுவே! உன் கோபத்தில் இடி விழ! உன் காதல் நாசமாய்ப் போக! உன் சிவகாமி...! ஆ! சிவகாமி என்ன செய்வாள்?.... தம்பி! உனக்கு நான் துரோகம் செய்யவில்லை. நம் தேசத்துக்கும் நான் துரோகம் செய்துவிடவில்லை. அன்றைக்கு அஜந்தாவில் நீயும் நானும் கொஞ்சம் பொறுமையாக மட்டும் இருந்திருந்தோமானால் இம்மாதிரி விபரீதம் நேர்ந்திராதே! இந்த யுத்தம் நடக்கவே நான் விட்டிருக்க மாட்டேனே! பல்லவ நாட்டார் அத்தனை பேரையும் பட்டினியால் சாகப் பண்ணியிருப்பேனே! மாமல்லனையும் உயிரோடு பலிகொடுத்திருப்பேனே! ஐயோ! இப்படியாகி விட்டதே..."

பிக்ஷு புலிகேசியின் உடலை மடியிலிருந்து மெதுவாக எடுத்துக் கீழே வைத்தார். எழுந்து நின்று இரு கைகளையும் வானத்தை நோக்கித் தூக்கிக் கொண்டு, பாறை மறைவிலிருந்த காபாலிகைக்குக் கூட ரோமம் சிலிர்க்கும்படியான அலறுகின்ற குரலில் உரக்கக் கூவினார் : "தம்பி! புலிகேசி! உன் மரணத்துக்குப் பழிவாங்குவேன்! புத்த பகவானின் பத்ம பாதங்களின் பேரில் சத்தியம் செய்கிறேன். கபாலம் ஏந்தும் சம்ஹார ருத்ரன் தலை மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். இரத்த பலி கேட்கும் சக்தி பத்ரகாளியின் பேரில் சத்தியம் வைத்துச் சபதம் செய்கிறேன். உன்னைக் கொன்றவர்களைப் பழிவாங்குவேன்!"

(தொடரும்)

"குணு" கூந்தல் தைலம்
இப்பொழுது முக வசீகரத்திற்கு
அளிப்பது

# குணு

:.பேஸ் க்ரீம்



பாரம்பரிய முறையில்
இயற்கை மூலிகைகளைக் கொண்டு
தயாரிக்கப்படும்

## "குணு" :.பேஸ் க்ரீம்

- வெயிலினால் முகம் வறண்டு கறுத்து விடுவதையும்
- பனியினால் முகம் வறண்டு கடினமாகிவிடுவதையும் - "குணு" ஃபேஸ் க்ரீம் ஒரு சிறந்த மேற்பூச்சாக செயல்பட்டு பாதுகாப்பளிக்கிறது.
- "குணு" ஃபேஸ் க்ரீமில் அடங்கியுள்ளது அரிய மூலிகைகள் - மற்றும் இயற்கை பொருட்கள் - அளிப்பது பரிபூரண பாதுகாப்பு.
- உங்களது முகஎழிலை மனதிற்க்கொண்டு தயாரிக்கப்பட்ட "குணு" ஃபேஸ்க்ரீம் ஒரு அதி உன்னத முக அழகு சாதனம்.
- ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் ஏற்றது.

தயாரிப்பாளர்கள்:
**அகஸ்தியர் பார்மாசூடிகல்ஸ்,**
சேலம்-636 307 Ph: 55647

பூரண விநியோகஸ்தர்கள்:
**ஜீ ஆர். லேபரட்டரீஸ்,**
த.பெ. எண். 550, சேலம்-636 005 Ph: 7936

"குணு" கூந்தல் தைலம் கிடைக்கும் எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

## உங்கள் ஜாதக பலனை கேட்டறியுங்கள்

# ஜோதிட போன்

## வார பலன்கள்

☎ 001 609 936 34 + ☐☐

மேலே கொடுத்துள்ள பதினொரு எண்களையும் டயல் செய்வதுடன்
உங்கள் சூரிய ராசிக்கு கொடுத்துள்ள இரண்டு எண்களையும் சேர்த்து
டயல் செய்யவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 |
| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி |
| 57 | 58 | 59 | 60 | 61 | 62 |
| துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |

## டாரட் பலன்கள்

ஒரு பண்டைய ஆருட முறை.
உங்கள் குறிப்பிட்ட கேள்விகளுக்கு
பதிலளிக்கிறது.

அழையுங்கள் :
**001 609 936 3450**

## பொருத்தம்

நீங்களும் உங்கள் துணையும்
எவ்வாறு ஒத்துப்போக
முடிகிறது?

அழையுங்கள் :
**001 609 936 3474**

இது ஒரு இன்டர்நேஷனல் போன்கால். அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் 30 நொடிகளுக்கு ரூ. 30 மட்டுமே.
ஜோதிட போன் இன்கார்ப், புனே. Anthem

# நிச்சயம்

**பிரதிபா ராஜகோபாலன்**

''இன்னைக்கி ஒரு கை பாத்தர்றேன். என்னன்னு நெனைச்சிருக்கான் உங்கண்ணன்? மச்சான்ங்கற ஒரு மட்டு மரியாதையே இல்லாம போச்சு'' என்று கறுவிக் கொண்ட மயில்சாமி, கடைவீதிக்கு, மனைவியுடன் வரும்போது மணி ஒன்பது கூட ஆகவில்லை.

''சரி, இப்ப எதுக்கு இந்தப் பேச்சு? எங் கண்ணன், மகனுக்கு நிச்சயம் பண்ணிட்டாரு. ஜவுளி எடுக்க எல்லாரையும் கூப்பிட்டிருக்காரு. பத்தோடு பதினொண்ணா நாம வந்துட்டுப் போறதை உட்டுட்டு, வெட்டிப் பேச்சு எதுக்குங்க இப்ப?''

- மனைவி, புருஷனை அடக்கினாள்.

''ஆமா, உங்கண்ணனைச் சொன்னா உனக்கு சொரக்குனு வந்துடுமே? பத்தோட பதினொண்ணா எப்படி நான் வர்றது. இன்னைக்கி ஜவுளின்னா, நேத்து மத்தியானம் போனாப் போகுதுன்னு கூப்பிடறான். ஊர்ல என்னை, என்னன்னு மதிப்பாங்க! வெத்தலைக் கடை நாயக்கர் கேட்டுட்டாரு. என்னங்க மயில்சாமி, மச்சான் இப்ப வந்து கூப்பிடறாரு? அவரோட லிஸ்ட்ல கடைசி ஆள் போலிருக்குன்னு.''

''அப்படித்தா இருந்தா என்ன? பணம் உள்ளவங்களுக்கு ஆயிரம் பேர் வேண்டியிருக்கும். நம்ம வெறும் சொந்தம்தானே? சொந்தமா வந்து சொந்தமாப் போய்ட்டாப் போகுது. கல்யாணத்துக்கு இது மாதிரிதான் பட்டும் படாம வந்துட்டுப் போய்றலாம். சும்மா எதுக்குக் கவலைப் படோணும்?''

முகூர்த்த நாள் என்பதால் கடைவீதி, ராஜ வீதி, ஒப்பணக்கார வீதி எல்லாம், ஜவுளி எடுக்க வந்த கல்யாண வீட்டுக்காரர்கள், கடை திறக்கு முன்னேயே கூட்டம் கூட்டமாக வந்து காத்துக் கொண்டிருந்தார்கள்.

''ஆமா, எந்தக் கடைல ஜவுளின்னு சொன்னாங்க?''

''நம்ம ஊர் ஜனங்க, சொந்தக்காரங்கன்னு வந்திருப்பாங்களே... அதைப் பார்த்தாத் தெரியுது?''

''அம்மிணி, அம்மிணி புதுப்பாளையத்து அம்மிணி'' என்று கூப்பிட்டது போலக் கேட்டது.

''உன்னைத்தான் போல இருக்கு. உங்க ஊர்க் காரங்க...''

உருமால் கட்டின வளர்ந்த ஆள், இவர்களைப் பார்த்துக் கையைக் காட்டினார்.

''ஆரு? எங்க ஊர் மருதாசலம் போல இருக்கு'' என்றவள், நின்று கொண்டாள். ''பாத்து நாளாச்சு. ஆள் கறுத்துப் போய்ட்டாரு. விசுக்குனு அடையாளமே தெரியலே.''

''என்ன அம்மிணி, பாத்தும் பாக்காம போறீங்க. அண்ணன் மகனுக்கு ஜவுளின்னா பொறந்த ஊர்க்காரங்களை இப்படியா மறக்கறது? என்ன மயில்சாமி, மொகம் ஒரு மாதிரியா இருக்குது?''

ஆள் கறுத்துப் போனாலும், முகத்தில் ஒரு உற்சாகம் மிதந்து கொண்டிருந்தது. கையில் மஞ்சள் நிறப் பை. இரண்டு கைகளிலும் செம்புக் காப்பு. விரல்களில் மோதிரம். லேட்டஸ்ட் பாஷனில் வாட்ச்.

''என்னண்ணா சௌக்கியமுங்களா? இப்பவும் சந்தை வியாபாரந்தானா? ஊர்ல எல்லாரும் சௌக்கியமா?''

''சௌக்கியத்துக்கு என்ன கொறைச்சல் அம்மிணி? நீதான் ஊர்ப்பக்கம் வர்றதில்லே? இப்பத்தான் அண்ணன் மகனுக்குக் கல்யாணமாச்சே... வருவியில்லே?''

''மண்டபத்துல கல்யாணம். ஊர்ல என்னங்க ஜோலி?'' என்று கிண்டலாகக் கேட்டார் மயில்சாமி.

''என்னங்க அப்படிச் சொல்லிட்டீங்க? புதுப்பாளையத்திலேயே பெரிய பணக்காரன் உங்க மச்சான்தான். சோளமும், ராகியும் கூட வெளையாத பூமியில, இன்னைக்கி, இருபத்து நாலு மணி நேரமும் தண்ணி பாயுது. முந்நூறு அடிக்கி 'போர்' போட்டு, அருவி மாதிரி தண்ணி. ரெண்டு ஏக்கர் நெலத்தை வித்து பசங்களுக்கு, ஒர்க்ஷாப் வெச்சுக் குடுத்திருக்காரு. டவுன்ல பெரிய ஆளுங்க பழக்கம். வட்டிக்கு உடறாரு. பழைய ஊட்டை இடிச்சு, பங்களா

கட்டியிருக்காரு. ரோடு மேல, அவரு நெலத்துலேயே பதினஞ்சு வீடு லைனாக் கட்டி வாடகைக்கு விட்டிருக்காரு. ரெண்டு கார்க. மோட்டார் பைக். மொபெட். பொண்டாட்டி நாளுக்கு நாள் பெருத்துட்டே போறா. கல்யாணம் பண்ணி, ஊருக்கு வரும் போது, சர்க்குச்சியா, கருவாடா இருந்தா. இப்ப? ஏன், உங்கண்ணன் எவ்வளவு கரேன்னு இருந்தாரு. இப்ப? எல்லாம் நேரம் காலந்தான்.''

மருதாசலம் விட்டால் பேசிக் கொண்டே இருப்பார் போலிருந்தது.

''சரி, எல்லாரும் காத்துட்டு இருப்பாங்க.''

''ஜவுளிக்குத்தானே? அங்கேதானே நானும் வர்றேன்.''

மூன்று பேரும், கொஞ்ச தூரம் போவதற்குள், மாப்பிள்ளை வீட்டு ஜனங்கள் கும்பலாய்த் தென்பட்டார்கள்.

''ஜவுளி எடுக்கறதுக்கு இத்தனை பேரா? மாப்பிள்ளை வீட்ல பத்துப் பேரு, பொண்ணு வீட்ல பத்துப் பேரு போதாதுங்களா?''

''கல்யாணத்துக்குக் கூப்பிடற மாதிரி, எல்லாத்தையும் கூப்பிடோணும். இல்லைன்னா, மூஞ்சியைத் தூக்கி வெச்சுக்கு வாங்க'' என்றாள் மனைவி.

மயில்சாமி, மனைவியை முறைத்தார்.

''உனக்கென்ன தெரியும்? அதுக்குன்னு ஒரு மொறை இருக்குதில்ல. எங்க பெரியக்கா கல்யாணத்துக்கு எத்தனை கூட்டம் வந்ததோ, அத்தனை கூட்டமும் ஜவுளிக்கும் வந்தாங்க. ரெண்டு கல்யாணச் செலவுன்னு நம்ம ஜனங்க பேசிட்டாங்க.''

''இப்பிடி பொழைக்கத் தெரியாமப் பொழைச்சுத்தான், நம்ம இப்பிடி இருக்கறோம்...''

**ஜ**வுளிக்கடை வாசலில் ஏகப்பட்ட கூட்டம்.

பெண் வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாருக்குச் சமமாக வந்திருந்தார்கள்.

''அடடா மயில்சாமியா? மாமனே இவ்வளவு லேட்டு?''

''பொண்ணு ஊட்டுக்காரங்க, ரொம்பப் பெரிய எடம் போல இருக்கு?''

''செங்கோடம்பாளையத்துக்காரங்க மாப்ளே. பரம்பரைப் பணக்காரங்க. ரொம்ப சம்பிரதாயம் பாக்கறவங்க.''

''ஆமா மாப்பிள்ளையோட அப்பா எங்கே? நாம வந்தே அரை மணி நேரமாச்சு. இவர், வந்தவங்களை வான்னு சொல்றதுக்குக் கூட முடியாம, எங்கே போனாரு?''

''அத ஏங் கேக்கறீங்க! அவரு சம்சாரத்தோடு அண்ணனை ஜவுளிக்குக் கூப்பிடப் போனப்ப, ஏதோ பேச்சு வார்த்தை தடிச்சுப் போச்சு. உன்ற மகனுக்குக் கல்யாணம்னா,



நீதான் அடங்கிப் பேசோணும்னு அவர் சொல்றாரு. இப்ப அண்ணன் ஜவுளிக்கு வரலைன்னு சம்சாரத்துக்குக் கவலை. காலைல மாப்பிள்ளையோட அப்பா, மச்சானை சமாதானப்படுத்திக் கூட்டிட்டு வரப் போயிருக்காரு.''

''பாத்தியாடி? பணக்கார மச்சான்னா ஒரு மரியாதை. என்ற மாதிரி வெறும் பயல்னா ஒரு மரியாதை. வரட்டும் உங் கண்ணன்...''

பெண் வீட்டார், சற்றுத் தள்ளி, கல்யாணப் புடைவை என்ன விலை இருக்க வேண்டும் என்று நிச்சயப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

''கொறஞ்சது அஞ்சாயிரத்துக்காவது இருக்கோணும்.''

''சும்மா இருங்க அத்தே. அஞ்சாயிரத்துக்கு என்ன புடைவை. நம்ம ஊரு ராமாத்தா மருமக கூட ஆறாயிரத்துக்கு எடுத்திருக்கா. பத்தாயிரம் ரூபாய்க்குப் புடைவை இருக்கு. மாப்ளே ஊட்ல எடுக்கச் சொல்லுங்க.''

''பாரு, மாப்ளே ஊட்ல வந்துட்டாங்க.''

மாப்பிள்ளையின் அப்பா, காரில் அவசர அவசரமாய் வந்து சேர்ந்தார்.

கூடி இருந்தவர்களைப் பார்த்துப் பொதுவாய் வணக்கம் போட்டார்.

''என்ன அண்ணாமலை, இவ்வளவு லேட்டு? கடையைத் தொறந்து அரைமணி ஆச்சு. சம்பந்தி உள்ளே போயிருக்காரு. போய் மளமளன்னு ஜோலியை முடியுங்க.''

''முடிச்சிரலாமுங்க'' என்றார் அண்ணாமலை.

மயில்சாமி, ''நீ வேணும்னா உள்ளே போ. நான் வரலே. உங்கண்ணனுக்கு என்னை எல்லாம் கண்ணுக்குத் தெரியாது...'' என்றார்.

> அமெரிக்காவில் இருந்து வெளிவரும் 'டைம்' பத்திரிகை, ''லேகியா வாழ்நாள் முழுவதும் தெரு குடும்பத்தினரின் பகைகளுக்கு ஆளாகவேண்டியவள்'' என்று ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது.
>
> அந்தச் செய்தி திட்டமிட்டுத் தன்னை அவதூறு செய்வதாக உள்ளது என்று லேகியா அந்தப் பத்திரிகை மீது மான நஷ்ட வழக்கு போட்டார்.
>
> அமெரிக்காவில் நடைபெற்ற அந்த வழக்கில் லேகியாவுக்கு வெற்றி கிட்டியது. லேகியா விரும்பியபடி நஷ்ட ஈட்டுத் தொகையை அவருக்குப் பத்திரிகை தரவேண்டும் என்று தீர்ப்பாகியது.
>
> லேகியா கோரிய நஷ்ட ஈட்டுத் தொகை எவ்வளவு தெரியுமா?
>
> ஒரு டைம்!
>
> ஆதாரம் : பெரியோர் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்.
>
> தகவல் : என். முகம்மது யூசுப்

மயில்சாமியும் மருதாசலமும் சற்றுத் தள்ளி, கூட்டத்தை விட்டு விலகி நின்று கொண்டார்கள்.

''என்ன மயில்சாமி, ஒரு டீ குடிக்கலாங்களா?''

''இந்த டீ, காப்பி எல்லாம் விட்டு வருஷம் மூணாச்சு.''

''நெஜமாவா? நான் கேக்கறேன்னு கோபிச்சுக்காதீங்க. உங்க காட்டுலேயே சொந்தமாவே சாராயம் காய்ச்சிக் குடிக்கற வங்கன்னு உங்களைச் சொல்லுவாங்களே?''

''அது நெஜம்தான். அப்ப புத்தி அப்படி இருந்தது. வாயக் கொப்புளிச்சதே சாராயத்துலதானே. போலீசு, லாக்கப், கோர்ட்டு, அபராதம்னு அலஞ்சேன். நம்மாலே பொண்டாட்டி புள்ளைங்க அவதிப்பட்டது தான் மிச்சம். அதனாலேதான், அண்ணாமலை, நம்மளை நிமிர்ந்து பாக்கறதில்லை. இப்பிடியே போனா, கெணத்துல குதிச்சிடுவேன்னு. இவ ஒரு நாள் வேதனைப்பட்டுக் குதிச்சுட்டா. நல்லவேளை, பக்கத்துக் காட்டுக்காரரு உடனே பாத்ததாலே, காப்பாத்திட்டாரு. அப்பவும் மூணு மாசம் ஆஸ்பத்திரில இருந்தா. அதுக்கப்புறம்தான் அந்தக் கெரகத்தை உட்டுத் தொலச்சேன்.''

''அடடா... அம்மிணி அம்மிணிதான். அவ ரோசக்காரியாச்சே. அண்ணன்கிட்டே உதவிக்கு வரவே இல்லியே?... ஆமா, உங்க பசங்க என்ன செய்யறாங்க?''

''மூத்தவன் எம்.டெக்., படிக்கறான். அடுத்தவன் இப்போதான் பிளஸ் ஒன்னு.''

''காடெல்லாம் இருக்கா? இல்லே வித்துட்டீங்களா?''

''தண்ணிதான் இல்லியே? சைட் போட்டுப் பாதிய வித்துட்டேன். அந்தப் பணத்துல பனியன் பாக்டரி வெச்சிருக்கேன்.''

''எனக்கு ரெண்டு பொண்ணுங்க. ஒருத்தி டாக்டருக்குப் படிக்க முடிக்க, வீட்லேயே தொழிலைப் பார்க்கறா. ரெண்டாவது பொண்ணு பி.காம்., படிக்கறா'' என்றார் மருதாசலம்.

''நீங்களும் பெரிய ஆளுதாங்க. சொத்து சேர்த்து வச்சதுக்குப் பதிலா, பொண்ணுகளைப் படிக்க வெச்சிருக்கீங்க. நம்ம பையன் வெளிநாட்டுக்குப் போய்ப் படிக்கோணும்னு சொல்லிட்டிருக்கான். கல்யாணத்தப் பண்ணிட்டு எங்கியோ போடா சாமின்னு சொல்லிட்டிருக்கேன். நம்ம வம்சத்துல எவன் அஞ்சாவதுக்கு மேல படிச்சான்!''

ஜவுளி எடுக்க உள்ளே போனவர்கள் மெள்ள மெள்ள வெளியே வந்தார்கள்.

''பாரு அம்மிணி வந்தாச்சு'' என்றார் மருதாசலம்.



''என்ன சிலை எடுத்தாச்சா? என்ன வெலை?''

''எட்டாயிரம் ரூபாய்ங்க. ஜாக்கெட், மத்த துணிங்க எல்லாம் ரெண்டாயிரம்.''

''அடுத்தது என்ன?''

''ஓட்டல்ல சாப்பாடுக்குச் சொல்லி இருக்காங்க. சாப்பிட்டுட்டு, ஊர் போய்ச் சேர்றதுதான்.''

அண்ணாமலையும் அவர் மனைவியும் வந்து எல்லோரையும் சாப்பிட்டு விட்டுத் தான் போக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

ஹோட்டல் பெரியதுதான். அநேகமாக எல்லாருக்கும் இடம் கிடைத்தது. சம்பரமான சாப்பாடு.

''அண்ணாமலை அண்ணாமலை தான்!''

''ஆமா மயில்சாமி, உங்க மூத்த பையன் ஜாதகம் எனக்கு வேணுமே...''

''என்னங்க... ஜாதகமா? எனக்கு அப்பவே தெரியும்... என்ன இவரு சொல்றது புரியுதா உனக்கு?'' மனைவியைப் பார்த்து மயில்சாமி கேட்டார்.

''புரியாம என்னங்க. நாமளே அடுத்த வாரம் இவரு பொண்ணைப் பாத்துட்டு வரலாம். எல்லாம் புடிச்சிருந்தா, கல்யாணத்தைப் பண்ணிருவோம்'' என்றாள் மனைவி.

''போச்சரா!''

''ஆனா ஒண்ணு மயில்சாமி, இந்த ஜவுளிக்குப் பண்ற மாதிரி, இத்தனை கூட்டத்தைக் கூட்டி, ஆடம்பரமாப் பண்றது எனக்குப் புடிக்கலே. சிம்பிளாப் பண்றது தான் சரி. இந்தச் செலவுக்குச் சின்னதா ஒரு லேத் வாங்கிடலாம். என்ன சொல்றீங்க?''

''வாஸ்தவம்.''

எல்லாரும் சாப்பிட்ட பிறகு அண்ணாமலையும், சம்பந்தியும் வணக்கம் போட்டு விடைகொடுத்தார்கள்.

மயில்சாமியும் மனைவியும், ஒப்புக்கு இரண்டு வார்த்தை பேசி விட்டு, மருதாசலத்துடன், காந்திபுரம் பஸ் ஸ்டாண்ட் போகிற பஸ்ஸில் ஏறிக் கொண்டார்கள்.

பஸ், காந்திபுரம் வந்ததும், ''சரி மயில்சாமி, நாலாம் நெம்பர் வீதில ஒரு ஜோலி இருக்குது. பாத்துட்டு ஊருக்குப் போறேன். நீங்க நம்ம ஊருக்கு எப்போ வர்றீங்க? ரெண்டு நாளைக்கு முன்னாடி தகவல் சொன்னீங்கன்னா, ரெடியா இருக்கேன்.''

''கட்டாயம் வரமுங்க'' என்றார் மயில்சாமி.

''உங்க பொண்ணைக் கட்டிக்கறதுக்கு எங்களுக்குக் காக்குமுங்களா?''

''சந்தோஷம் அம்பிணி.''

மருதாசலம் கைகூப்பி விட்டு, சின்னலைத் தாண்டிப் போனார்.


மங்கையர் மலர்

அக்டோபர் '97

- தீபாவளிக்கு....
  - ஏராளமான பட்சண வகைகள்
  - யோசனைகள்
  - பட்டாசுகளில் பணம் போடலாமா?
  - நிறைவு தரும் நன்னாள் - பெண்களின் பேட்டி
- குளிர் காலத்திற்குச் சில யோசனைகள்
- குறுநாவல்
- சிறுகதைகள்
- ராசிபலன்

அதிக பக்கங்கள்



# அமெரிக்காவில்

## ஒரு 'ரத்தப் புரட்சி' நடந்து

**கொண்டிருக்கிறது...! புது விதமான ரத்தப் புரட்சி - நோயாளிகளுக்கும் பெரிய ஆபரேஷன்கள் செய்து கொண்டோருக்கும் ரத்த தானம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தும் புரட்சி!**

நோயாளியின் உடலில் உள்ள ஹெமோகுளோபின், (சிவப்பு ரத்த அணுப் பிரிவு) சராசரி அளவிலிருந்து 2/3 பங்காகக் குறைந்தால் கட்டாயம் ரத்தம் செலுத்த வேண்டும் என்ற மருத்துவ விதி தளர்த்தப்பட்டு, ஓரளவு ஆரோக்கிய வாழ்க்கை வாழ்ந்த நபர், உடலின் பாதியளவு ஹெமோகுளோபின் குறையும் வரை உயிருக்கு ஆபத்தின்றித் தாக்குப் பிடிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது...

இதற்கு முக்கியமான காரணம் ரத்த தானம் பெறுவோர் எய்ட்ஸ் போன்ற கொடிய நோயையும் அதனுடன் வாங்கிக் கொள்ளக் கூடிய அபாயம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்பதுதான்.

ஒவ்வொரு ஆண்டும் ரத்த தானம் பெறுகிற மூன்றரை மில்லியன் அமெரிக்கர்கள் அனாவசியமாக ஆபத்தை விலைக்கு வாங்குகிறார்கள் என்று நிபுணர்கள் இப்போது கூறுகிறார்கள்.

எனவே ரத்த தானத்தைத் தவிர்க்க, அதற்குப் பதிலாக மாற்றுச் சிகிச்சை முறைகள் கண்டுபிடிப்பதில் முனைப்புடன் இறங்கியிருக்கிறார்கள் :

ஆபரேஷன் செய்து கொள்ளவிருக்கிற நோயாளியிடமிருந்து முன்கூட்டியே ரத்தத்தைப் பெற்றுச் சேமித்து வைத்து, திரும்ப அவருக்கே செலுத்துகிறார்கள். இதனை Autologous transfusion என அழைக்கிறார்கள்.. ஆரம்பத்தில் ஒரு சதவிகிதத்தினருக்கே இம்முறை கையாளப்பட்டது. தற்போது சுமார் ஐந்து சதவிகித அமெரிக்கர்களுக்கு இம்முறையில் ரத்தம் செலுத்தப்படுகிறது. கூடிய விரைவில் முப்பது சதவிகிதத்தினர் இம் முறையினால் பயன் அடைவார்கள் என்று கூறப்படுகிறது.

விபத்துக்களில் சிக்குவோரும் பேறு காலம் முடிவதற்கு முன்னரே பிறந்துவிடும் (premature) குழந்தைகளும் மேற்படி முறையால் பயன்பெற முடியாது. நீண்ட நாட்களாக நோயில் அவதியுற்று ரத்த சோகை கண்டவர்களுக்கு இம்முறை உதவாது.

எனவே வேறு சில வழிகளில் இவர்களுக்கு ரத்தம் கொடுக்க முடியுமா என்று ஆராயப்பட்டு வருகிறது.

ஆபரேஷன் செய்து கொண்டேயிருக்கையில் வெளிப்பட்டு வீணாகக் கூடிய ரத்தத்தைச் சேமித்து, சென்ட்ரிஃப்யூஜ் என்ற கருவியில் இட்டு, சிவப்பணுக்களை மட்டும் தனியே பிரித்தெடுக்கிறார்கள். பிராணவாயுவைச் சுமக்கும் முக்கியமான பணியைச் செய்யும் இவ்வணுக்களைத் தூய்மைப்படுத்தி மீண்டும் நோயாளியின் உடலுக்குள் செலுத்துகிறார்கள். இப்பணியைச் செய்வதற்கான Cell Saver இயந்திரம் 1974 - இல் உருவாக்கப்பட்டது.

கான்சர் மற்றும் வயிற்றுப் பகுதி ஆபரேஷன்களின் போது


- செயற்கை ரத்தம் குறித்த ஆராய்ச்சிகள்...



ரத்தத்துடன் கிருமிகளும் டியூமர் செல்களும் வெளிப்படும் என்பதால் Cell Saver இயந்திரம் இந்த அறுவைச் சிகிச்சைகளின் போது பலன் தராது.

ஆனால் எலும்பு முறிவுச் சிகிச்சை, இதய அறுவைச் சிகிச்சை போன்றவற்றின் போது Cell Saver ஐ இன்னும் அதிகமாகப் பயன்படுத்தி ரத்த தானம் கொடுப்பதைத் தவிர்க்கலாம். சிகாகோவிலுள்ள North Western Memorial மருத்துவமனை இம்முறையையும் வேறு நவீன யுக்திகளையும் கையாண்டு, எண்பது சதவிகித இதய அறுவைச் சிகிச்சைகளை அன்னிய ரத்தம் செலுத்தாமலே செய்து முடிக்கிறது.

Erythropietin என்ற ஹார்மோனைச் செலுத்துவதன் மூலம் உடலில் சிவப்பணு உற்பத்தியை அதிகரிக்கச் செய்யலாம் என்றும் கண்டறிந்து இந்த ஹார்மோன் தயாரிப்பிலும் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதனால் 'சுய ரத்த தானம்' செய்து கொள்ள இயலாத அனைத்து நோயாளிகளும் பயன் பெறுவர்.



• இதய அறுவைச் சிகிச்சையின் போது வெளிப்படும் ரத்தம் சேகரிக்கப்படுகிறது....

இவை தவிர, ஆபரேஷனுக்கு முன்னர், ரத்த நாளங்கள் வழியே நீர் செலுத்தி ரத்தத்தை நீர்த்துப் போகச் செய்யும் முறையும் உண்டு. மத ஆசாரங்கள் காரணமாக ரத்த தானம் பெற மறுப்போருக்கு இம் முறை சில காலமாகவே பயனளித்து வருகிறது. ரத்தம் நீர்த்திருப்பதால் ஆபரேஷன் நடைபெறும் குறிப்பிட்ட கால அளவில் வெளியேறும் ரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களின் எண்ணிக்கை குறையும். ஆபரேஷன் முடிந்த நிலையில், போதிய அளவில் சிவப்பணுக்கள் உடலில் எஞ்சியிருக்கும்.

இம் முறையும் எல்லாவித நோயாளிகளுக்கும் பயன் தரக்கூடியதல்ல.

தானம் பெறப்படும் ரத்தத்தைச் சுத்திகரிக்கும் நவீன முறைகளையும் அதி நவீனப்படுத்த முயற்சிகள் நடந்து வருகின்றன. சிவப்பணுக்களைப் பாதிக்காமல் வைரஸ் கிருமிகளை மட்டும் அழிக்கக் கூடிய ரசாயனப் பொருட்களின் கலவைகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

மருந்து தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் 'செயற்கை ரத்தம்' தயாரிப்பதையே தங்கள் முடிவான லட்சியமாகக் கொண்டுள்ளன. உடலெங்கும் பிராணவாயுவைச் சுமந்து ரத்தத்தின் ஊடே பயணம் செய்யும் ஹெமோகுளோபின் என்ற சிவப் பணுவுக்குப் பதிலாக வேறு ஒரு உயிர்ப் பொருளைப் பயன்படுத்த முடியுமா? அந்த உயிர்ப் பொருளை எப்படித் தயாரிப்பது....?

இவையே இந்த நிறுவனங்களின் முன் நிற்கும் பெரிய கேள்விக் குறிகள்....

நன்றி : நியூஸ் வீக்

# ஸ்ரீராமின் சீட்டு உற்சவம்

# விஜயதசமி 10-நாள் விழா!

செப்டம்பர் 27 - அக்டோபர் 6, 1992






## உங்கள் பாதுகாப்பான வருங்காலத்துக்குப் பாதை அமையுங்கள்.

முன்னெப்போதையும் விட இப்போது ஸ்ரீராம் சிட்ஸ் மிகவும் அவசியமாகிறது. பணவீக்கம், விலைவாசி உயர்வு, பெருகும் தேவைகள் என்றுள்ள இன்றைய சூழ்நிலையில், அன்றாடம் சமாளிப்பதே சிரமமான காரியம். அப்படியிருக்கும்போது வரும் காலத்தைப் பற்றித் திட்டமிடுவதைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். 5,00,000 பேருக்கு மேல் ஸ்ரீராமைப் பயன்படுத்தி இன்று மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்துவதோடு வருங்காலப் பாதுகாப்புக்கும் பாதை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்களும் உடனே செயல்படுங்கள். ஸ்ரீராம் சிட்ஸில் சேர்ந்து உங்கள் வாழ்க்கையைப் பொருள் பொதிந்ததாகவும் பாதுகாப்புள்ளதாகவும் அமையுங்கள்.

ரூ.75,000 வரையில் உள்ள சிட்டுகளை எடுப்பவர்களுக்கு, பொதுத் துறை அல்லது தனியார் துறை அல்லது அரசுப் பணி அல்லது அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் மூன்று பேர் உத்தரவாதம் அளித்தால் போதுமானது.

வேலையிலிருக்கும் பெண்மணி ரூ.15,000 வரையில் உள்ள சிட்டுகளை எடுக்கும்போது அவரின் கணவருடைய உத்தரவாதமே போதும்.

### சந்தாதாரர் பரிசுகள்

| | சீட்டின் மதிப்பு ரூ. | சந்தாதாரருக்குக் கிடைக்கும் பரிசு |
|---|---|---|
| 1. | 200 x 40 = 8,000 | மூடியுடன் கூடிய [illegible] பௌல் |
| 2. | 250 x 40 = 10,000 | 4 கிராம் வெள்ளிக் காசு |
| 3. | 500 x 30 = 15,000 | மூடியுடன் கூடிய [illegible] ஃப்ரூட் பௌல் |
| 4. | 625 x 40 = 25,000 | அலுமினியம் முலாமிட்ட எவர் வெஜிடபிள் பான் |
| 5. | 500 x 60 = 30,000 | ஸ்டீல் நான்-ஸ்டிக் ஃப்ரை பான் |
| 6. | 1,000 x 50 = 50,000<br>1,250 x 60 = 75,000 | மூடியுடன் கூடிய காஸி காப்பர் பாட்டம் குக்பான் |
| 7. | 1,000 x 100 = 1,00,000<br>2,500 x 40 = 1,00,000 | பிடியுடன் கூடிய காஸி காப்பர் பாட்டம் சாஸ்பான் |
| 8. | 4,000 x 50 = 2,00,000 | 15 கிராம் வெள்ளிக்காசு இரண்டு |
| 9. | 5,000 x 60 = 3,00,000 | 2 கிராம் தங்கப் பதக்கம் |
| 10. | 10,000 x 50 = 5,00,000 | 4 கிராம் தங்கப் பதக்கம் |
| 11. | 20,000 x 50 = 10,00,000 | 8 கிராம் தங்கப் பதக்கம் |

* நுழைவுக்கட்டணம் தனி.

ALL INDIA DEPOSIT MOBILISATION DRIVE TILL 31.10.'92

## ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி. லிமிடெட்.

நிர்வாக அலுவலகம்: "சுப்பிரமணியம் பில்டிங்", 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002. போன்: 474451|475536|470400|473932.




**அறிமுகப்படுத்துவோர் ஒவ்வொருவருக்குமே மறைந்து காத்திருக்கிறது ஒரு பரிசு!**

அறிமுகப்படுத்துவோர் ஒவ்வொருவருமே முதல் முறையாக ஆச்சரியப்படப் போகிறார்கள். அதுதான் மறைந்து காத்திருக்கும் பரிசு.

அறிமுகப்படுத்துவோர் கூப்பன் ஒவ்வொன்றிலுமே மறைந்து காத்திருக்கும் பரிசின் பெயர் வெளித்தெரியாமல் மறைக்கப்பட்டிருக்கும். அந்தப் பரிசைப் பெற நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் இதுதான் — ஒரு புதிய சந்தாதாரரை அறிமுகப்படுத்தி, பரிசுக் கூப்பனில் உள்ள வெள்ளிப் பூச்சைத் தேய்த்து அழிக்க வேண்டியதுதான். அதோ! உங்களுடைய பரிசின் பெயர் தெரிந்துவிட்டது.

மறந்து விடாதீர்கள், ஸ்ரீராம் கிளை அலுவலர் முன்னிலையில் மட்டுமே அந்த வெள்ளிப்பூச்சை அழிக்க வேண்டும். எத்தனை புதிய சந்தாதாரர்களை வேண்டுமானாலும் அறிமுகப்படுத்துங்கள். மறைந்து காத்திருக்கும் பரிசைப் பெற்றிடுங்கள்.

**பரிசு!**
**பரிசு!**
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரம் முதல் தங்கப் பதக்கம் வரை!

**அறிமுகப்படுத்துவோர் பரிசு சந்தாதாரர்களுக்கு மட்டுமே.**

***ஸ்ரீராம் சிட்ஸ் — பலருக்கும் பலவகையிலும் பலன்.***

ADWAVES/CH/4456 TAM II

# முற்றுகை

## மேலாண்மை பொன்னுச்சாமி

## 10

நீளம் நீளமாக, கிழக்காக விழுந்து கிடக்கிற மாலை நிழல்கள். கட்டடங்களின் அடர்ந்த நிழல்களே சாலையின் வெயிலைச் சாப்பிட்டிருந்தன. கழுதை நிறத்துப் புழுதியில் கால் புதைய நடந்து, தார்ச் சாலைக்கு வந்து சேர்ந்தனர்.

சாலையில் மாதிரி வெறிச்சென்று இருக்கவில்லை, சாலை. இம்மி கூட இடமில்லாமல் இயங்கிக் கொண்டிருந்த ஜனங்கள். பரபரப்பாய் வாகனங்கள்.

கோர்ட்டுக்கு, தாலுகாபீஸுக்கு வந்து போகிறவர்கள், கமிஷன் கடைகளுக்கு வந்து போகிற சம்சாரிகள், கோவிலுக்குப் போய் மொட்டை போட்ட தலையில் சந்தனப் பூச்சோடு வருகிற பக்தர்கள்.... இது போக, இருக்கவே இருக்கிறார்கள் நீப் பெட்டியாபீஸ்களுக்கு வந்து போகிற பெரும் படைகள்.

அந்தச் சின்ன நகரம் நெரிசல் தாளாமல் திணறியது. மெயின் வீதி முழுக்க ஜனம்... ஜனம்... ஜனக்காடு. சமுத்திரத் தண்ணீராக, ஜனக்காடு.

சாலையின் இருபுறமும் விதம்விதமான கடைகள். பாட்டுச் சப்தங்கள்.

மேல்புறத்தில்... கடைகள், சிறு ஹோட்டல்கள், இன்னும் பல இருந்தாலும், அதையெல்லாம் கவனிக்கவிடாமல்... கண்ணைச் கண்டியிழுக்கும் சேவுக் கடைகள்.

பெரிய பெரிய இரும்புத் தட்டுகள். அவற்றில் வெட்டிச் சரித்த மாதிரி கோபுரம் கோபுரமாய்க் குவித்து வைக்கப்பட்ட சேவு, சீவல், மிக்ஸர், ஓமப்பொடி, வறுத்த கடலைப் பருப்பு, அரிசிப் பொரி...

மேலே, ஆள் உயரத்துக்கு வட்டம் வட்டமாய் அடுக்கி வைக்கப்பட்டுள்ள சீனி மிட்டாய், வெல்ல மிட்டாய், மைசூர் பாகு...

பார்த்த மாத்திரத்தில் வாயில் எச்சில் ஊறவைத்து விடும். 'வாங்கு, வாங்கித் தின்னு' என்று வற்புறுத்தும். நக்கப் பிடுங்கும். கைக் காசுக்கு அரிப்பு எடுத்து விடும்.

ராசாத்திக்குத்தான் முதலில் அரிப்பு.

- ''ஏய் கெங்கு, சேவு வாங்குவமா?''

''சொர்ணத்துகிட்டே கேட்டுக்க.''

''பாஸ், சொர்ணம் பாஸ், சேவு வாங்குவமா? உத்தரவு கெடைக்குமா, பாஸ்?''

அவளது கிண்டல் இப்போது எரிச்சல் படுத்தவில்லை.

ஓநாய்களின் காமப் பசி, வெறி மிருகங்களின் குரூரங்கள் - இவற்றுக்கிடையே சலிப்பூட்டி வதைக்கிற இந்த 'நொண்டிப் பய' வேலையில், இந்தச் சிரிப்பும் விளையாட்டும் கூட இல்லாவிட்டால் வறண்டு போகும். வெறுத்துப் போகும்.

இந்தக் கிண்டலும், கேலியும் தேவைதான். போலியானதாக இருந்தாலும்



மனசை ஈரப்படுத்துகிற நீர்க் கனைகள். மனுஷத்தன்மையை உணர வைக்கிற உயிர்ப்பு நீரோட்டம். கயத்தின் கரணையைக் கிள்ளிப் பார்த்துக் கொள்கிற ருசுக்கள்.

''என்னம்மா தேவி, உத்தரவு உண்டா, இல்லியா? சட்டுன்னு சொல்லித் தொலையேன், மூதேவி!''

''எனக்குப் பக்கடா வேணும்.''

''துட்டுக்குடு தாயி.''

பிளாஸ்டிக் டப்பாவில் கிடந்த சில்லறையைத் தந்தாள். மதியச் சாப்பாட்டுக்கு ஊறுகாய் வாங்கியது போக, மிச்சச் சில்லறை.

''ஏய், கெங்கு ஒனக்கு என்ன வேணும்?''

''சக்கரை பூந்தி.''

''சரி சரி... எல்லாரும் ராசாத்திகிட்டே துட்டைக் குடுத்து விடுங்க. அவ தனித் தனியா பொட்டலங்களை வாங்கிட்டு வரட்டும்.''

''சரி... நா வாங்கிட்டு வாரேன். நீங்க இங்கேயே நிக்கணும்? போயிரக் கூடாது?''

''நாங்க ரோட்டிலேயே நிக்கறோம்டி. ஒனக்கென்ன பயம்? ஒன்னையென்ன தூக்கிக்கிட்டா... போயிடப் போறாக?''

''அவளைத் தூக்கிக்கிட்டு யாராக்கம் போனா... அவளுக்குக் காக்கவா போகுது? வேண்டாம்னு மறுக்கவா போறான்?''

''ராசாத்தி எங்கன்னு அவுக வீட்லே



கேப்பாகளே?''

''எதுக்குக் கேக்கப் போறாக? சனியன் தொலைஞ்சதுன்னு சந்தோஷப்படுவாக. ஆறு பவுன் நகையும் கல்யாணச் செலவும் மிச்சம்னு நினைக்கக்குவாக.''

ராமலட்சுமி இப்படிச் சொல்ல, மற்றவர்கள் 'களுக்'கென்று சிரிக்க, இவர்களுக்கும் சேவுக் கடைக்கும் நடுவில் போய்க் கொண்டிருந்த ராசாத்தி, இவர்களைப் பார்த்துக் கோபத்துடன் முகத்தை வெட்டினாள்.

''ச்சீய், போங்கடி கழுதைகளா!'' உதட்டைக் கோணலாக்கி 'வெவ்வே' காட்டினாள். ராமலட்சுமியும், கெங்கம்மாவும் இன்னும் ராசாத்தி பற்றி ஏதோ பேசிக் கொள்ள, சொர்ணத்தின் பார்வை, சாலையிலும், பஸ் நிலையத்திலும் ஊர்ந்தது.

வெள்ளை டவுன் பஸ்களில் ஓடி ஏறுகிற கிராமத்துப் பெண்கள். கையில் குழந்தையுடன் காலில் செருப்பில்லாமல், தன் ஊர் செல்லும் பஸ் அடையாளம் தெரியாமல், தேடித் தேடி விசாரிக்கிற பட்டிக் காட்டு ஜனங்கள்.

சாலையிலேயே நிற்கிற மதுரை பஸ்களில் ஏறுகிற - இறங்குகிற பெண்கள். அவர்கள் உடம்பைச் சுற்றியிருக்கிற வண்ண வண்ணப் பட்டுச் சேலைகள். அழகழகாய் பார்டர்கள் ஜொலிக்கிற சேலைகள். நவநாகரிகமாய்ச் சுடர் விடுகிற சேலைகள்.

சொர்ணம் என்கிற சராசரிப் பெண்ணை ஈர்த்து, கனவுலகத்துக்கு இழுத்துச் செல்கிற சேலைகள். இவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத கனவுச் சேலைகள்.

ஒவ்வொரு சேலையையும் அணுஅணுவாய் மேய்கிறாள். அதன் கலர்கள்... டிசைன்களின் வித்தியாசங்களைப் பார்க்கிறாள். விதவித அழகோடும், அகலத்தோடும் அமைந்திருக்கிற பார்டர்கள். மேட்சிங்காக அணிந்திருக்கிற ஜாக்கட்கள். அதன் கழுத்து மாடல் புதுமைகள்.

அழகில் - நிறத்தில் - இவளின் காலடித் தூசியைத் தொடக் கூட அருகதையில்லாத பெண்கள்,

இவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத விலை உயர்ந்த ரகங்களை உடுத்தியிருக்கிறார்கள்.

விளக்குமாற்றுக்குப் பட்டுக் குஞ்சம் கட்டிய மாதிரி...

இதே சேலைகளை, சொர்ணம் உடுத்தினால்... அவற்றின் மகத்துவம் உயரும். ஜென்மப் பலனைப் பெறும்.

அவர்கள் கழுத்தில் அணிந்திருந்த தங்க நகைகள். முறுக்கு வடச் சங்கிலி, டாலர் தொங்குகிற ஒற்றைச் செயின், நெக்லஸ், காதுகளில் கிடக்கிற விதம்விதமான தங்கச் சிமிட்டல்கள்.

**சொ**ர்ணம் கனவில் உலவினாள்.

> "முதல்வர் காலில் அடக்கமாக விழுந்த அறநிலையத்துறை அமைச்சர் அவர்களே! வேகமாக விழுந்த வேளாண்மைத்துறை அமைச்சர் வெங்கடசாமி அவர்களே! 'பொத்'தென விழுந்த போக்குவரத்துத்துறை அமைச்சர் பொன்னுசாமி அவர்களே! நிதானமாக விழுந்த நிதியமைச்சர் நீலகண்டன் அவர்களே!...."
>
> - தே. ராஜசிங் ஜெயகுமார்

அவளுக்கேயுரிய மாய உலகம். விதம்விதமான வண்ணச் சேலைகள் அலை அலையாக ஆர்ப்பரிக்கிற உலகம். நவநவமான ஜால ஜொலிப்புகளுடன், குவியல் குவியலாய் நகைகள். கண்களைச் சிமிட்டுகிற தங்க உலகம்.

அவள் அழகுக்கும், அந்தஸ்துக்கும் தகுதியான உலகம். பெரிய குடும்பத்துப் பெண், பேரழகிக்குரிய உலகம். அந்த அழகுச் சிகரத்துக்கு நியாயம் வழங்குகிற உலகம்.

இவளது உள் உலகத்தில், அழகற்றவர்கள் எல்லோரும் மூளிகளாய் இருக்கக் கடவர். ஆடைகளும், ஆபரணங்களும் மூளிகளுக்குத் தூரமாய் இருக்கக் கடவது.

சென்னை செல்கிற 'வள்ளுவர்' ஓரமாய் வந்து நின்று கொண்டிருந்த சொர்ணத்தை உரசிக் கொண்டு ஹாரன் அலற -

அந்தத் திடீர்ப் பேய்ச் சப்தத்தில் செவியும் மனசும் திடுக்கிட -

கெங்கம்மா அவள் கையைப் பற்றிச் சரேலென்று இழுக்க -

டிரைவர் அவளைச் சன்னையோடு திட்டுகிறார்.

''ஒதுங்கி நின்னு தொலைங்களேன்! எதுக்கு எங்க உசுரை வாங்குறீங்க?''


சொர்ணம் அவரை எரித்து விடுவதைப் போலப் பார்த்தாள். முகத்தில் கோபக் கனல். உதட்டுக்குள் 'பொடு பொடு'வென்று முணுமுணுத்தாள்.

சொர்ணம் காயப்பட்டு விட்டாள். அநியாயமாகவும், அனாவசியமாகவும் அவமதிக்கப்பட்டு விட்ட வேதனை உணர்ச்சி. காயத்திலிருந்து கசியும் ரத்தமாக அவளது சோகப் பெருமூச்சு.

இந்த உலகம், அன்பற்ற உலகம். நீதியற்ற உலகம். வாழும் நியாயத்தை இழந்து விட்ட உலகம்.

**ரா**சாத்தி இரண்டு கைகளும் கொள்ளாமல் பொட்டலங்களோடு வந்தாள். அவரவர் பொட்டலங்களை எடுத்துக் கொண்டனர். சொர்ணத்தின் கையிலும் ஒன்று திணிக்கப்பட்டது.

அவரவர் பொட்டலங்களைப் பிரித்து, கொறித்துக் கொண்டே வடக்காக நகர, சொர்ணத்திற்குப் பிரிக்க மனமில்லை.



கொறிக்கும் மனநிலை இல்லை.

மனசுக்குள் அலை பாய்கிற அவல நினைவுகள், கம்பீரமான கற்பனைகளைக் கண்டு சுகம் காண்கின்றன.

கௌரவமான பெரிய பெரிய மனிதர்கள், இவளது அழகைப் பார்த்துத் திடுக்கிட்டு பிரமிக்கிறதாக எழுகிற கற்பனைக் காட்சி...

ஊர் மக்களும், வட்டார மக்களும் வாய் பிளந்து நிற்க, அவளின் அழகின் தனிச் சிறப்பை உலகமே ஒப்புக் கொண்டு தலை வணங்குகிற அபூர்வக் காட்சி...

உள்ளங்கை வியர்க்கிறது. கைக்குள் வைத்திருந்த பொட்டலத்திலும் வியர்வைச் சுவடுகள். நனைந்து பக்கடா நமர்த்துப் போயிருமோ என்று மடியில் வைத்துக் கொண்டாள்.

அவளுக்குச் சில அடிகள் முன்னால் நடக்கிற தோழிகள். சிரிப்பும் கும்மாளப் பேச்சுமாய்ச் செல்கின்றனர். வாயில் கொறிக்கிற தின்பண்டத்தால்... சிதைவுறுகிற பேச்சுச் சப்தம். சுருதி மாறி ஒலிக்கிற சிரிப்புகள்.

இவர்களைக் கடந்து ஓடுகிற பஸ்கள், வேன்கள், லாரிகள், சைக்கிள்கள், ரத்னம் தீப்பெட்டி யாபீஸ் பஸ்.

அதில் அடைபட்டு மூச்சுத் திணறுகிற சிறுமிகள், அரும்புகள். இவர்களைப் பார்த்ததும் நட்பார்ந்த ஆனந்தத்தில் கூச்சலிடுகிற பெண்கள். சிறுமிகள்.

''ஏய், ராசாத்தீ....''

''செங்கு, ஹைய்யா!''

கூட்டுக் கூச்சல். சந்தோஷக் கூப்பாடு. ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிற தலைகள். இவர்களும் அதுகளைப் பார்த்துக் கையாட்டி, கூச்சல் போடுகின்றனர்.

பின்னால் திரும்பிப் பார்த்தாள், ராசாத்தி.

யோசனையின் அழுத்தத்துடன் வந்த சொர்ணத்தைப் பார்த்தாள்.

''என்னடி, சொர்ணம் பக்கடா திங்கலியா?''

''அவா திங்க மாட்டா. வீட்லே போய்...''

''புருஷனுக்குக் கடிச்சிக்கிடையா குடுப்பாளா?''

''ஏய் ராசு, வாயைப் பொத்துடி. அவா காதுக்குக் கேட்டுச்சன்னா... ஒன்னைப் பிடிக்க... ஆய்ஞ்சிருவா, ஆய்ஞ்சு!''

''கிழிப்பாள். எனக்கும் வாய் இருக்குல்லே? நானும் பிடிக்க வஞ்சி விட்டுற மாட்டேன்?''

**வி**லக்குச் சாலையில் நடந்தனர். கண்ணுக்கு வரி வடிவமாய்த் தெரிகிற கிராமம்.

சூரியன் அஸ்தமித்து விட்டது. ஆகாய நீலத்துக்குப் போட்டியாக நீலமலையாய் நிறம் மாறித் தெரிகிற மேற்குத் தொடர்ச்சி நீள மலை. கிராமத்திற்குள் தெரு விளக்குகள் கண்விழித்துக் கொண்டன.

எல்லோரும் கேலியும் சிரிப்பும் மாறாமல் பிரிந்து கொள்ள, அதே கவலை நிறைந்த மௌனத்துடன் வீடு நோக்கி நடக்கிற சொர்ணம்.

இதோ... தன் தெரு. தன் வீடு.

வீட்டு வாசலில் யாரோ ஒரு சிறுவன். யாரது? ரமேஷ்! அவளுக்குள் குப்பென்று ஒரு சந்தோஷம். அக்கா மகன் ரமேஷ் ஐந்தாம் வகுப்பு படிக்கிறவன். அவன் முகமெல்லாம் மலர்ச்சி. அக்கா மகனைப் பார்த்த அசலான ஆனந்தத்தில் பொங்கி வழிகிற மனசு.

''ஏலேய், எப்படா வந்தே?''

''ஆய், சித்தி! மத்தியானமே வந்துட்டேன்.''

அவளையும் முந்திக் கொண்டு ஆவலோடு பாய்ந்து வந்த கேள்வி, ''அம்மா வந்துருக்காளா?''

''இல்லே. அய்யா கூடத்தான் சைக்கிள்லே வந்தேன்.''

''ஏலேய், அம்மாவைக் கூட்டி வரக் கூடாதாடா?''

''அம்மா வரலை. ஏன் வரலைன்னு தெரியாது.''

''சாப்பிட்டாயா?''

''இனிமேதான்.''

அவனை அன்புடன் - ஆசையுடன் - சேர்த்து அணைத்துக் கொண்டாள். அவளுக்குள் இனம்புரியாத மகிழ்ச்சி. அக்காளையே பார்த்து விட்ட மாதிரியான சந்தோஷம்.

''சரி... வாடா'' அவன் கன்னத்தைத் தடவி வழித்து, வாயில் வைத்து முத்தமிட்டுக் கொண்டாள்.

ஒரு பாசக் குழைவோடு மனசுக்குள் நெகிழ்ந்து ஓடுகிற நினைவு. தேனான நினைவு.

அக்காவை நினைத்தால்...

மனசுக்குள் ஒரு சந்தோஷ தென்றல். உப்பங்காற்றின் சுகமாக... ஆரோக்கியமாக... நினைவுகள்.

கூடவே ஒரு நெருடல்... புழுவாக நெளிந்த ஒரு தர்மசங்கடம்...

(தொடரும்)



வண்ணப்படம் : திலீப் பானர்ஜி

தொன்மையின் சிறப்பும்
இளமையின் ரசிப்பும் இணைந்தது....

# கல்கி தீபாவளி மலர்-1992

வண்ண வண்ண மடல்களின் அணிவகுப்பு :-

★ இயற்கை எழில் கொஞ்சும் வால்பாறை
★ கவிஞர் பார்வையில் கண்ணன் - ம.செ, மாருதி, லதா
★ பட்டாசு-வாணங்கள் உருவாக்கும் தொழிலகங்கள்
★ காஞ்சிப் பெரியவர்கள் – சிருங்கேரி பீடாதிபதிகள்
★ அயல்தேச அற்புத ஓவியங்கள்
★ திருவான்மியூர் திருத்தலம் – தனுசுவின் நகாசு சித்திரங்கள். மருந்தீசுவரர் – திருபுரசுந்தரி திருவுருவங்கள்
★ கோவா – கோலாகல விடுமுறைக் காட்சிகள்
★ கவிதை மலர் ★ தம்பம்பட்டி வழங்கும் மரச்சிற்பங்கள்
★ நாடோடிப் பாடல்களில் நயமான காட்சிகள்
★ தென் ஆப்ரிக்காவில் யோகாவின் காமிரா

ஏமாற்றத்தைத் தவிர்க்க இன்றே உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்; அல்லது கல்கி காரியாலயத்துக்கு எழுதுங்கள்.

**தனிப்பிரதி விலை ரூ. 40; ரிஜிஸ்தர் தபால் செலவு ரூ. 8/-**

மானேஜர், கல்கி, சென்னை – 600 097.

# 'எங்களுக்கும் ஆசை உண்டு!'

◆ பிரபலங்களின் சின்னச் சின்ன ஆசைகளைத் தொகுத்து வெளியிட்டிருந்தீர்கள். அருமை. மகிழ்ச்சி. எனது ஆசைகள் என்ன தெரியுமா...?

ஓடையில் மீனாய் நீந்திட ஆசை
உலகை ஒருமுறை வலம்வர ஆசை
தங்கை ஒருத்தியின் கைத்தலம் பற்றி
நிலவின் மீது உலாவர ஆசை
இறைவனைக் கண்டு இரண்டொரு வார்த்தை
பேசிட எனக்குப் பெரிதும் ஆசை
பூக்கள் தோறும் சென்றே தேனைப்
பருகும் வண்டாய்ப் பறந்திட ஆசை
கல்கிப் பிள்ளையார் கைகளைப் பிடித்து
கடற்கரை மணலில் கால்களைப் புதைத்து
நடந்து செல்லவே நெடுநாள் ஆசை

அம்பாசமுத்திரம், இரா. பாஸ்கரன்.

◆ "குதிரைகள் சாப்பிடாட்டி எனக்கும் சாப்பாடு இறங்காது" என்று தென்னவன் கூறியதைப் படித்தவுடன் மனம் குளிர்ந்தது.

நவமலை, பி. ஜெயப்பிரகாஷ்.

◆ "முற்றுகை" நாவலுக்கு வரையப்படும் படங்கள் வாசகர்களின் மனத்தை முற்றுகையிடுகின்றன. ரத்னத்தின் உருவம் உயிரோவியமாக நினைவில் நிரந்தரமாகப் பதிந்து விட்டது.

தஞ்சாவூர் - 7, வளர்மதி ஆசைத்தம்பி.

◆ பத்திரிகையாளர் 'தவ்லீன் சிங்'கின் பேட்டி, நல்ல துணிச்சலான பத்திரிகையாளப் பெண்மணியை எங்களுக்கு இனம்காட்டியது. இவரைப் போல் பெண்மணிகள் தான் இன்றைய இந்தியாவில் ஒவ்வொரு துறைக்கும் தேவை!

மொரட்டுப்பாளையம், இராஜேஸ்வரன்.

◆ 'கவர்ச்சியான தோற்றம், நடை, உடை, பேச்சு உள்ளவராக இருந்தால் அவரை நம் மக்கள் கிட்டத்தட்டக் கடவுளாகவே மதிக்கிறார்கள். அப்படிப்பட்ட தலைவர்கள் இருப்பதே ஆபத்தானது' என்ற தவ்லீன் சிங்கின் வரிகள் நம் நாட்டின் தற்போதைய அவல நிலைமை எவ்வளவு தத்ரூபமாகச் சித்திரிக்கின்றன!"

அரசடி, நெல்லை. வி. சிவா.

◆ மலிவான பிளாஸ்டிக் பொருள்களின் பயன்களையும், அதன் நச்சுத் தன்மைகளையும் அலசி ஆராய்ந்த கட்டுரை, பயனுள்ளது.

கவுந்தப்பாடி, த. குணசேகரன்.

◆ பாசம் 'ஜாதக'த்தை வென்று விட்டது. சோம வள்ளியப்பன் மிக அருமையாக எழுதி இருக்கிறார்.

சிதம்பரம், கு. குருமூர்த்தி.

◆ சோம வள்ளியப்பன் கூற வந்ததை இலை மறை காயாய்க் கூறியிருக்கிறார். மனித முயற்சியையும் முன்னேற்றத்தையும் குறைக்கக்கூடியது இந்த 'ஜாதகம்' என்பது தெளிவு. ஐந்து வகை தினசரிகளைப் பார்த்தால் ஐந்து வகைப் பலன்கள் இருக்கும்!

சிதம்பரம், தமிழரசி.

◆ 'கல்கி' அதன் தரமான, வித்தியாசமான சிறுகதைகளுக்காகவே வாசகர் நெஞ்சில் இடம் பெற்றிருக்கிறது. ஆனால், கடந்த சில மாதங்களாக நான்கைந்து கருத்துக்களில் திரும்பத் திரும்ப சில கதைகள் கல்கியில் பிரசுரமாகிக் கொண்டு வருகின்றன. அடுத்தடுத்த வாரங்களிலே கூட இது நிகழ்ந்து விட்டிருக்கிறது. கவனம் தேவை.

திருவெறும்பூர், தா. பாலசுப்ரமணி.

◆ தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழல் ஆகும்மே....

என்கிறது வெற்றி வேற்கை. மெக்காலே வளர்த்த அடிமைப் புத்தி என்ற தலைப்பிலான தங்கள் தலையங்கம் கூட அந்த ஆலம் விதை போல மிகப் பெரும்பயன்தர வல்லதே.

சென்னை - 15, வி. வி. சிவகுமார்.

◆ கல்கி 20.9.92 இதழில் வெளியான "வேலை தேடும் வேளையில்" என்ற சிறுகதை தந்தை மகள் இருவருக்கும் இடையில் இருக்கும் உள்ளார்ந்த அன்பினை வெளிப்படுத்துவதாக மிகவும் நன்றாக அமைந்துள்ளது. ஆனால் அதிலே "சிநேகா" என்ற எங்கள் அமைப்பின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதால் இந்தக் கடிதம் எழுத நேர்ந்தது. எங்கள் அமைப்பின் உதவியை நாடி வரும் ஒருவர், எங்களுடன் பகிர்ந்து கொள்ளும் எண்ணங்களை, நாங்கள் எக்காரணம் கொண்டும் இன்னொருவருக்கு: அவர் நெருங்கிய உறவினர் ஆனாலும் கூட - தெரிவிப்பதில்லை. இந்த நம்பிக்கையின் பேரில்தான் பலர் எங்களை மனச்சாந்திக்காக நாடி வருகிறார்கள். கதையைப் படிப்பவர்களுக்கு இவ் விஷயத்தில் எந்தவித சந்தேகமும் எழ வேண்டியதில்லை என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

சென்னை - 14, சரோஜா சுப்பிரமணியன்,
செயலாளர், சிநேகா.

◆ கல்கி 20.9.92 இதழில் 50 ஆண்டுகளுக்கு முன் பகுதியில் செப்டம்பர் 11 பாரதி ஜெயந்தி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பாரதி நினைவு நாள் என்று இருக்க வேண்டும். பிறந்த நாள் டிசம்பர் 11 அல்லவா! 50 ஆண்டுகளுக்கு முன் நடந்த தவறு இன்று மறுபிரசுரமும் ஆகியுள்ளதே! கவனித்திருக்கக் கூடாதா?

திருச்சி -2, அ. இராசரத்தினம்.


இனி ஒரு சதி
10
கதை: பத்மா ரவிசங்கர்
படம்:
கார்த்திகேயன் தோட்டத்துக்கு வந்து...
ஆராவமுது! பதட்டமா தப்பி ஓடறவன், தடயம் தவற விட வாய்ப்பு அதிகம்.
தேடுவோம் ஸார்!
சில நிமிஷங்களில்...
ஆ! ஒரு ஷூ ஐலெட்! ஆசாமி அவசரமா ஓடறப்ப ஷூவிலேர்ந்து தெறிச்சிருக்கணும்..
ம்... தோட்டத்துக்குத்தண்ணி ஊத்தியிருக்கு.. பூச்செடி
பாருங்க...
அதோ! செடிகள் மடிந்து, ஒடிந்து... பாத்தியிலே ஷூவின் அடிவார அச்சு!..
லக்குதான் சார்!
பூங்காவில் அர்ச்சனா, யுவராஜிடம்...
என்னடா கண்ணா? என்ன ஆச்சு? ஏன் லேட்? சொல்லேன்!
அதுக்கு முன்னே நீ சொல்லு! உன் காதல் உண்மையானது தானா?
டார்லிங்! நிஜமாவே நீ என்னைப் புரிஞ்சுக்கலையா அல்லது ஏதோ தப்பு பண்ணிட்டு அந்த பதற்றத்தினால பேசறியா? ஏன் உனக்கு இந்தச் சந்தேகம் வந்தது?



சாரி டார்லிங். நான் உண்மையைச் சொல்லிடறேன்.. எனக்கு உன் உதவி வேணும்.
என்ன சொல்லப் போறே? பாலுக்கு நீ விஷம் வைச்சுடலையே...?
ஐயோ! இல்லவே இல்லை! ஆனா நான்... வந்து...
சொல்லும்மா. என் உயிரைக் கொடுத்தாவது உனக்கு உதவி பண்ணறேன்...
அன்றிரவே கார்த்திகேயன் யுவராஜ் வீட்டின் கதவைத் தட்டி விசாரிக்க...
செகண்ட் ஷோ போயிருக்கான். ராத்திரி ஃபிரெண்ட் வீட்டில் தங்கிட்டு நாளை சாயந்திரம் தான் வரப் போறதாச் சொன்னான்... எதுக்குக் கேக்கறீங்க?
அர்ச்சனா வீட்டை அடைந்தார்...
அகாலத்துல தொந்தரவு பண்றதுக்கு மன்னிக்கணும்.. இன்னிக்கு யுவராஜை மீட் பண்ணினீங்களா?
ஓ! சாயந்திரம் ஐந்தரை மணிலேர்ந்து ஏழு மணி வரை...
..நாங்க வழக்கமா சந்திக்கிற பார்க்கில் என்னோட தான் இருந்தார். அப்புறம் ஏதோ செகண்ட் ஷோ போறதாச் சொல்லிட்டுக் கிளம்பினார்.. ஏன்?
ஏனா? ஏன்னா எல்லோரும் சேர்ந்து சதி பண்றீங்க, அதான்!
தொடரும்



வாழ்வின் பிரச்னைகளை இவள் இன்முகத்துடன் ஏற்றுச் சமாளிக்கிறாள். அலுவலகப் பிரச்னைகள் ஆயிரம். அத்துடன் அன்புச் செல்வங்களின் தேவைகள். இரண்டையும் மலர்ந்த முகத்துடன் ஏற்கும் மன உறுதி இவளுக்கு உண்டு. இத்தகைய பெண்களுக்காகவே ஒயர்லின் ஸ்மார்ட் வழங்குகிறது — ஸ்திரீ சக்தி.

இது இவளுடைய விசேஷத் தேவைகளையும் எண்ணங்களையும் நிறைவேற்ற உதவும் திட்டம்.

INTRODUCING
STREE
SHAKTHI
MORE POWER TO WOMEN.

இவள் பாடுபட்டுச் சேர்க்கும் பணம் விரைவில் பெருகி வளர்வதற்கென்றே வடிவமைக்கப் பட்டது.

ஸ்திரீ சக்தி — அளிப்பது ஒயர்லின் ஸ்மார்ட். ரூ.1000 கோடி ஸ்மார்ட் குரூப்பின் பக்க பலத்தைக் கொண்ட ஒரு நிதி நிறுவனம். 24,000-க்கு மேற்பட்ட டெபாசிட்தாரர்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு நிறுவனம்.

ஸ்திரீ சக்தி — சிறந்ததையே விரும்பும் பெண்மணிகளுக்கு.

## இப்பொழுது மாதந்தோறும் வட்டி பெறுங்கள் — 15%

## ஸ்திரீ சக்தி — ரொக்க சர்ட்டிபிகேட்

| திட்டம் | காலம் மாதங்களில் | தொடக்க டெபாசிட்* | முதிர்வடையும்போது வழங்கப்படக்கூடிய தொகை | விளைவான வருடாந்திர வருமானம்* |
|---|---|---|---|---|
| 1 | 60 | Rs. 950 | Rs.2000 | 22.11% |
| 2 | 48 | Rs.1102 | Rs.2000 | 20.37% |
| 3 | 36 | Rs.1280 | Rs.2000 | 18.75% |
| 4 | 25 | Rs.1466 | Rs.2000 | 17.48% |

*தொடக்க டெபாசிட்டுகள் வேறுபடலாம் இருக்கும். அதிகபட்ச டெபாசிட்டுகள் 60, 48, 36 மற்றும் 25 மாதங்களுக்கு முறையே ரூ.475/-, ரூ.551/-, ரூ.640/- மற்றும் ரூ.733/- ஆகிய தொகைகளின் மடங்குகளில் இருக்கும்.

## பிக்சட் டெபாசிட்

| காலம் மாதங்களில் | மாதாந்திர வட்டி* |
|---|---|
| 25, 36, 48, 60 | 15% |

*காலாண்டு அரையாண்டுகளில் வட்டி பெற விரும்பும் டெபாசிட்தாரர்களுக்கு, RBI கட்டளைகளின்படி மாதாந்திரக் கால அளவுகளில் ஆண்டு ஒன்றுக்கு 15% வீதத்தில் கூட்டப்பட்டு வட்டி வழங்கப்படும்.

## குமுலேட்டிவ் டெபாசிட்

| காலம் மாதங்களில் | டெபாசிட் தொகை | முதிர்வடையும்போது வழங்கப்படுவது* | ஒவ்வொரு கூடுதல் ரூ.1,000/- தொகைக்கு | விளைவான வருடாந்திர வருமானம்* |
|---|---|---|---|---|
| 25 | Rs.2000 | Rs.2728 | Rs.1364 | 17.47% |
| 36 | Rs.2000 | Rs.3128 | Rs.1564 | 18.80% |
| 48 | Rs.2000 | Rs.3631 | Rs.1815 | 20.39% |
| 60 | Rs.2000 | Rs.4214 | Rs.2107 | 22.14% |

*மாதாந்திரக்கால அளவில் 15% வீதத்தில் வட்டி கூட்டப்பட்டு வழங்கப்படும், வரிப் பிடித்தத்திற்கு உட்பட்டு, வட்டியானது முதிர்வடையும்போது சேர்க்கப்படக் கூடியதாக வழங்கப்படும்; டெபாசிட் வைக்கப்பட்டிருக்கும் காலத்தில் வட்டி வழங்கப்படமாட்டாது.

**FAA—**

**கிரைசிலின் மூலம் உயர்ந்த பாதுகாப்பு**

இந்த மதிப்பீடு, வட்டி மற்றும் அசல் தொகையைக் குறித்த காலத்தில் வழங்குவது பற்றிய பாதுகாப்பின் அளவு, உறுதியாக இருப்பதைக் குறிக்கிறது.

FINANCIAL

# நவராத்திரி கேள்வி-பதில்

**- வாசகர்கள் கேள்விக்குப் பதிலளிப்பவர்**

**மயிலை விஸ்வநாத சிவாச்சாரியார்**



● கௌசல்யா ஸ்ரீராம், ஹைதராபாத் - 7

●● *தவிர்க்க முடியாத காரணங்களால் மஹாளய அமாவாசை அன்று கொலு வைக்க முடியாமல் போனால், நவராத்திரி ஆரம்பித்துச் சில நாட்கள் கழித்து வைக்கலாமா?*

●● வைக்கலாம்; தவறில்லை. ஆனால் புரட்டாசி பௌர்ணமி அன்று வரை அம்பாளைப் பூஜை செய்து முடிக்க வேண்டும்.

● பு.ஜி. கல்யாணசுந்தரம், கோவை - 6

●● *நவராத்திரி விழாக்களில் ஆண்களுக்கு அதிகப் பங்கு இல்லையே; ஏன்?*

●● கொலு வைப்பதிலும், வீட்டைத் தூய்மையாய் வைத்துக் கொள்வதிலும் ஆண்கள் உதவுவதுடன் தேவி பாகவதம், லலிதா சஹஸ்ரநாமம், போன்றவற்றை ஆண்கள் நவராத்திரி சமயத்தில் பாராயணம் செய்து மனைவியின் பூஜைக்கு உறுதுணையாக இருக்கலாம்.

● எஸ். நளினி விஸ்வநாதன், கோவை - 1

●● *பல ஆண்டுகளாகக் கொலு வைத்துக் கொண்டிருந்த எங்கள் வீட்டில் குடும்பச் சூழ்நிலை காரணமாகக் கடந்த இரண்டு - மூன்று வருடங்களாய்க் கொலு வைப்பதில்லை. மீண்டும் தொடங்க வேண்டுமெனில் என்ன செய்ய வேண்டும்?*



●● முன்பு எப்போதும் வைத்தது போல் இவ்வாண்டு நீங்கள் கொலு வைக்கலாம். குடும்பச் சூழ்நிலையில் நல்ல திருப்பம் அம்பாள் அருளால் உண்டாகும். குடும்பத்துடன் லலிதா சஹஸ்ரநாமமும் அபிராமி அந்தாதியும் பாராயணம் செய்து வர, மனச் சாந்தி கிடைக்கும்.

● கே. சுசீலா, வேலூர்

●● *பல ஆண்டுகளாக உள்ள கொலு வைக்கும் வழக்கத்தைத் திடீரென்று கைவிடலாமா?*

●● அப்படிச் செய்வது மகாலக்ஷ்மி, சரஸ்வதி, துர்கையை நம் வீட்டிலிருந்து வெளியே அனுப்புவதற்குச் சமம். என்ன கஷ்டம் வந்தாலும், வாழ்க்கை முறை மாறினாலும் அதற்கேற்றபடி எளிமையான முறையில் கொலு வைத்து, இயன்ற அளவு நைவேத்தியம், பூஜை செய்வது நல்லது. பிறர் வீட்டுக் குழந்தைகளுக்குச் சுண்டல் முதலியவற்றைத் தந்து, கொண்டாட நவராத்திரி ஒரு நல்ல சந்தர்ப்பம். இதைப் போன்ற நல்ல வழக்கங்களை விட்டு விட்டால் வாழ்க்கை மேலும் இயந்திரகதியானதாய் மனிதப் பண்பு குன்றியதாய்த்தான் போய் விடும்.



● கே. ஷண்முகம், திருப்பூர்

●● *பாட்டுப்பாடித்தான் சுண்டல் வாங்க வேண்டுமா?*

●● பாட்டுப் பாடும்போதாவது அம்பாளை தியானித்து மனம் நமஸ்கரிக்குமே என்ற எண்ணத்தில்தான் இப்படியொரு வழக்கம்.... 'சுண்டல் நினைப்பை' மாற்றவும் அது ஏற்படுத்தப்பட்டிருக்கலாம்!...



● விஸ்வநாத சிவாச்சாரியர்

நிற்க; நம் நாட்டுப் பண்டிகைகள் சமயத் திருவிழாக்கள் யாவுமே ஆடல் பாடல் கலைகள் மட்டுமின்றி அழகுணர்ச்சியும் வெளிப்பட்டு வளரும் வகையில் அமைந்தவை. அவற்றையும் தெய்வத்துக்குச் சமர்ப்பிக்க உரியவையாகவே நாம் கருதி வந்துள்ளோம். அம்பாளை, 'சங்கீத வாத்ய விநோதினியாக' மட்டுமின்றி, 'சங்கீத ரசிகே' என்றும் (முத்துஸ்வாமி தீக்ஷிதரின் நவாவர்ண கீர்த்தனை) வழிபடுவது வழக்கம்.

நமது பாட்டை ரசிக்க வேண்டுமெனில் அந்த ஜகன்மாதா எவ்வளவு கருணையுள்ளம் படைத்தவளாக இருக்க வேண்டும்!

● என். சுந்தரி, ஜம்ஷெத்பூர்

●● சுமங்கலிகளுக்கு மங்கலப் பொருள்களை அளிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தியதை விட, எளியோரின் அத்தியாவசியத் தேவைக்கு உதவுவதை (நவராத்திரியின் போது) வழக்கமாக ஏன் கொள்ளவில்லை?

●● நீங்கள் குறிப்பிடும் வழக்கம் கர்நாடக மாநிலத்தில் இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டிலும் இவ்வாறு ஏழை எளியோருக்கு உதவுவதில் எவ்விதத் தடையும் இடையாது. இப்படிச் செய்வதால் நன்மையே.



● ஜி. சூர்யா, திருநெல்வேலி - 11

●● ஒரு சிறிய செம்பில் அரிசியைப் போட்டு, தேங்காய், மாவிலை வைத்துக் கொலுப் படியில் கலசம் வைக்கிறார்களே... எதற்காக?



●● இதற்குப் பூர்ண கும்பம் என்று பெயர். இதில் ஜலம் வைத்து வழிபடுவது கங்கையைக் குறிக்கும்; அரிசியை வைத்து வணங்குவது அன்னபூரணியாகிய அம்பாளைக் குறிக்கும். 'பூர்ணம்' என்றால் நிறைவு - நம் வயிற்றுப் பசியைப் போக்குபவளான அன்னபூரணியை வழிக்கும் போது அதற்கு அடுத்த கட்டமான ஆன்மிகத் தேடலுக்கும் சேர்த்தே வரம் கேட்கிறோம்.

● ஏ.கே. பத்மாவதி, தேவிகாபுரம்

●● சூதாட்டத்தில் நாடிழந்து, காட்டில் அலைந்த ஒரு மன்னனும் அவன் மனைவியும் துர்வாசரின் அறிவுரைப்படி நவராத்திரியில் சரஸ்வதி பூஜை செய்து நாட்டை மீண்டும் அடைந்தார்கள். இதன் அடையாளமாகவே கொலுவில் செடி, மலை, மரம் போன்றவற்றை மணல் பரப்பி ஜோடிக்கிறோம் (Park) என்று ஒரு கதை சொல்கிறார்களே?



●● ஸ்ரீ ராமர் சீதையைக் காட்டில் இழந்து தேடி, அலைந்து சலித்த போது, நாரத முனிவர் அவரிடம் நவராத்திரி தினங்களில் துர்கா, லக்ஷ்மி, சரஸ்வதி மூவரையும் பூஜிக்கச் சொன்னதாகவும்; ராமரும் அவ்வாறே செய்து விஜயதசமி அன்று சீதா பிராட்டியார் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்ததாகவும் தேவி பாகவதத்தில் சொல்லப்பட்டுள்ளது. கொலுவில் வனம் (Park) அமைப்பதை இக்கதையின் அடையாளமாகக் கூடக் கொள்ளலாம்.



● வி. பாக்கியலக்ஷ்மி, சென்னை – 72

●● *முதன் முதலில் கொலு வைப்ப வர்கள் எந்தெந்த பொம்மைகளை வைத்துப் பூஜை செய்ய வேண்டும்?*

●● முழுமுதற் கடவுளான விநாயகப் பெருமானையும் தேவி ஆதிபராசக்தியையும் முருகக் கடவுளையும் ஒரே சரிசமமாக வைத்துப் பூஜையைத் தொடங்கவும். தேவியின் வலது பக்கம் விநாயகர் இருக்க வேண்டும்.

● கோ.ரா. சந்திரன், சங்கரன்கோயில்

●● *நவராத்திரியின் போது சாப்பாட்டில் வெங்காயம் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று சொல்வது ஏன்?*

●● நவராத்திரி நோன்பு சமயமாகக் கருதப்படுவதால் நம் இந்திரியங்களைத் தூண்ட வல்லப் பதார்த்தங்களை ஒதுக்குவது வழக்கம்.

● எஸ். ராதா, திருச்சி – 21

●● *உலகத்திலேயே வேறு எங்காவது நமது நவராத்திரி போல, ஏதாவது ஒரு அம்சத்திலாவது ஒத்திருக்கும் பண்டிகை அல்லது திருவிழா உண்டா?*

● ஜப்பானில் உண்டு – பொம்மைகளைக் கொலுபோல் அடுக்கி வழிபடும் வழக்கம். வேளாங்கண்ணி மாதா கோவில் தேர் திருவிழாவையும் தங்கள் கேள்விக்குப் பதிலாகக் குறிப்பிடலாம்.

● ராதா ஸ்ரீதர், சென்னை – 78

●● *ஒன்பது நாட்களும் செய்யும் நைவேத்யம் (சுண்டல்) அந்தந்த கிழமைக்கு ஏற்ப அமைய வேண்டுமா? ஏன்?*

●● ஞாயிற்றுக் கிழமை – சூரியனுக்கு உகந்த நாள். கோதுமைப் பண்டங்களில் இனிப்பு செய்து ஏழைகளுக்குக் கொடுக்கவும்.

திங்கள் – நெல் பொரி உருண்டை

செவ்வாய் – துவரை சுண்டல் அல்லது வடை

புதன் – பயறு சுண்டல்

வியாழன் – கொத்துக்கடலை சுண்டல்

வெள்ளி – மொச்சை சுண்டல்

சனி – எள்ளு உருண்டை

ஞாயிறு – உளுந்து வடை

திங்கள் – கொள்ளு சுண்டல்.

நவக்கிரஹப் ப்ரீதிக்காக இவற்றைச் செய்யலாம்.

● எஸ். சங்கரி, புதுடெல்லி – 63

●● *நவராத்திரியின் போது கொலு வைத்துள்ள வீடுகளில் மிளகாய்ப் பொடி, மாவு இடிக்கக் கூடாது, தைக்கக் கூடாது என்று நியமம் இருந்து வருகிறது. இதன் நோக்கம்....?*

●● ஒன்பது நாட்களும் அம்பாளைத் துதித்து நோன்பு இருப்பதால் அந்த சமயம் காரம், கசப்பு, பண்டங்களின் நெடி கூடாது என்பதால் மிளகாய் இடிக்கக் கூடாது என்பர். அம்மனைப் புதுத் துணிகளால் அலங்கரித்திருப்பதால் வீட்டில் பழைய துணிகளைத் தைப்பது அபசாரம் என்று கருதப்படுகிறது. இடிப்பது அமைதியைக் குலைக்கும் என்பதும் தைப்பது கவனத்தைச் சிதறடிக்கும் என்பதும் கூட காரணங்களாய் இருக்கலாம்.

● அ. ஷண்முகசுந்தரம், சிட்லபாக்கம்

●● *குஜராத் மாநிலத்தில் நவராத்திரியின் முக்கிய அம்சமாக ஒரு புதிய, சிறு சட்டியை 'கர்ப' என்னும் பெயரில் நடு வீட்டில் வைத்து ஒன்பது நாட்களும் விசேஷ பூஜை செய்கிறார்கள் பெண்கள். இப் பெண்கள் சேர்ந்து ஆடும் நடனம் 'கர்ப நடனம்' என்றே அழைக்கப்படுகிறது. இதன் தாத்பர்யம் என்ன?*

●● ஏறத்தாழ இது போன்ற வழக்கம் கர்நாடகாவில் நாமஸ்தலாவிலும் உள்ளது. அவர்கள் ஒன்பது நாட்களுக்கு வழிபடும் 'கர்ப கும்பத்தை' பின்னால் நதியில் இடுகிறார்கள். குழந்தைப் பேறு வேண்டி இது செய்யப்படுகிறது.

குஜராத்தில் ஆடும் 'கர்ப நடனம்' காளி மாதாவை வழிபட்டுப் போற்றுகிறது. இந்த நடனத்தின் அசைவுகள் எல்லாமே வட்டமாகவும் சுழற்சியாகவும் இருக்கும்; வேகமான வளைவுகளில் பெண்கள் நகரும்போது பாவாடைகளும் சுழலும்... இந்த அசைவுகள் யாவும் சராசரத்தின் இடைவிடாத சுழற்சியின் குறியீடாகக் கருதப்படுகின்றன. இந்த அற்புத சுழற்சியினால்தான் வாழ்க்கை சீராக நடைபெறுகிறது என்று உணர்ந்து, அதற்காக அதன் பின்னுள்ள சக்தியை வணங்கி வழிபடும் அழகிய கலை வடிவம் இது.....

● அலமேலு ராமகிருஷ்ணன், சங்கர் நகர்

●● *கொலுப் படிகளை 5, 7, 9, என ஒற்றைப் படையில் வைப்பதன் ஐதீகம்*


அடுத்த இதழில்...

●● பி.டி.ஐ. டீ. வி. யின் பிரச்னைகள்

– சசிகுமார் பேட்டி

*என்ன....?*

●● ஒன்பது படிகள் - நவ சக்திகளைக் குறிக்கிறது. ஏழுபடிகள்- சப்த தீபங்களையும் சப்த மாதர்களையும், ஐந்து படிகள் - ஆதி பராசக்தியின் பஞ்ச க்ருத்யங்களையும் குறிக்கின்றன.

(க்ருத்யங்கள் - ஆக்கல், அழித்தல், காத்தல், மாயையால் மறைத்தல், அருள் பாலித்தல் என ஐந்து - நடராஜருக்கு உரியவை எனினும் பராசக்திக்கும் இவற்றைச் சொல்லலாம்.)

● எல். ராமநாதன், தாராபுரம்

●● *கொலுப் படிகளில் கடவுள் பொம்மைகளுடன் அரசியல் தலைவர்களின் பொம்மைகளையும் வைக்கிறார்களே.... (நேரு, காமராஜ், அண்ணா, எம்.ஜி.ஆர், ராஜீவ்....) இது சரியா?*

●● இதில் தவறு ஏதும் இல்லை. கோவில் கோபுரங்களில் கூட, அதனை அமைக்க நன்கொடை வழங்கியவர்களின் சிலையை வைப்பதுண்டு. எனவே மக்கள் தாங்கள் விரும்பும் தலைவர்களின் பொம்மைகளை வைக்கலாம்.

● ஏ. விஜய், டெல்லி - 95

●● *எல்லார் வீட்டுக் கொலுவிலும் செட்டியார் பொம்மை என ஒன்று கட்டாயம் வைப்பது ஏன்?*

●● செட்டியார் தம்பதிகளின் முன் சொப்பு வைத்து பலசரக்குக் கடை போல அரிசி, பருப்பு இட்டு வைக்க வேண்டும். நமது உடலில் உள்ள பல சரக்குகளையும் முக்கியமாகக் கடவுள் பக்தியைத் - தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்று உணர்த்தவே இதைச் செய்கிறோம்.

● பி. ராமகிருஷ்ணன், மேலகிருஷ்ணன் புதூர்

●● *ஆயுத பூஜையின் போது நோட்டு, பேனா போன்றவற்றைக் கடவுள் முன் வைத்து வழிபடுவது ஏன்...?*

●● மகாபாரத காலத்தில் பாண்டவர்கள் (அக்ஞாத வாசத்துக்காக) வனத்திற்குச் சென்ற போது தங்கள் ஆயுதங்களை ஒரு வன்னி மரப் பொந்தில் வைத்து விட்டுப் போனார்கள். நாட்டிற்குத் திரும்பிய போது விஜயன் (அர்ஜுனன்) அந்த ஆயுதங்களைப் பூஜித்து எடுத்துக் கொண்டான். விஜயன் பூஜித்ததன் நினைவாக விஜயதசமி என இன்று நாம் கொண்டாடுகிறோம். பஞ்ச பாண்டவர்கள் அக்ஞாதவாசம் முடிந்து ஒரு புதிய அத்தியாயத்தைத் துவக்கி வெற்றி கண்டது போல் நாமும் ஆயுத பூஜையன்று நம் தொழிலுக்குரிய ஆயுதங்களை வணங்கி விட்டு, விஜயதசமி அன்று புதிய முயற்சிகளைத் தொடங்குகிறோம்.

● ஏ. ரவி சங்கர், புதுடெல்லி - 19

●● *கொலு முடியும் நாளில், இரவு பொம்மைகளைப் படுக்க வைப்பது ஏன்?*

●● பிள்ளையார் பூஜை செய்த மறுநாள் 'புனர் பூஜை' என ஒன்று செய்து, பிள்ளையாரை வடக்கு நோக்கி நகர்த்தி வைப்பது உண்டு. ஒரு நாள் பொழுது குடை விரித்து, நைவேத்யம், உபசாரணைகள் செய்யும் கடவுளைப் பெயர்த்தெடுக்கும் முன்னர் செய்யும் உபசாரமான பாவனை இது. இதே போல் தான் ஒன்பது நாட்களுக்குப் பாடி, படைத்து, மகிழும் பொம்மைகளைப் படுக்க வைப்பதும்... விடை கொடுக்கும் பாவனை.

● ஆர். ராஜலட்சுமி, கரூர்.

●● *நவராத்திரி எப்போது முதல் கொண்டாடப்பட்டு வருகிறது? புராண, இலக்கியங்களில் அதைப் பற்றிய ஆதாரங்கள் உண்டா?*

●● ஏ.கே. பத்மாவதி கேட்டுள்ள கேள்வியையும் அதற்கான பதிலையும் பாருங்கள். மேலும் நவராத்திரி விரதம் பற்றி காரணாகமம், உபதேச காண்டம், நவராத்திரி விரதப் படலத்தில் வருகிறது:

*சித்திரை பூரணைப் பக்கம் சுக்கிரவாரம்*
*பயில் வார் தீமை தீர்ந்து*
*முத்திதரும் ஐப்பசி உத்திரத்தோடு*
*மாநவமி*
*இவை மூன்றும் பர்சைத்*
*தந்தை மொழி உமை விரதம்....*

இதன் பொருள் :

சித்திரை மாதத்துப் பூர்வபட்ச சுக்கிர வாரமும், அனுஷ்டிப்போரின் பாவத்தைப் போக்கி, வீடு பேற்றை அளிக்கும் ஐப்பசி மாத உத்திர நட்சத்திரமும், மகா நவமியாகிய மூன்றுமே பசிய நிறமும், கிளி போன்ற மொழியும் உடைய உமாதேவியாருக்கு உகந்த விரதங்கள். மாநவமி என்பது நவராத்திரியைத் தான் குறிக்கிறது.

தொகுப்பு : சாருகேசி
அட்டையில் : ஜின்னி
வண்ணப்படம், படங்கள் : யோகா
நன்றி : காதி கிராமோத்யோக் பவன் பொம்மைக் கண்காட்சி.

●● **மலைவாழைக்கு மறுவாழ்வு**
**– ஒரு விவசாய சாதனை ரிப்போர்ட்**

**எம்சிஐ**



# நிதி நிர்வாக அனுபவம் உள்ளவர்கள் தந்திடும் தனிப்பட்ட சேவை

உங்கள் வாழ்க்கை வளம்பெற, தொழில்முன்னேற்றம் அடைய, தவணை முறையில் வாங்கிட பல திட்டங்கள். உங்கள் சேமிப்பு பாதுகாப்புடன் விரைவில் வளர்ந்திட பல புதிய திட்டங்கள்.

**வைப்புநிதி திட்டம் • மாதவருமான திட்டம் • மாதாமாதம் வட்டிக்கு வட்டி சேர்த்து வளர்ந்திடும் திட்டம் • குறைந்த தொகை டெபாசிட் செய்து கூடுதல் தொகை தரும் திட்டம்.**

**லீசிங் — ஹையர் பர்ச்சேஸ் — டெபாசிட் திட்டங்கள்**

**எம்சிஐ**

**மதராஸ் கிரடிட் அண்ட் இன்வெஸ்ட்மெண்ட் லிமிடெட்**

பதிவு தலைமை அலுவலகம்: 65, கிரீம்ஸ் சாலை, சென்னை-600 006.
டெலிபோன்: 8252311, 478925.

கிளைகள்:

**அண்ணா நகர்:** F22/1, அண்ணா நகர் கிழக்கு, சென்னை - 600 102.

**காரைக்குடி** — 24, மஹர் நோன்பு அக்ரஹாரம் - 623 001.
டெலிபோன்: 2545

**மதுரை** — 183/A-1, வடக்கு வெளி வீதி - 625 001.

**கொச்சின்** — வல்ல நாட் சென்டர் - 682 018. டெலிபோன்: 365880.

2604

# காமிரா தம்பு தூக்கிப்போட்ட வெடிகுண்டு!

**எம்.** ஜி. ஆரிடம் மேலும் மனம் திறந்து நான் பேசினேன் : "அன்று என் உயர்வைக் கண்டு பொறாமைப் பட்டவர்கள், இன்று என் தாழ்வைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருப்பார்கள்! உங்களுடன் இணைந்தால் நான் மறுபடி மேலே வந்து விடுவேனே என்ற வீண்கவலை அவர்களுக்கு இருக்கும். அதனால் என்னைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் உங்களிடம் கூறி நமக்குள்ளே பிளவுகள் ஏற்படுத்த அவர்கள் முயற்சி செய்யலாம். ஆகவே, என் கோரிக்கை இதுதான் : என்னைப் பற்றி யார் என்ன உங்களிடம் சொன்னாலும் அதை அப்படியே நம்பி விடாதீர்கள். என்னிடமே நேரடியாக விளக்கம் கேளுங்கள்...."

எம்.ஜி.ஆர். நெகிழ்ந்து போனார் என்பது அவர் முகபாவத்திலேயே தெரிந்தது. அதை மறைத்துக் கொள்ள விரும்புகிறவர் போல் எனக்கு ஒரு இட்டிலி எடுத்து வைத்தார். பிறகு நிதானமாகப் பேசினார் :

"நீங்க அதைப் பற்றியெல்லாம் துளியும் கவலைப்பட வேண்டாம், ஸ்ரீதர். உங்களுக்கு எத்தனை நாள் கால்ஷீட் வேணும்னாலும் முன்னுரிமை கொடுத்து தேதி ஒதுக்கித் தருகிறேன். எப்படியும் மூன்று மாதங்களுக்குள் உங்க படத்தை முடித்துக் கொடுக்கிறேன். கவலையை விடுங்க, மேலே ஆக வேண்டியதைக் கவனியுங்க."

காலை உணவு முடித்து எழுந்தோம். விடைபெற முற்பட்டவனை "ஒரு நிமிஷம் உட்காருங்க" என்று வரவேற்பு அறையில் அமரச் செய்தார் எம்.ஜி.ஆர். தமது உதவியாளரை அழைத்து மிருதுவான குரலில் ஒரு கடிதம் தயாரிக்கச் சொல்லி, அதில் தம்முடைய கையெழுத்தைப் பதித்து என்னிடம் தந்தார். அதைப் படித்துப் பார்த்த நான், மெய்சிலிர்த்துப் போனேன். அதில் எம்.ஜி.ஆர். என்ன எழுதியிருந்தார் தெரியுமா?

"நான் ஸ்ரீதருக்கு ஒரு படம் நடித்துக் கொடுக்க ஒப்புதலளிக்கிறேன். அவர் படத்துக்கு முன்னுரிமை தந்து மூன்று மாதங்களுக்குள் முடித்துத் தரச் சம்மதிக்கிறேன்."

"நீங்க சொன்னா போதாதா? எழுதிக் கையெழுத்திட்டுத் தர வேண்டுமா?" என்று நான் கம்மிய குரலில் உணர்ச்சிவசப்பட்டுக் கேட்டேன்.

எம்.ஜி.ஆர். தமது வழக்கமான வசீகரப் புன்னகையுடன் விளக்கினார் :

"ஸ்ரீதர்! இது உனக்காக இல்லை! ஃபைனான்ஷியர்களுக்காக! இது பெரிய பட்ஜெட் படம். முழு பணமும் உங்களிடம் இருக்குமா சந்தேகம். பணப் பற்றாக்குறையால் நீங்க சிரமப்படக் கூடாது. இந்தக் கடிதத்தைக் காட்டினால் எந்த ஃபைனான்ஷியரும் உங்களுக்குப் பணம் உதவ உடனே முன்வருவார்!"

இந்த விளக்கத்தைக் கேட்டதும் நான் பிரமித்து விட்டேன். என் கண்களில் நீர் நிறைவிட்டது.

'இவர் நம் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டாலே போதும்; நம் பிரச்னை தீர்ந்து விடும் என்று வந்த இடத்தில், இவர் அதற்கும் மேலே போய் நான் எதிர்பாராத கோணங்களிலெல்லாம் சிந்தித்து உதவ முன்வருகிறாரே' என்று மனம் உருகினேன். எம்.ஜி.ஆரின் கொடை உள்ளம் பலரும் அறிந்ததே. அதிலும் திரைப்படத் துறையைச் சேர்ந்த ஒருவர் சிரமப்படுவதைக் காணப் பொறாமல் எப்படி உதவ ஓடோடி வந்தார் என்பதற்கு இது ஓர் உதாரணம். அதே நேரத்தில் இது ஒரு நன்கொடை போலவும் ஆகி விடாமல், பிஸினஸாகவே செய்தார். நான் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து நிற்க வழிவகுத்தார்.

**எம்.** ஜி.ஆருடைய கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்த ஆடிட்டர் தான் சித்ராலயாவுக்கும் ஆடிட்டர். அவரது மகன் என். சி. சுந்தரராஜன் எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர். அவரிடம் எம்.ஜி. ஆரின் கடிதத்தைக் காட்டி யோசனை கேட்டேன்.

அவர் உடனே, "கிரஸெண்ட் மூவீஸ் குரூப் என்ற நிறுவனத்தை அணுகலாம். அவர்கள் பெரிய அளவில் சினிமாவுக்கு ஃபைனான்ஸ் செய்பவர்கள். விநியோகஸ்தர்களும் கூட. நான்தான் அவர்களுக்கு ஆடிட்டர். அதனால் அவர்களை எனக்கு நன்கு தெரியும்" என்றார்.

அடுத்த நாளே, கிரஸெண்ட் மூவீஸ் பாகஸ்தர் யாசின் எனது வீட்டுக்கு வந்து விட்டார் - சுந்தர ராஜனுடன். விவரமறிந்ததும் அவர் ரொம்ப ஆர்வமாய்ப் பேசினார் : "வழக்கமாக இதர பங்குதாரர்களையும் கலந்து ஆலோசித்த பிறகுதான் முடிவெடுப்

டைரக்டர் ஸ்ரீதர்



● உரிமைக் குரல் : ஒரு காட்சி

பேன். ஆனால் இந்த விஷயத்தில் இப்பவே 'ஓகே' சொல்கிறேன். ஏனென்றால், என் பாகஸ்தர்கள் ஆட்சேபணை ஏதும் சொல்லவே மாட்டார்கள் என்பது நிச்சயம்!''

எம்.ஜி.ஆரின் செல்வாக்கு என்னை மலைக்க வைப்பதாக இருந்தது. மறுநாளே யாசின் திரும்பவும் வந்தார்! ''உங்களுக்கு ஃபைனான்ஸ் செய்வதுடன் நிறுத்திக் கொள்ள நாங்கள் விரும்பவில்லை. திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல் பட்டு, கோயமுத்தூர் ஆகிய ஏரியாக்களில் பட விநியோகத்தையும் ஏற்கத் தயாராக இருக்கிறோம். அதற்குரிய அட்வான்ஸ் பணத்தையும் இப்போதே நீங்கள் வாங்கிக் கொள்ளலாம்!'' என்றார். நான் திக்குமுக் காடிப் போனேன்!

இம்மாதிரி எதிர்பாராதவிதமாக அட்வான்ஸூம் கடனும் கிடைக்க, உடனடியாக வேலை தொடங்கினேன். ''உரிமைக் குரல்'' படப்பிடிப்பு - பூஜைக்கான ஏற்பாடுகள் பிரமாதமாக நடந்தன. சினிமாத் துறையில் இருந்த அத்தனை முக்கியஸ்தர்களும் திரளாக வந்திருந்து என்னை வாழ்த்தி கௌரவித்தார்கள். சிவாஜிக்கும் அவர் சகோதரர் ஷண்முகத்துக்கும் நான் அழைப்பு அனுப்பத் தவறவில்லை. வேலைப் பளு காரணமாக சிவாஜியால் வர முடியாது போனாலும் தமது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார். எங்களிடையே அன்பும் நட்பும் என்றும் எக் காரணத்தாலும் குறையவில்லை என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

சினிமா உலகில் பல விதமான கமெண்டுகள் எழுந்தன. ''சிவாஜியை விட்டு விட்டு ஸ்ரீதர் எம்.ஜி.ஆரிடம் ஏன் போகிறான்?'' ''எம்.ஜி. ஆருக்கு ஆக்ஷன் படம் தான் சரிப்பட்டு வரும்; ஸ்ரீதருக்கோ அழுத்தமான கதையும் சென்டிமெண்டும் இல்லாமல் படம் எடுக்கத் தெரியாது; படம் எப்படி உருப்படும்?'' ''இது ஸ்ரீதர் படமாகவும் இல்லாமல், எம்.ஜி.ஆர். படமாகவும் இல்லாமல் இரண்டுங்கெட்டானாய் இருக்கப்போகிறது; ஸ்ரீதர் இன்னொரு அடிவாங்கப் போகிறார், நிச்சயம்!''

நான் விரும்பாவிட்டாலும் என் காதுகளுக்கு எட்டிய இதுபோன்ற கமெண்டுகளை நான் சிறிதும் லட்சியம் பண்ணாமல் ஒதுக்கித் தள்ளினேன். காரணம், என் கஷ்டத்தை எம்.ஜி.ஆர். உதவியோடு நீக்க முடியாது என்றால் வேறு யாருடைய உதவியும் பயன்படாது என்பதை நான் நன்றாக உணர்ந்திருந்ததுதான். அதனால் கடமையில் கண்ணாக இருந்தேன்.

எம்.ஜி.ஆரின் கால்ஷீட்டுக்கு ஏற்ப அனுசரணையாக இயங்கக்கூடிய ஒருவரை ஹீரோயினாகப் போடுவதைத்தான் எம்.ஜி. ஆர். விரும்புவார் என்பதால் லதாவை ''உரிமைக் குரல்'' படத்தின் கதாநாயகியாக்கினேன். அவர் அப்போது நிறையப் படங்களில் எம்.ஜி.ஆருடன் நடித்துக் கொண்டிருந்தார்.

பொதுவாகவே எம்.ஜி.ஆர். படத்தில் நடிக்க ஒப்புக் கொள்ளும் சக நடிகர்கள் தங்கள் வழக்கமான ரேட்டை விட அதிகம் கேட்பார்கள். அப்படி அவர்கள் கேட்பதில் ஒரு நியாயமும் உண்டு. அதாவது எம்.ஜி. ஆர். திடீர் திடீரென்று கால்ஷீட்டைக் கேன்சல் செய்து விடுவார். அதனால் ஷூட்டிங் ரத்தாகி, சக நடிக நடிகையரின் கால்ஷீட் தேதிகள் வீணாகிவிடும். இந்தப் படத்தில் அப்படி நேர வாய்ப்பு இல்லை என்றாலும் வழக்கமான ரேட்டை விட அதிகமாகவே இதர நடிக நடிகையருக்குப் பேசி முடித்தேன்.

காமிராமேனாக பாலகிருஷ்ணனை ஒப்பந்தம் செய்தேன். இப்போது விக படங்களுக்கு நிறையப் பணிபுரியும் அதே பாலகிருஷ்ணன்தான். ஆனால் அவர் ஏற்கெனவே ஒப்புக் கொண்டிருந்த ஒரு படத்தின் இறுதிக் காட்சிகளை எடுக்க வேண்டியிருந்ததால் இடைக்கால ஏற்பாடாகச் சில நாட்களுக்குத் தம்புவை அனுப்பி வைத்தார். தம்பு என்னைச் சந்தித்த போது ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார் : ''சார், எம்.ஜி. ஆருக்கு நேர் கோணத்தில் நிறைய 'குளோஸ் அப்' காட்சிகள் எடுத்தால்தான் பிடிக்கும். டைரக்டர் இஷ்டப்படி 'டாப் ஆங்கிள்' 'லோ ஆங்கிள்' என்பதையெல்லாம் விரும்ப மாட்டார். நீங்களோ, 'லோ ஆங்கிள் ஸ்பெஷலிஸ்ட்'! இதனால் பிரச்னை வராதா?''

அதுவரை இந்த விஷயம் எனக்குத் தெரியாதாகையால் திகைத்துப் போனேன்.

படம் உதவி : ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்

# இல்லத்தரசிகளுக்கு ஒரு நற்செய்தி!

சுவையான சமையலுக்கு
தரமான எண்ணெய்
நியாயமான விலைக்கு!

சுவையான சமையலுக்கு
'மேஜர்' பிராண்ட் டபுள்
ரிபைண்ட் ஆயிலை கேட்டு
வாங்குங்கள். பலகாரங்களின் ருசி
பன்மடங்கு கூட்ட 'காமதேனு' வனஸ்பதி.
நன்கு ருசி உள்ள சமையலுக்கு காரல் இல்லாத
உடல்நலம் பேண கொழுப்புச்சத்து அகற்றப்பட்ட
'அக்மார்க்' நல்லெண்ணெய் உபயோகியுங்கள்.
சுத்தமான தேங்காய் எண்ணையும் கிடைக்கும்.
மொத்தமாகவும் சில்லறையாகவும்
வாங்கிட சிறந்த இடம்:

SKOD

YOGA SAVITH

**ஸ்ரீ கிருஷ்ணா ஆயில் டெப்போ**
6, தெற்கு மாட வீதி, மைலாப்பூர்,
சென்னை 600 004. போன்: 73861

**வீட்டு டெலிவரி வசதியும் உண்டு**

## அவசியமான, அற்புதமான புத்தகங்கள்

| | ரூ. பை |
|---|---|
| **என்.வி. அனந்தாச்சாரி எம். ஏ., பி.எல்.** | |
| கணக்குப் பதிவியலும் வருமானக் கணிப்பும் | 25.00 |
| தமிழில் கணக்கு வைத்துக் கொள்ளும் முறைகள், கணக்கு முடிக்கும் வழிகள் வருமான வரி விதி அட்டவணை அனைத்தும் அடங்கியது. | |
| வருமான வரிச்சட்டம் | 50.00 |
| சொத்துவரி, கொடைவரி | 30.00 |
| **தெய்வீக சுற்றுலா, வடநாடு செல்வோருக்கு பக்திப் பரவசமூட்டும் நூல்** | |
| 12 ஜோதிலிங்கங்களின் வரலாறு | 30.00 |
| ஈரோடு ந. விசுவநாதன் எழுதியது | |
| ஒரு இந்து அறிந்து கொள்ள வேண்டியவை | 30.00 |
| விநாயகர் புராணம் | 30.00 |
| கந்த புராணம் | 25.00 |
| திருவிளையாடல் புராணக் கதைகள் | 30.00 |
| [illegible] | 12.00 |
| **புகழ்பெற்ற நாவலாசிரியை ரமணி சந்திரன் எழுதிய** | |
| இனிவரும் உதயம் | 25.00 |
| நாள் நல்ல நாள் | 30.00 |
| வைரமலர் | 40.00 |
| ராம் நிஷா | 35.00 |
| பொழுது விடிகிற வேளையிலே | 30.00 |
| வெண்மையில் எத்தனை நிறங்கள் | 35.00 |
| காதலெனும் சோலையிலே | 35.00 |
| [illegible] ஒரு மாது | 30.00 |
| விடியலைத் தேடும் பூபாளம் | 22.00 |
| கண்ணே கண்மணியே | 22.00 |
| மானே! மானே! மானே! | 25.00 |
| ஒரு மலர் | 25.00 |
| பூங்காற்று | 22.00 |
| என் கண்ணில் பாவையன்றோ | 25.00 |
| [illegible] | 24.00 |
| தொடு கோடுகள் | 30.00 |
| மெல்லத் திறந்தது கதவு | 15.00 |
| ஒரு கல்யாணத்தின் கதை | 15.00 |
| மறுமதி | 15.00 |
| நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் | 14.00 |
| என் உயிரே கண்ணம்மா | 15.00 |
| [illegible] | 12.00 |
| [illegible] | 12.00 |
| இது ஓர் உதயம் | 10.00 |
| தாரகை ஓசையிலே | 15.00 |
| மாவண்ணா | 20.00 |
| அவளும் அவனும் | 20.00 |

மற்றும் புகழ்பெற்ற நாவலாசிரியர்கள் பட்டுக்கோட்டை பிரபாகர், ராஜேஷ்குமார், ராஜேந்திரகுமார், அமுதா கணேசன் நாவல்களுக்கு எழுதுங்கள்.

தேவைக்கு V.P.P. மூலம் பெறலாம்.

**அருணோதயம்**
போன் : 867553
3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

# ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

கல்கி, அக்டோபர் 1 இதழ்

### நீனி கேட்கலாமா?




**அ**மெரிக்க அபிப்பிராயம் :- ''இது என்ன வைத்தியம்? அந்த நல்ல குதிரையைக் கட்டிப் போட்டுவிட்டு மண் குதிரையைப் பிடித்துத் தள்ளுகிறீர்களே!''

பிரதம மந்திரி சர்ச்சில் :- ''அது ரொம்பப் பொல்லாத குதிரை! பசிக்குத் நீனி கேட்கிறது!''

### மகிழ்கிறோம்

**தெ**ன்னிந்தியாவில் பல கோவில்களில் உயிர்ப் பலி கொடுப்பது வெகு நாளைய வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. பிரசாரத்தின் மூலம் மக்கள் மனதை மாற்றி இந்தக் கொடிய வழக்கத்தை நிறுத்தி விடுவதென்பது எளிதான காரியமல்ல. இந்தக் காரியத்தைத் தான் ஜீவரக்ஷக சபையார் சாதித்திருக்கிறார்கள். இவர்கள் முயற்சியால் கோவை, திருப்பாதிரிப்புலியூர், பரமக்குடி, பெரியபாளையம் முதலிய பல கோவில்களிலும் உயிர்ப்பலி நின்றிருப்பதைக் கேட்டு மகிழ்வெய்துகிறோம்.

- என்ன சேதி



### அக்டோபர் 2உ

**வ**ரும் அக்டோபர் 2உ காந்தியடிகளின் 74-வது பிறந்த தினம் வருகிறது. ''உலக சிரேஷ்டர்'' என்று போற்றப்படும் மகான் இந்த ஏழை நாட்டில் பிறந்ததின் காரணமாக இன்னும் எத்தனை பிறந்த தினங்களைத்தான் சிறைச்சாலையில் கொண்டாட வேண்டுமோ தெரியவில்லை.

### யார்? எவர்?

**கீ**ழே காணப்படும் இரண்டு படங்களும் பள்ளிக்கூட மாணவர் ஒருவரால் எழுதப்பட்டவை. படத்தில் உலகப் பிரசித்தி பெற்ற பிரமுகர்களின் முகங்களைக் காணலாம். அவர்கள் தங்களுக்குள் உடைகளை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். யார் யாருடைய உடையில் இருக்கிறார்கள் என்று கண்டு பிடித்தால் புத்தகப் பரிசு!

- குழந்தைகளுக்குப் பரிசுத் திட்டம்.



### ஆனந்தக்களிப்பு!

பல பல என்னுங் காலை
　　பாடும் புள்ளோசை போலும்
பாற்கடல் உள்ளம் விம்மி
　　ஆர்க்கும் கர்ஜனை போலும்.

**பூ**ர்வி கல்யாணி ராகத்தில் ''ஜங்கார சுருதி செய்குவாய்!'' என்று ஆரம்பிக்கும் கீர்த்தனத்தில், சரணத்தின் முதல் இரண்டு அடிகள் மேற்கண்டவை.



இந்த வரிகளை வைத்துக் கொண்டு ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி சென்ற 20-ந் தேதி சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த கச்சேரியில் திரவல்

செய்தார். அச்சமயம் பல பல புள்ளினங்களின் இனிய குரல்கள் ஒலிப்பதையும், கடலலைகள் ஆர்த்து முழங்குவதையும் சபையோர் செவி நிறையக் கேட்டு அநுபவித்தார்கள். எம்.எஸ்.ஸின் கான முழக்கத்துடன் சபையோரின் 'ஹா ஹா' கார முழக்கமும், கரகோஷ முழக்கமும் சேர்ந்து கொண்டன. ஒரே ஆனந்தக் களிப்பாயிருந்தது.

- ஆடல்பாடல் - ''கர்நாடகம்''

## கதறி, கெஞ்சி, கண்ணீர் பெருக்கி.....!



சென்னை ரேடியோவில் ஸ்ரீ தண்டபாணி தேசிகர் பாடினார்; அற்புதமாய்ப் பாடினார். ''எப்போ காண்பேனோ - ஏகாந்தமாய்'' என்று ரத்னாம்பரி ராகத்தில் கதறினார். கரகரப்பிரியாவில் ''காதலாகிக் கசிந்து கண்ணீர்'' பெருக்கினார். ''தூது நீ சொல்லிவாராய்'' என்று யாரோ ஒரு பெண்ணைப் பார்த்து மணிரங்கு ராகத்தில் மனமிரங்கக் கெஞ்சினார். கச்சேரி முழுவதும் இசை வெள்ளமாகவும், உணர்ச்சி வெள்ளமாகவும் பெருகிக்கொண்டிருந்தது.

ஆடல் பாடல் - ''கர்நாடகம்''

## ''டி.எஸ்.பாலையா - வில்லன்



முதல்தரப் போக்கிரி என்று ஒருவர் பெயர் வாங்குவது சந்தோஷிக்கத் தகுந்த விஷயமல்ல; ஆனால் சினிமா உலகில் மட்டும் மேற்படி பெயரை அடைவது கிடைக்கக்கூடாத பாக்கியமாகும். கதாநாயகன், கதாநாயகியாகக் கூட ஒருவர் நடித்துப் பெயர் வாங்கிவிடலாம். ஆனால் போக்கிரியாக நடித்துப் பெயர் வாங்குவதற்கு அதற்குத் தகுந்த முக வெட்டு, மிடுக்குப் போக்கு, துடுக்குப் பேச்சு, எல்லாம் இருக்க வேண்டும். இந்த வேஷத்துக்குத் தகுந்த ஒவ்வொரு அம்சமும் டி.எஸ். பாலையாவுக்கு இருப்பது விசேஷமாகும். அமெரிக்க பேஸில் ராத்போனுக்கும், ஹிந்தி சந்திரமோகனுக்கும் நிகராக ''தமிழ் நாட்டில் இதோ நான் இருக்கிறேன்'' என்று அவர் நடித்துள்ள ஒவ்வொரு படத்திலும் ஞாபகப் படுத்துகிறார் பாலையா. கடைசியாக அவர் நடித்திருக்கும் ''மனோன்மணி''யிலும் மேற்படி நற்பெயரை நிலை நாட்டுகிறாராம்!

- பட விளக்கம்

---


## அதிர்ஷ்டம்தான்!

மணி : அம்மா! பெரிய குரங்கு வந்திருக்கு.

தாய் : வந்தால் வரட்டும்! ஆஞ்சநேயரைப் பார்த்தால் அதிர்ஷ்டம்.

மணி : அந்த ஆஞ்சநேயருக்குக் கூட அதிர்ஷ்டம்தான். நீ உன்னே வைத்திருந்த மாம்பழத்தை எடுத்துக் கொண்டு போய்விட்டார்!

- எஸ்.வி. காளிமுத்து.
(காலக்ஷேபம்)





# டேவிட் அங்கிள்

'ஒரே ஒரு கிராமத்தில் ஒரே ஒரு அயோக்கியப் பணக்காரர் இருந்தார்' என்கிற வழக்கமான தமிழ் பாணியிலிருந்து மாறி, 'ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு அயோக்கிய அரசியல்வாதி இருந்தார்' என்கிற அண்மைக்கால ஆந்திரப் பாணியில் அமைந்துள்ள கதை.

அப்புறம் என்ன?

கொலை. கொலை. மேலும் கொலை. (பிஸ்கட் விளம்பரக்காரர் மன்னிப்பாராக.)

சாட்சியங்களை வைத்துக் கொண்டே அவர் வரிசையாகக் கொலைகளைச் செய்வதும், அவர் மீது எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் அவர் அமைச்சர் ஆகி விடுவதும் நம்ப முடியாத கற்பனை என்றால் -

மகளுக்கு மாப்பிள்ளை தேடி அமெரிக்காவுக்குப் போகும் அந்த அமைச்சர் (அதென்ன சார் அப்படி? தமிழ் நாட்டில் அவர் மகளுக்கேற்ற மாப்பிள்ளைகளேவா இல்லை?) திரும்பி வந்து வீட்டினுள் நுழையும் போது டெலிவிஷனில், ஒரு பத்திரிகையாளரை அவர் கொலை செய்தது திருபணமாகி விட்டதால் அமைச்சரவையிலிருந்து அவர் நீக்கப்பட்டு விட்டதாகச் செய்தி வாசிப்பவர் அறிவிக்க, அதன் பின்னரும் அவர் சுதந்திரமாக நடமாடி, தன்னை ஓர் அமைச்சர் எனக் கூறிக் கொண்டு உச்சகட்டக் கொலையைச் செய்யத் தயாராவது நம்ப முடியாத உச்சகட்டப் பூச்சுற்றல்.

ஆடிப் பாடி, அடித்து உதைத்து, கொடுத்த பணியை உற்சாகமாகச் செய்திருப்பவர் ஆனந்த்ராஜ். அவருக்கு உற்ற துணை கவுண்டமணி. கூடவே, சோகத்துக்கென்று கமலா காமேஷ். எல்லாமே முறைப்படி ஃபார்முலாவிலிருந்து சிறிதும் பிறழாமல். தன்னுடைய சிறு வயதில் தன் பெற்றோரைக் கொலை செய்து, அதன்பின் தான் பட்ட அத்தனை கஷ்டங்களுக்கும் அந்த அரசியல்வாதிதான் காரணம் என்பதை முடிவு கட்டத்தில் திடுமெனத் தெரிந்து கொண்டு, உடன் பொங்கி யெழுந்து அவரை ஆனந்த்ராஜ் தீர்த்துக் கட்டுவது உட்பட.

இதமளிப்பவர்கள் மூவர்.

இசையமைப்பாளர், காமெராவைக் கையாண்டிருப்பவர், சில்க் ஸ்மிதா.

– சி. ஆர். கே.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

வண்ணத்தின் கனவுகள்



விருப்பமான வண்ணத்தில் புடவையை வாங்கிவிட்டு அதற்கு பொருத்தம ன ப்ளவுஸ் துணியைத் தேடி அலையும் வழக்கத்திற்கு இன்றுடன் குட்பை, கேம்ப்ரிக், ஷிபான், ஜேபைடு ஆகிய ரகங்களில் மென்மையான வீணா ப்ளவுஸ் துணிகள் அதிசயிக்கும் வண்ணங்களில் இப்பொழுது கிடைக்கின்றன. மற்றும் எம்ப்ராய்டரி துணிகள் கூடுதலான சிறப்பம்சம் வாய்ந்தவை. வீணா ப்ளவுஸ் துணிகளின் வசீகரத்தில் மனதைப் பறிகொடுத்து அவற்றை வாங்கிவிட்டு அவற்றிற்கேற்ற வண்ணங்களில் நீங்கள் புடவைகளைத் தேடும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை.

வீணா
ப்ளவுஸ் துணிகள்

**VEENA TEXTILES LIMITED**

**(A unit of SSM Group)**

Media Man/VT/Jul/92

தங்கம் போல் மனிதர் வேண்டும்
வைரம் போல் உள்ளம் வேண்டும்
தீபாவளி சிறக்க வேண்டும்
திசையெல்லாம் செழிக்க வேண்டும்

— கவியரசு வைரமுத்து



பாலு ஜுவல்லர்ஸ்

72, உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை-17 போன்: 441812, 441741.

21%

WE ACCEPT
FIXED DEPOSITS
AT 21% INTEREST P.A.
INTEREST PAID: MONTHLY
MINIMUM AMOUNT: RS. 5000
PERIOD OF DEPOSIT: ONE YEAR